# ஆடும் பெருமானும் அளந்த நெடுமாலும்



தொ. மு. பாஸ்கர தொண்டைமான்

# ஆடும் பெருமானும்
# அளந்த நெடுமாலும்

கலைமணி
தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

கலைஞன் பதிப்பகம்
10 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை - 600 017.

**Rs.35.00**

AADUM PERUMANUM ALANDHA NEDUMALUM

By
**Tho.Mu. BASKARA THONDAIMAN**

First Edition 1999

Published by
KALAIGNAAN PATHIPAGAM
10 Kannadhasan Salai
T. Nagar Chennai - 600 017

Typeset at
**Skill Computers**
Chennai - 600 018

Printed at
**Nataraj Offset Press**
Chennai - 600 005.

# முன்னுரை

வணக்கம். ''ஆடும் பெருமானும் அளந்த நெடுமாலும்'' என்று இப்போது உங்கள் கையில் இருக்கும் இந்த நூலின் ஆசிரியர், திரு. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகவே, தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமாகி விட்டவர். கம்பனைப் பற்றியும், கலைகளைப் பற்றியும், கல்லால் இழைத்த காவியங்களான கோயில்களைப் பற்றியும் அவர் எழுதியுள்ள நூல்களைப் படித்து இன்பம் அடைந்தவர்கள் தமிழர்கள். ''வேங்கடம் முதல் குமரி வரை' என்ற தொகுப்புக்களின் மூலமாகவும், 'வேங்கடத்துக்கு அப்பால்' என்ற வடநாட்டுத் தலங்கள் பற்றிய நூல் மூலமாகவும் அவரை இனம் கண்டு வைத்திருக்கிறார்கள் பக்தர்கள், ஆன்மிகச் செல்வர்கள், கலாரசிகர்கள். ஆகவே அவர்களுக்கு, எங்கள் தந்தையார், திரு. பாஸ்கரத் தொண்டைமானைப் பற்றிப் புதிதாக எதுவும் சொல்லவேண்டிய அவசியமில்லை -

''ஆடும் பெருமானும் அளந்த நெடுமாலும்,'' அவ்வப்போது அவர்கள் எழுதியுள்ள கட்டுரைகள் தாம், என்றாலும் அவர்கள் மறைந்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆன பின்னர் தான் நூல் வடிவம் பெறுகின்றது. இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகள் நான் ஏற்கெனவே படித்தவைதாம். படித்து இன்புற்றவைதாம் - என்றாலும் அச்சுக்குக் கொடுப்பதற்கு முன்னர் மீண்டும் அவற்றை நான் படித்தபோது அத்தனையும் எனக்குப் புதிய கட்டுரைகள் போலவே இனிப்பாய் இருந்தன. நவில் தொறும் நூல் நயம் போலும் என்பார்களே, அப்படி இருந்தது. ஆடும் பெருமானையும், அளந்த நெடுமாலையும் எத்தனை கோயில்களில் பார்த்திருக்கிறோம். ஆனால் அந்த இரண்டு திருமூர்த்தங்களுக்குமிடையே இப்படி ஓர் அபூர்வமான, அற்புதமான ஒற்றுமை இருப்பதை எண்ணிப் பார்க்கத்

தோன்றவில்லையே. அனுமனது விஸ்வரூபம்; கோதையின் அழகிய கோலம், இரண்டு கட்டுரைகளும் என்னை மிகவும் கவர்ந்தவை. கோதையின் அழகிய கோலத்தை காணத்தான் எப்படியெல்லாம் அலைந்திருக்கிறார்கள் என்று அறிகின்ற போது வியப்பாக இருக்கின்றது. அப்படித்தான் ராஜ கம்பீர நாடாளு நாயகனான, அந்த வேலுக் குரிச்சி வேட்டுவனாம் முருகனைத் தேடி அலைந்த கதையும் நம்மை பரவசப்படுத்துகிறது. கலை தேடி அலைந்த காதல் என்றால் இதுதான் போலும்.

காலமெல்லாம் கலைப்பணிக்காகவே கோயில் கோயிலாக வலம் வந்தவர்கள் தந்தையார். எத்தனையோ தலங்களுக்கு அவர்களுடனேயே போயிருக்கிறோம். ஆனாலும், அந்த அழகை அவர்கள் எடுத்துச் சொல்லும்போது எல்லாமே புத்தம் புது அனுபவம் போலத் தோன்றுகிறது. திருச்செங்கோட்டுக்கு உடன் அழைத்துப் போய், ஒவ்வொரு மூர்த்தியாய்க் காட்டி விளக்கியது இன்றும் எனக்குப் பசுமையாய் நினைவிருக்கிறது. பேராசிரியர் சீனிவாச ராகவன் சொல்லியது போன்று, தொண்டைமான் அவர்களுடைய கட்டுரைகளைப் படிக்கும்போது, அவர்களே நம் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு போய் கோயிலில் உள்ள ஒவ்வொரு சிற்பத்தையும் நேரில் உடனிருந்து விளக்குவது போன்ற உணர்வு ஏற்படுவதுண்டு. தொண்டைமான் அவர்களின் நோக்கமும் அதுதான். தாம் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டும் என்பது. இந்தக் கட்டுரைகளின் பயனும் அதுதான். இந்தக் கட்டுரைகளை ஒரு முறை படித்தால் போதாது. பலமுறை படிக்க வேண்டும். அப்போதுதான் அதன் அருமை பெருமை பிடிபடும்.

இந்த நூலுக்கு நல்லதொரு முகவுரை வழங்கியிருக்கிறார், வித்வான் திரு. ல. சண்முகசுந்தரம் அவர்கள், ரசிகமணி டி கே சியின் நண்பர் வட்டத்தில் முக்கியமானவர். ரசிகமணியின் குரலாக, இன்றும் ஒலிபரப்பிக் கொண்டவர். அவர் தாம் அறிந்த

தொண்டைமானை உங்கள் முன் நிறுத்தியிருக்கிறார் - அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தந்தையாரின் நூல்களை இத்தனை ஆர்வத்துடன் வெளியிட முன் வந்துள்ள கலைஞன் பதிப்பகத்தார், ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் இதனை அழகான நூலாக நம் கையில் தந்திருக்கிறார்கள் - அவர்களுக்கு நன்றி சொல்ல பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம் -

வணக்கம்.

**ராஜேஸ்வரி நடராஜன்**
**சரோஜினி சுப்பிரமணியம்**

# முகவுரை

## (வித்வான் ல. சண்முகசுந்தரம்)

முழு நிலாப் போன்ற வட்டமுகம், அகன்ற நெற்றி, புன்முறுவல் பூக்கும் அதரங்கள், அன்பர்களையும் நண்பர்களையும் தழுவி அணைக்கும் கண்கள், உயரமும் அதற்கேற்ற பருமனும் கொண்ட ஓங்கு தாங்கான கரிய திருமேனி. இப்படி ஒரு தோற்றப் பொலிவோடு அரசதோரணையில் நடமாடியவர்தான் அறிஞர் பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள். ஒரு போர்வீரனின் வல்லமை மிக்க உடம்பை விட வலுவான உடல் படைத்தவர்தான் தொண்டைமான். ஆனாலும் அந்த உடம்புக்குள் மலரினும் மெல்லிய இதயம் பூத்துக் கிடந்தது. இலக்கியம், சிற்பம், ஓவியம், கம்பர், தமிழ், இசை, விருந்தோம்பல், அன்பு, நன்றி மறவாமை, பொறையுடைமை, நேர்மை, உறுதி என்று இதழ் இதழாக விரிந்து மணம் பரப்பியது அந்த இதயத் தாமரை.

பாஸ்கரத் தொண்டைமானை அப்படியே ஓவியத்தில் வரைந்து காட்ட முடியும். ஆனால் அந்த இதயத்தின் உணர்ச்சித் தேனை, தமிழ்க்காதலை கலை

மோகத்தை, அன்பின் வேகத்தை, பண்பின் ஒய்யாரத்தை எப்படி ஓவியத்துள் கொண்டு வர முடியும்? குழந்தை போன்றவர் தொண்டைமான். உத்சாகம் வந்துவிட்டால் அதை அமுக்கி மறைக்கத் தெரியாது தொண்டைமானுக்கு. குழந்தை போலவே விழுந்து விழுந்து சிரிப்பார். அவர் சிரிக்கிற சிரிப்பைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பார்க்கப் பார்க்க பரவசமாக இருக்கும் பார்க்கின்றவர்களுக்கு. அறுபது வயதை எட்டிய ஒருவர் இப்படித் துடிப்பாக இருக்கிறாரே என்று இருபது வயது இளைஞர்கள் கூட வியப்பார்கள். அப்படி வாழ் நாள் முழுவதும் கலகலப்பாகவும் சுறு சுறுப்பாகவும் இருந்தவர் தொண்டைமான்.

முப்பது வருஷங்களுக்கு மேலாக அரசுப்பணியில் இருந்தவர் தொண்டைமான். ரெவினியூ இன்ஸ்பெக்டர் பதவியிலிருந்து, வட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், உதவி மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் என்று உத்தியோக உலகை அலங்கரித்தவர் அவர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அவர் போய் பணியாற்றியிருக்கிறார். உத்தியோக சம்பந்தமாக இருந்த பணியாற்றிய இடங்களில் எல்லாம் தமிழ்ச் சங்கங்களை நிறுவுவார். கம்பர்விழா, வள்ளுவர் விழா, தமிழ் விழா என்று கோலாகலமாகக் கொண்டாடுவார். நந்தவனம், பசுமடம், கோயில், தமிழ் மன்றம், கருத்தரங்கம், பட்டிமன்றம், ஊர் ஒற்றிமை, சுத்தம் சுகாதாரம் அவ்வளவும் தொண்டைமானின் புண்ணியத்தில் அங்கங்கே எழுந்து நிற்கும்.

நகரங்களில் உள்ள வசதிகள் கிராமங்களிலும் இருக்க வேண்டும் என்கிற கொள்கையோடு பாடு பட்டவர் தொண்டைமான். உத்தியோகத்தோடு அப்படிப் பொது நலப் பணி ஆற்றியவர் திரு. தொண்டைமான்.

ரசிகமணி, டிகேசியின் கலைக்களஞ்சியத்தைத் திறந்து அதிலிருந்து கவி நயங்களை, பண்பாட்டு நயங்களை முத்து முத்தாக, மணி மணியாக எடுத்துத் தொடுத்து, தமிழ் மக்களுக்கு, டிகேசியை இனம் காட்டியவர் தொண்டைமான். ஐம்பது ஆண்டுகளுக்கு முன், ரசிகமணி டிகேசி பற்றித் தொண்டைமான் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதுபோன்ற ஒரு நூல், டிகேசி பற்றிய வரலாற்று நூல் இன்றும் வரவில்லை -

ரசிகமணி டி.கே.சி - தம் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களைச் சேகரித்து, அவற்றை வகுத்தும் தொகுத்தும், 'டிகேசியின் கடிதங்கள் என்று ஒரு நூலை உருவாக்கினார் தொண்டைமான்.

அற்புதமான நூல் அது. கடிதங்களைக் கொண்டே, அருமையான இலக்கியம் ஒன்றைப் படைக்க முடியும் என்பதை தமிழில் முதல் முதலாக எடுத்துக் காட்டியவர் அவர்.

தொண்டைமான் எந்தத் துறையில் ஈடுபட்டா லும் சரி, பேச்சோ, எழுத்தோ, ஆராய்ச்சியோ, கட்டுரையோ எதுவானாலும் அவற்றில் தனித்த முத்தரை ஒன்று இருக்கும். யாராலும் அதை அடைக்க முடியாது. வானளாவிய கோபுரங்களோடு நிமிர்ந்து நிற்கும் கருங்கற் கோயில்கள் தமிழகமெங்கும் கடவுள்

தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன. தமிழகத்தை அப்படியே கையில் எடுத்துக் காட்டும் ஒவ்வொரு கோயிலும். தமிழ் மக்களின் வாழ்க்கை, பண்பாடு, கலை, நோக்கம், உணர்வு, போக்கு வரவு அவ்வளவும் கோயிலின் கருங்கற்களுக்குள் பத்திரமாய்ப் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. மெய்யுணர்வின் மூலமாகக் கோயில்களையும், கோயில்களின் கலைப் பொக்கிஷங் களையும் ஆராய்ந்து, அனுபவித்து, பிறரும் அனு பவிக்கும்படி, அற்புத இலக்கியங்களாக வடித்தெழுதி யிருக்கிறார்கள் தொண்டைமான்.

தமிழர்கள் எல்லோரும் கண்ணைத் திறந்து அதிசயித்துப் பார்த்தார்கள். அருமை நண்பர், நீதிபதி மகராஜன் சொன்னார், ''கோயில்களைப் பற்றி எழுதி, அவற்றுக்கு ஒளியும், உயிரும், பொலிவும் கொடுப் பதற்கென்றே அவதரித்தவர் பாஸ்கரன்'' என்று. நீதிபதியின் தீர்ப்புக்கு அப்பீல் ஏது?

தொண்டைமான் நூல்களை தமிழ் மக்கள் அனைவரும் படிக்க வேண்டும். படிக்கப் படிக்க மனம் தூய்மை பெறும். பக்தி கலை உணர்வு, இப்படி எழுதினவர், வாசிக்கிறவர் எல்லோரையும் பரவசப் படுத்தும் தொண்டைமான் நூல்கள். அது போதாதா நமக்கு?

# பொருளடக்கம்


1. ஆடும் பெருமானும் அளந்த நெடுமாலும் 11
2. பறவையும் விலங்கும் பரமன் உருவில் 18
3. வழிகாட்டும் விநாயகர் 26
4. சிற்ப வடிவில் ஒரு புதிர் 42
5. காதல் கடவுள் கல்லுருவில் 47
6. அனுமனது விசுவரூபம் 51
7. கோதையின் அழகிய கோலம் 61
8. அன்னையும் கன்னியும் 67
9. தெய்வத் திருமணம் 78
10. சிற்ப வடிவில் ஒரு நாடகம் 84
11. கண்டறியாதன கண்டேன் 89
12. ஆண்டவன் வடிவில் ஓர் ஐயம் 94
13. கொடியடியில் மடக் கொடி 102
14. மணிவாசகர் கண்டதில்லை 107
15. பிறவாப் பெருமையும் இறவாப் புகழும் 114
16. ஒன்றரைக் கண்ணன் 124
17. சிரிக்கத் தெரியுமா? 131
18. அறியாதார் அறியாதார் 142
19. அனுபவம் ஒன்று, பாடல் இரண்டு 148
20. பிழை எலாம் தவிரப் பணிப்பான் 151
21. அப்பருடன் ஒரு நாள் 159


❑

# ஆடும் பெருமானும் அளந்த நெடுமாலும்

ஒரு கண்ணாடிக் கடை. அக்கடையில் பெரிய நிலைக் கண்ணாடிகள். சிறிய கண்ணாடிகள், இன்னும் வண்ணப் பீங்கான் கோப்பைகள், எலக்டிரிக் ஷேவர். குளோப்பு கள், சாலாந்தார்கள் எனப் பல கண்ணாடிச் சாமான்கள் விற்பனைக்காக அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருக் கின்றன. இக்கடையில் நான் நுழைகிறேன் ஒரு நாள். கடைக்குள் நடக்கும் போது எனக்கு ஒரே பயம். அப்படி இப்படிக் கையை வீசினால் எப்படி எப்படி எல்லாம் கண்ணாடிகள் உடைந்து சிதறுமோ என்றுதான்.

ஆதலால் மிக்க கவனத்தோடு அடிமேல் அடிவைத்து மெல்ல நடக்கின்றேன் நான். அப்போது ஒரு சிலம்ப வித்தைக்காரன் ஒருவனும் அக்கடைக்குள் நுழைகிறான். அவன் கையில் இரண்டு சிலம்பக் கம்புகள். அக்கம்பு களை வலசாரி இடசாரி சுற்றி அக்கடைக்குள்ளே தன் சிலம்ப வித்தையைக் காட்டுகிறான். கடைக்காரனோ கையை கையை நெறிக்கிறான்.

தப்பித் தவறி ஒரு சாமான் மீது கம்பு பட்டு விட்டால் எத்தனை சாமான்கள் தவிடு பொடியாக நொறுங்கிவிடும் என்று எண்ணுகிறான். பதறுகிறான். சிலம்ப வித்தைக் காரனோ மிகுந்த கெட்டிக்காரனாக இருக்கிறான். ஒரு

சாமான் மீது கூட கம்பு படாமல் லாகவமாக கம்பைச் சுற்றிக் கால் மணி நேரம் விளையாடி விட்டு ஓய்கிறான். அதன் பின் கடைக்காரன், கடைக்கு வியாபாரம் செய்ய வந்தவர்கள் எல்லாம் சிலம்ப வித்தைக்காரனைப் பாராட்டி பரிசுகள் கொடுத்து அனுப்புகிறார்கள். இது என்னையா கதை, இப்படி நடக்குமா என்று தானே எண்ணுகிறீர்கள். ஆம், அப்படி ஒன்றும் நடக்கவில்லைதான். இப்படி நடந்தால் எப்படி இருக்கும் என்று கொஞ்சம் கற்பனை பண்ணித்தான் பாருங்களேன்.

நம் நில உலக வாழ்விலே இத்தகைய சிலம்பக்காரன் ஒருவனை நாம் காணாவிட்டாலும் கலை உலகிலே ஒன்றுக்கு இரண்டாக இரண்டு சிறந்த சிலம்பக்காரர்களை அல்லவா காண்கிறோம். அவர்களில் ஒருவன்தான் ஊர்த்துவ தாண்டவம் புரியும் அந்த நடன ராஜனாம் சிவபெருமான். மற்றவனோ ஓங்கி உலகளந்த உத்தமனாம் பரந்தாமன். இவர்களில் முன்னவனைப் பற்றித்தான் காரைக்கால் அம்மையார்,

**அடிபேரில் பாதாளம்**
**பேரும், அடியார்**
**முடிபேரில் மாமுகடு**
**பேரும் தொடிகள்**
**மறிந்தாடும் கை பேரில்**
**வான்திசைகள் பேரும்**
**அறிந்தாடும் ஆறு என் அரங்கு**

என்று பாடுகிறார். இப்படி பாதாளம், மாமுகடு வான் திசைகள் எதுவும் பெயராமே, நீ அரங்கத்தில் அறிந்து ஆடக் கற்றிருக்கிறாயே அது எப்படிச் சாத்திய மாயிற்று, என்று வியர்த்து மூக்கின் பேரில் விரலை வைத்து நிற்கிறார். இக்காரைக்கால் அம்மையைப் போலவே நம்மாழ்வாரும் மூவுலகும் ஈரடியால் அளந்து நிற்கும்

அந்த எம்பிரானது கோலத்தை கண்டு வியக்கிறார். ஏதோ சின்னஞ்சிறிய வாமனன் வடிவில் வந்தான். நின்றான், நிமிர்ந்தான், ஓங்கி உலகளக்கும் பெருமாளாக உயர்ந்து விட்டானே என்று எண்ணுகிறார், பாடுகிறார்.

**பொருமா நீள் படை**
**ஆழி சங்கத் தொடு**
**திரு மா நீள் கழல்**
**ஏழ் உலகும் தொழ**
**ஒரு மாணிக் குறளாகி**
**நிமிர்ந்த அக்**
**கரு மாணிக்கம் எண்**
**கண்ணாளது ஆடுமே**

என்றவர் பின்னும்

**மண்ணும் நீரும்**
**எரியும், நல்வாய்வும்**
**விண்ணும் ஆய்**
**விலியும் எம்பிரானையே**

என்றுதானே பாடுகிறார். இப்படி உலகை அளந்தவனும் அரங்கில் ஆடியவனும் கலை உலகில் ஒருப்போலவே உருப் பெற்றிருக்கிறார்கள் என்று அறிகிற போது நாமும் நம்மை அறியாமலே இருவரிடமும் காணும் ஒற்றுமை யைக் கண்டு வியந்து பாராட்டுகிறோம். ஆடும் பெரு மான், எப்போது எதற்காக ஆடினான், உலகளந்தான் எவருக்காக ஞாலம் முழுவதையும், இரண்டே அடிகளில் அளந்தான் என்பதெல்லாம் நாம் அறிந்தது தான் என்றாலும், அவற்றைக் கொஞ்சம் நினைவுப்படுத்திக் கொள்ளலாம் தானே.

அன்று தில்லையில் ஒரு நடனப் போட்டி நடக்கிறது. தில்லைக் கூத்தனாம் நடராஜனும், எல்லைப் பிடாரியாம்

காளியும் மாறி மாறி ஆடுகின்றனர். ஒருவருக்கு ஒருவர் சளைக்காது ஆடுவதனால், வெற்றி தோல்வி யாருக்கு என்று நிர்ணயிக்க முடியவில்லை. இந்த நிலையில் ஆடும் பெருமானின் காதில் அணிந்திருந்த குழை ஒன்று கழன்று கீழே விழுந்து விடுகிறது.

ஆட்டத்தை நிறுத்திக் குழையை எடுக்க விரும்ப வில்லை இறைவன். ஆட்டத்தோடு ஆட்டமாகவே, தன் இடக்காலை தரையில் ஊன்றி, வலக்காலின் பெரு விரலாலே குழையை எடுத்து, அக்காலை அநாயாசமாக உயர்த்தி காதிலே குழையைப் பொருத்தி விடுகிறான். இப்படி ஊர்த்துவ தாண்டவம் ஆடிய ஆட்டத்தை பெண் பாலான காளியால் ஆட முடியவில்லை.

அதனாலே தன் தோல்வியை ஒப்புக் கொண்டு, தில்லையை விட்டே ஓடி, எல்லைக் காளியாக நின்று விடுகிறாள் என்று கதை. இதைத்தானே திருவள்ளுவர் இழை நக்கி நூல் நெருடும் ஏழை அறிவேனோ குழை நக்கும் பிஞ்ஞகன் கூத்து என்று, குறிப்பாக உணர வைத் தார் என்பர். இந்த ஊர்த்துவ நடனத்தை கண்டு தானே,

**தா ளொன்றால் பாதாளம்**
**ஊடுருவி, நீள் விசும் பில்**
**தாளொன்றால் அண்டம்**
**கடந்துருவி - தோள் ஒன்றால்**
**திக்கனைத்தும் பேரி**
**திறன் காளி காளத்தி**
**நக்கனைத்தான் கண்ட**
**நடம்**

என்று நக்கீரரும் பாடுகிறார்

இதைப் போலவே மூன்றுலகையும் ஆண்ட மன்னன் மகாபலிக்கு அருள் செய்ய, பரந்தாமன் வாமன வடிவில் அவன் முன் வந்து மூன்றடி மண்ணை யாசித்துப் பெற்று, பின்னர் ஓங்கி உயர்ந்து திரிவிக்கிரமனாக வளர்ந்து ஒரு அடியினாலே இந்த நில உலகம் முழுவதையும் அளந்து, மற்றொரு அடியினாலே வான் முழுவதையும் அளந்து, அதன் பின் மூன்றாவது அடியை மாவலியின் தலை மேல் பொருத்தி அவனுக்கு முத்தியை அருளினான் என்பர். இக்கோணத்தில் உறைபவனையே

**அங்கை பால் ஆடிமூன்று**
**நீர் ஒற்றி அயன் அலர் கொடு**
**தொழுது ஏத்த**
**கங்கை போதாக் கால்**
**நிமிர்ந்து அருளிய கண்ணார்**

என்று மங்கை மன்னன் தனது பெரியதிரு மொழியில் பாடுகிறார். இப்படி ஆடியவன் சேவடியையும் அவர்தன் திருவடிவையும் நான் எத்தனை எத்தனையோ கோயில் களில் கண்டு வணங்கியிருக்கிறேன். தில்லையிலே, திருப் பனந்தாளிலே, செங்காட்டாங் குடியிலே, திருவாலங் காட்டிலே, தென்காசியிலே, மதுரையிலே, பேரூரிலே எல்லாம் இவ்வூர்த்துவ தாண்டவ வடிவங்கள் கல்லிலோ அல்லது செம்பிலோ சிறப்பாகவே அமைந்திருக்கின்றன. அவ்வடிவங்களின் அடி ஒற்றியே சேலத்தை அடுத்த தார மங்கலம் கைலாசநாதர் கோயிலிலும், ஒரு வடிவம் உருவாகி இருக்கிறது. அதனையே பார்க்கிறீர்கள் பக்கத்திலே. இதைப் போலவே, ஓங்கி உலகளந்தவனை யுமே அளந்து கல்லில் அமைத்து வைத்திருக்கிறார்கள். அழகர் கோயிலிலே, ஸ்ரீ வில்லிபுத்தூரிலே எல்லாம். திருக்கோயிலூரிலோ அவனே மூல மூர்த்தியாக உருப் பெற்றிருக்கிறான். இன்னும் கோவையை அடுத்த சிங்கா

நல்லூரிலே ஒரு சிறிய கோயிலிலே செப்புச் சிலையாக வும், அவன் நிற்கிறான். அவன் கோலத்தையுமே பார்க் கிறீர்கள் பக்கத்திலே.

இந்த வடிவங்களை நான் சிற்பக்கலை உலகில் கண்ட போது இதன் காலத்தைக் கணக்கிட முயன்றேன். பல்லவர் கோயில்களிலே இவ்வடிவங்களை காணோமே. ஆதலால் சோழ மன்னர் காலத்திலேயும், அதன் பின்னர் வந்த நாயக்க மன்னர் காலத்திலும்தான் இந்த நடனக் கோலம் உருப் பெற்றிருக்குமோ என்று எண்ணினேன். எனது வட நாட்டு யாத்திரையில் அப்படி எண்ணியது தவறு என்று கண்டேன்.

*1913*-ஆம் ஆண்டிலே தக்ஷசீலத்திலே புதை பொருள் ஆராய்ச்சியாளர் வேலை செய்த போது பீல்மவுண்டு என்னும் இடத்திலே ஒரு சதுரமான கல் ஒன்றைக் அகழ்ந்து எடுத்திருக்கின்றனர். அக்கல்லில் பலவித சிற்ப வடிவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு வடிவம் ஒருகாலை ஊன்றி ஒரு காலை உயர்த்தியிருக்கின்ற நிலையில் இருப்பதை சிற்பக் கலை ஆராய்ச்சியாளரான கங்கோலி கண்டு பிடித்திருக்கிறார். அக்கல் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்ட மௌரிய அரசர்கள் காலத்தியது என்றும் அறுதியிட்டு வைக்கிறார். இன்னும் இந்த வடிவமே பரத சாஸ்திரத்தில் சொல்லப்படும் லதா திலகம் என்னும் வடிவம் என்றும் முடிவு கட்டுகிறார். இந்த லதாதிலகம் தாண்டவ லக்ஷணங்களில் ஒரு கரணம் என்பதைப் பரதம் கற்றவர்கள் அறிவார்கள். லதாதிலகம் என்றால் பாத நாட்டியம் ஆடும் போதே ஒரு காலை உயர்த்தி நெற்றியில் பொட்டிட்டுக் கொள்ளும் சாகஸம் என்று தெரிகிற போது நமக்கு ஒரு ஆதங்கம் தோன்றும். இந்த சாகஸத்தை, அன்று தில்லையில் ஆடிய

காளி அறியாதிருந்த காரணத்தினால் அல்லவா அவள் தோற்று ஓடும்படியாயிற்று என்று எண்ணத் தோன்றும். அப்படி ஆடும் போதே எப்படி ஒரு காலாலேயே கீழே விழுந்த குழையை எடுத்து காதில் அணிந்தானோ அதே போல ஆடும் போதே காலால் நெற்றியில் திலகமுமே இட்டுக் கொண்டிருக்கலாமே. இந்த லதாதிலகம் தான் பரதசாஸ்திரத்தில் உள்ள நூற்றெட்டுக் கரணங்களில் 64 வது கரணம் என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். பின்னால் சிதம்பரம் நடராஜர் கோயில் கீழ்க் கோபுரத்தைக் கட்டிய கோப்பெருஞ் சிங்கனுக்கு இக்கரணங்களை எல்லாம் அங்கு சிற்ப வடிவில் வடித்து வைக்க வேண்டும் என்றும் தோன்றி யிருக்கிறது. அதனாலேயே லதாதிலகம் என்று பரத நாட்டிய கரணத்தை அடிப்படையாக வைத்தே ஓங்கி உலகளந்தவனையும், ஆடி அண்டம் அளந்நவனையும் உருவாக்கியிருக்கிறார்கள் சிற்பிகள்.

எனக்கிருக்கிற அதிசயம் எல்லாம் இப்படி இரண்டு பெருமானையும் ஒரே வடிவில் சமைப்பதன் மூலமாக கலை உலகில் ஓர் ஒருமைப்பாட்டை அல்லவா ஆக்க முயன்றிருக்கிறார்கள், அனுபவத்தாலே.

**பொன் திகழும் மேனிப்**
**புரிசடையம் புண்ணியனும்**
**நின்றுலகம் தாய**
**நெடு மாலும் - என்றும்**
**இருவா திருவர்**
**ஏனும் ஒருவன்**
**ஒருவன்**

என்று பொய்கை ஆழ்வார் போன்ற பக்த மணி களால் பாட முடிந்திருக்கிறது. நாமும் இருவரையும் ஒரே வடிவிலேயே கண்டு மகிழும் பேறு பெறலாம் தானே.

# பறவையும் விலங்கும் பரமன் உருவில்

குற்றாலத்தில் குரங்குகள் எல்லாம் கூடி ஒரு மகாநாடு நடத்தியது. ஒரு பெரிய சம்மேளனமே நடந்தது. அந்தச் சம்மேளனத்துக்கு எனக்கு அழைப்பு இல்லை. என்றாலும் நம் மூதாதையர் ஆயிற்றே அவர்கள். ஆதலால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று அறியும் ஆவலுடன் நானும் சென்றிருந்தேன். சம்மேளனம் மண்டபங்களில் நடக்கவில்லை, மாடியிலும் நடக்கவில்லை. மரக்கிளைகளிலேயே நடந்தது. ஆதலால் மரம் ஏறத் தெரியாத நான் அவர்களுடன் நெருங்கியிருந்து அங்கு நடந்த பேச்சுகளைக் கேட்க முடியவில்லை. என்றாலும் அங்கு சென்றிருந்த நிருபர் ஆம் குரங்கு நிருபர் ஒருவரைத் தான் கைக்குள் போட்டுக் கொண்டு, நடந்த பேச்சுகளின் சாரத்தை மட்டும் தெரிந்து கொண்டேன்.

ஒரு சிறு குரங்கு பேசிற்றாம் - குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்கிறார்களே, இந்த மனிதர்கள், இது நமக்குப் பெருத்த அவமானத்தைத் தருகிறது. நம்மைப் போல அழகு வாய்ந்தவனாகவா இந்த மனிதன் இருக்கிறான், மேனி அழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும், கூனியன யேடுகாலு நேர்த்தி துள்ளிலுமே வானரராம் நம் சாதிக்கு மனிதர் நிகர் ஆவரோ? அவர்களுக்கு வாலுண்டா! நம்மைப் போல் வடிவுண்டா? இல்லை, குண நலத்திலாவது நமக்கும் அவர்களுக்கும் ஒற்றுமை உண்டா? மனிதன் அடுத்தவனைக் கெடுக்கிறான். அவனைப் பற்றிப் புறம் பேசுகிறான். பொறாமை கொள்கிறான். பொன்னும் பொருளும் தேட

தகாத முறைகளை எல்லாம் கையாளுகிறான். களவு செய்கிறான். கொலை புரிகிறான். இன்னும் என்ன என்ன எல்லாமோ செய்கிறான்.

இப்படி யெல்லாம் குணம் கெட்டு அலைகிற மனிதன் பல குண நலம் படைத்த நமது சந்ததியார் என்று சொல்லி நமது பெருமையையே குலைக்கிறான். ஆதலால் 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்ற கூற்றை நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். அப்படிக் கண்டிக்கிறோம், என்று கூறி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அமரர் உலகில் இருக்கும் அந்தப் பழைய மனிதன் டார்வினுக்கே அனுப்பி வைக்க வேணும். அவன் தானே இந்த எண்ணத்தை மனிதன் உள்ளத்தில் ஊன்றியவன் என்று காரசாரமாகவே பேசிற்றாம். அச்சிறு குரங்கின் தீர்மானத்தை ஏக மனதுடன் மற்ற குரங்குகளும் ஆமோதித்து நிறை வேற்றி வைத்தன.

இதைக் கேட்ட நான் அவமானத்தால் கூனிக் குறுகி மற்ற தீர்மானங்களைப் பற்றி எல்லாம் கேட்காமலேயே திரும்பி விட்டேன். உண்மை தானே, நல்ல பழுத்த சைவ நெறியிலே அல்லவா இந்தக் குரங்குகள் வாழ்கின்றன.

புலால் உணவையே தொடுவதில்லை. ஒன்றுக் கொன்று, அன்புகொண்டவையாக வாழத் தெரிந்திருக் கிறதே பொய், கொலை, களவு, முதலிய பாதகங்களைச் செய்கிறதில்லையே - இத்தகைய நற்பண்புகள் எல்லாம் இழந்தவனாக அல்லவா மனிதன் வாழ்கிறான். அப்படி யிருக்க குரங்குக்கும், அவை போன்ற மற்ற விலங்கினங் களுக்கும் ஆறறிவு கிடையாது. ஆகவே அவைகள் உயர்திணை வகுப்பைச் சேர்ந்தவை அல்ல என்று மனிதர்கள் கருதுவது சரிதானா என்றே எண்ணினேன்.

இப்படி நான் மட்டும் எண்ணவில்லை. நமது முன் னோர்களில் அறிவில் சிறந்த பலருமே எண்ணியிருக் கிறார்கள். இந்த உலகத்தை எல்லாம் படைத்துக் காத்து

அழிக்கின்ற பரம் பொருளுக்கு வடிவம் இல்லை என்பதை உணர்ந்த அவர்கள், இப்படியன், இந்நிறத்தன், இவ் வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட ஒண்ணாது என்றும் கூறியிருக்கிறார்கள்.

அதே சமயத்தில் அந்த இறைவன் எல்லா இடத்தும் பரவி இருக்கிறான். அவன் இல்லாத இடமே இல்லை என்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் பார்க்கும் மரங்களில் எல்லாம் அவன் பசிய வடிவினைக் கண்டிருக்கிறார்கள். காக்கை சிறகினிலே, அவன் கரிய நிறத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். கேட்கும் ஒலியில் எல்லாம் அவன் கீதத்தைக் கேட்கிறார்கள். ஏன், எரிகின்ற தீயில் விரலை விட்ட போது கூட அவனைத் தீண்டும் இன்பத்தையே அல்லவா பெற்றிருக்கிறார்கள். இப்படி எங்கும் நிறைந்த இறைவனைத் தான் மலையில் கண்டிருக்கிறார்கள். மரத்தில் பார்த்திருக்கிறார்கள். ஏன் பறக்கும் பறவையாகவும், பாயும் விலங்காகவுமே அவனை உருவகப்படுத்தியிருக்கிறார்கள்.

இதை எல்லாம் உணர்ந்த, அறிஞர் பெர்னாட்ஷாவும், இந்த இந்தியர்கள் பொல்லாதவர்கள், பறவைகளையும் விலங்கினங்களையுமே தாங்கள் வழிபடும் மூர்த்திகளாக அமைத்துக் கொண்டு வணங்கத் தெரிந்திருக்கிறார்களே என்று அதிசயித்திருக்கிறார்.

சாதாரணமாக நாம் சொல்வோம். எல்லாம் வல்ல இறைவன் எங்கும் நிறைந்தவனாக தூணிலும் இருக்கிறான் துரும்பிலும் இருக்கிறான் என்று. சொல்லும் போது தூண் என்பது ஒன்று, துரும்பு என்பது ஒன்று, இறைவன் என்பது வேறு ஒன்று. அது வந்து தூணில் புகுந்து கொண்டிருக்கிறது. துரும்பில் ஒட்டிக் கொண்டிருக்கிறது என்று தானே எண்ணத் தோன்றும். ஏன் அந்த தூணே இறைவன், அந்தத் துரும்பே இறைவன் என்று எண்ணு

தல் கூடாது என்று நமக்கு கேட்கத் தோன்றும் அல்லவா. இப்படிக் கேட்பவர்களை நினைந்தே அருள் அரசராகிய அப்பர் பெருமான்.

**நின்னாவார் பிறர் இன்றி**
**நீயே ஆனாய்**
**நினைப்பவர்கள் மனத்துக்கோர்**
**வித்தும் ஆளாய்**

என்று பாடத்துவங்கியவர். அவன் எப்படி எல்லாம் உருப் பெறுகிறான் என்ற சொல்ல முடியாமல் திணறித் திணறி:

**பொன்னானாய் மணியானாய்**
**போகம் ஆனாய்**
**பூமிமேல் புகழ்த்தக்க பொருளே உன்னை**
**என்னானாய் என்னானாய்**
**என்னின் அல்லால்**
**ஏழையேன் என் சொல்லி ஏத்து கேனே -**

என்றும் மயங்கி நிற்கிறார். அப்பர் போன்ற பெரு மக்களே இப்படித் திக்கித் திணறும் போது நம் நாட்டுக் கலைஞர்கள் மட்டும் எங்கும் நிறைந்த இறைவனைப் பறவை உருவிலே காணுகிறார்கள். விலங்கினமாகவுமே மதிக்கிறார்கள். பறவையையும் விலங்கினத்தையும் பரமன் உருவிலே அமைத்து அந்த உருவங்களை மனிதன் விழுந்து விழுந்து வணங்கவும் வகை செய்திருக் கிறார்கள். கலைகளில் எல்லாம் சிறந்த சிற்பக் கலை உலகிலே, இந்தப் பறவையும் விலங்கும். எப்படிப் பரமன் உருவிலே காட்சி தருகிறது என்பதை ஒரு சில உதாரணங் களால் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தெய்வ வடிவங்களில் எல்லாம் எல்லோருக்கும் முன்னவனாய் முன் நிற்பவர் யார் என்பது நமக்குத் தெரியும். அவரே யானை வடிவினர். ஐந்து கரத்தவன்,

ஆனை முகத்தான், இந்தின் இளம் பிறை போலும் எயிற்றன், என்று அன்றே திருமூலரால் பாராட்டப் பட்டவர். மக்கள் மாக்களுடனே உருவத்தாலும் அறிவாலும் ஆற்றலாலும் சிறந்து விளங்கும் யானைக்கே தெய்வ வடிவில் முதலிடம் கொடுத்தது பொருத்தம் தானே. நூற்றி இருபது வயது வரை வாழக் கூடிய விலங்கு அது. எவ்வளவோ வலியுடையதாக இருந்தாலும் ஒரு கட்டுக்குள் அடங்கி நிற்கும் இயல்பும் உடையது. விரிந்த மனத்திற்கும் நிறைந்த அறிவிற்கும் உருவம் கொடுத்து கடவுளை உருவாக்க எண்ணிய கலைஞன், யானையின் வடிவிலேயே அதனை கற்பித்திருக்கிறார். அந்தக் கடவுளையே,

**பாசத்தளை அறுத்துப்**
**பாவக் கடல் கலக்கி**
**நேசத்தளை பட்டு**
**நிற்குமே - மாசற்ற**
**காரார் வரை ஈன்ற**
**கன்னிப்பிடி அளித்த**
**ஓரானை வந்தென்**
**உளத்து**

என்று குமரகுருபர அடிகள் பாடி மகிழ்கிறார்.

இந்த அண்ணனுக்கு ஏற்ற தம்பியோ அறுமாமுகவ னாக அமைகிறான். அவன் மனித உருவினனே என்றாலும், அவனை எல்லா இடத்திலேயே இட்டுச் செல்லும் ஆற்றல் பெற்றது மயில் தான். விரிந்து பரந்த ஆகாயத்தையே மயிலென உருவகித்து, அதில் தோன்றும் செஞ்சுடராகவே முருகனை உருவகித்திருக்கிறார்கள். கலைஞர்கள் அவனை மயில் வீரன் என்றே வர்ணித்திருக் கிறார்கள். முருகனையும் விட அவன் ஏறி வரும் மயிலும் அவன் ஏந்தி நிற்கும் வேலுமே தொழுதற்குரியது என்றும்

நினைத்திருக்கிறார்கள். அதனால் தானே அருணகிரியார் வழிக்குத் துணை அவன் வடிவேலும் செங்கோடன் மயூர முமே என்று பாடினார். இத்துடன் திருப்தி அடையாமல்,

**எட்டும் குலகிரி எட்டும் விட்டு**
**ஓட எட்டாத வெளி**
**மட்டும் புதைய விரிக்கும்**
**கலாப மயூரத்துனே**

என்று பாடிப்பரவசம் அடைகிறார். முருகனால் மயில் தெய்வீகம் அடைகிறதா; இல்லை, மயிலால் முருகன் பெருமையுறுகிறானா என்று கூறுவது எளிதானதில்லை தான்.

இவ்விருவரின் தந்தையாம் சிவபெருமானோ அன்பு நிறைந்தவர். மூவர் முதற் பொருளாய் முத்தொழிற்க் கும் வித்தாகி நாவிற்கும் மனத்திற்கும் நாடறிய பேரறிவாய் விளங்குபவன். அந்த அன்பு விகசிக்க அறம் போன்ற அடிப்படை வேண்டுமே அந்த அறத்தின் உருவத்தில் அவன் ஏறும் விடை எருது எழுகிறது. தோடுடைய செவியனாய் - அம்மை அப்பனாய் வரும் இறைவன் விடை ஏறியே தூவெண் மதி சூடி வருகிறான் என்பர் ஞான சம்பந்தன். நன்றுடை யான். அவன் தீயதில்லான் அவன் நரை வெள்ளேறு ஒன்றுடையவனாக இருப்பதின் காரணமாகத் தான் இந்த ஒன்றையே நந்தியம் பெருமான் என்று கோயில் உள்ளே முன்னமேயே கண்டு வணங்குகிறோம். திருவாவடுதுறை என்னும் தலத்திலே நந்திக்கு தனிக் கோயிலே கட்டி வணங்கியிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே சிவசைலம் என்னும் திருப்பதியிலே கலை உலகு கண்டு அதிசயிக்கும் நந்தியின் வடிவினை அமைத்து வழிபடுகிறோம்.

இப்படியே சிவனையும் அவனது மக்கள் இருவரையும் பறவையோடும் விலங்கினத்தோடும் சேர்த்து இணைத்து

வழிபடுகிற மக்கள், கடவுளான பரந்தாமனையே ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய வடிவங்களிலே பலபல கோலங்களில் காண்கிறார்கள். பெருமான் எடுத்த திரு அவதாரம் பத்து என்பதை அறிவோம். அந்த பத்தும் உலகப் பரிணாமத்தை விளக்க. எடுத்தவை என்பதை யுமே உணர்வோம். உலகப் பரிணாமத்தைப் பற்றிப் பேசும் போது ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து தண்ணீரும் தண்ணீரிலிருந்து மண்ணும் வந்தது என்பர். உலகம் முழுவதுமே முதலில் தண்ணீராகத் தான் இருந்திருக்கிறது. அந்த தண்ணீரிடையே மண் தோன்றி பின்னரே மண் உருப்பெற்றது என்றும் கூறுவர். உயிரினங்கள் இந்த முறையிலேதான் வளர்ந் திருக்க வேண்டும். ஆதலால்தான் ஆதியில் தோன்றிய உயிர் மீனாக, ஆம் நீரில் மட்டுமே வாழ்கின்ற உயிராக இருந் திருக்கிறது. அதன் பிறகுதான் நீரிலும் நிலத்திலும் வாழும் உயிராகிய ஆமை - கூர்மம் தோன்றியிருக்கிறது.

அதன் பின்னரே நிலத்திலே தங்கியிருந்து அதை குத்திக் கிளறி பயிர் விளைக்கும் உயிராகிய வராகம் தோன்றியிருக்கிறது. பின்னரே மிருகம் பாதியாகவும் மனிதன் பாதியாகவும் உருவாகிய நரசிம்மம் வெளி வந்திருக்கிறது. அதன் பின்தான் வளர்ச்சியில்லாத மனிதனாக. வாமனன் தோன்றியிருக்கிறான். இதற்கும் அப்பால் தான் பூரண வளர்ச்சி பெற்ற மனிதனான ராமன் பிறந்திருக்கிறான். ராமனுக்கும் பின்னரே கண்ணன் தோன்றியிருக்கிறான், என்றெல்லாம் சொல்லுகிறார்கள் அறிஞர்கள். மீனாக, ஆமையாக, கூர்மமாக, வராகமாக உருவெடுத்தவனுக்கு தெய்வத்திரு உருவங்கள் அமைத்து வணங்க நாமும் மறக்கவில்லை. இவர்களில் இருவரையே இங்கு காண்கிறீர்கள். ஸ்ரீ முஷ்ணத்திலே பூவாரகன் கோயில் கொள்கிறார் என்றால், நாமக்கல்லில் நரசிம்மர் பிரதான மூர்த்தியாக விளங்குகிறார். இவர்கள் எல்லாம் நமக்கு நீண்ட காலமாக அறிமுகமானவர்கள்.

இன்னும் இந்தப் பரந்தாமனை குதிரை வடிவிலும் வணங்கத் தெரிந்திருக்கிறோம் என்றால், அது என்ன சார். அது நம் நாட்டு மிருகமே இல்லையே அரேபியர்களிட மிருந்து வந்த தாயிற்றே என்பீர்கள். எங்கிருந்து வந்தாலும் அது இந்தியாவில் நிலைத்து நின்றிருக்கிறதே. நம் வீடு களில் வளக்கும் மாட்டை போல் மனிதனுக்கு உழைக் கும் உழைப்பாளியாக அல்லவா குதிரை இருக்கிறது. நன்றி மறவாத நாயுடன் போட்டியிடும் வரிசையில் மனிதனுக்குத் தோழனாகவும் அமைகிறதே. இம்மட்டோ அழகு நிறைந்த உடலும், அறிவும் அடக்கமும் நிறைந்த உள்ளமும் உடையதாகவும் இருக்கிறதே. பல்லாயிர வருஷ காலமாக மனிதனை சுமந்து அவன் ஆடும் வேட்டையிலும் அவன் விளையாடும் விளையாட்டுகளி லும் கலந்துகொள்வதுடன் அவன் வீரம் எல்லாம் வெளிப் பட போர்க்களம் வரையிலும் அவனை இட்டுச் சென்று துணை நின்றிருக்கிறதே! அத்தகைய தொரு விலங்கினை தெய்வமாக வழிபட மறப்பார்களா தமிழர்கள்.



ஆம் குதிரை வடிவிலும் பரந்தாமனை வணங்கினார் கள். அவ்வடிவிற்கே ஹயக் கிரீவன் என்று நாம கரணம் சூட்டியிருக்கிறார்கள். திருப் பாதிரிப் புலியூரை அடுத்த திருவஹீந்திரபுரத்திலே மலை மீது ஏற்றி இருத்தி வைத் திருக்கிறார்கள். இவ்வடிவை யுமே பார்த்திருக்கிறீர்கள் பக் கத்திலே.

# வழி காட்டும் விநாயகர்

கம்பன் பிறந்த தேரழுந்தூரில் ஒரு சிறப்பு. வேதபுரி ஈஸ்வரனான சிவனும் ஆமருவியப்பன் என்னும் விஷ்ணுவும் எதிர் எதிரே கோயில் அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். சிவன் மேற்கே பார்க்க இருந்தால் விஷ்ணு கிழக்கே பார்க்க நிற்கிறார். இருவருக்கும் சந்நிதி வீதி ஒன்று தான். அத்தனை சமரச மனோபாவம் இருவருக்கும். இந்தத் தலத்திற்கு ஞானசம்பந்தர் வந்திருக்கிறார். அவரது தல யாத்திரையில் அவர் வந்த வழி இரண்டு பெரிய கோயிலுக்கும் மத்திய பாகமான இடம். அங்கிருந்து கிழக்கே திரும்பினால் ஒரு கோபுரம் காணப் படுகிறது.

எந்தக் கோயில், தனி வழிபடு தெய்வமான வேதபுரி ஈஸ்வரர் கோயில் என்று அறியக்கூடவில்லை. இந்த நிலையில் அங்குள்ள தேரடியில் ஒரு சிறு பிள்ளையார் இருந்திருக்கிறார். அவர் தன் கை தூக்கி வேதபுரி ஈஸ்வரன் கோயிலுக்கு வழி காட்டியிருக்கிறார். அதன் பின் சிரமம் இல்லாமல் சம்பந்தர் கிழக்கு நோக்கி நடந்து சிவன் கோயில் சென்றிருக்கிறார். வேதபுரியானைப் பாடிப்பரவி இருக்கிறார். அன்றிலிருந்து அந்த தேரடிப் பிள்ளை யாருக்கு வழிகாட்டி விநாயகர் என்ற பெயர் நிலைத் திருக்கிறது.

உண்மைதானே. வாழ்க்கையில் பாதை தெரியாமல் துயர் உறுகிறவர்கள் தான் எத்தனை எத்தனை பேர். அத்தனை பேருக்கும் வழிகாட்டியாக அமைவதற்கு ஒரு

பிள்ளையார் கிடைத்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். அப்படியே கிடைத்தும் இருக்கிறது. இந்தத் தமிழகத்தில் விநாயக வணக்கம் நீண்ட காலமாக, தமிழ் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்று நாளும் வளர்ந்து வந்திருக்கிறது.

விநாயகர் தமிழ் நாட்டுக் கடவுளா, இல்லை வட நாடு இருந்து தென்னாடு வந்தவர் தானா, என்று ஒரு கேள்வி. பல்லவ மன்னன் நரசிம்மவர்மன், சாளுக்கியரது தலை நகராம் வாதாபி மீது படை கொடு சென்று, அந்நகரைத் தீக்கு இரையாக்கி மீண்ட போது, அந்நகர் கோட்டை வாயிலில் இருந்த விநாயகரைப் பேர்த்து எடுத்து வந்து தன் சொந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடியிலே பிரதிஷ்டை செய்தார் சேனாதிபதி பரஞ்சோதி என்பது கதை.

இந்த வரலாற்றுப்படி கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் அவர் தமிழ் நாட்டிற்கு வந்திருக்க வேணும் என்றாலும், சில ஆராய்ச்சி வல்லுநர்கள், விநாயகர் தமிழர்களின் பழந்தெய்வம் என்பதற்கு எல்லாம் பல சான்றுகள் காட்டுகிறார்கள். இதைப்பற்றி விவாதிக்க விரும்பவில்லை. கலை உலகிலே இந்த விநாயகர் எப்படி உருவானார், அவரைப் பற்றிய வரலாறுகள் என்ன என்று அறியவே இக்கட்டுரை.

விநாயகரது பிறப்பைப் பற்றி எத்தனையோ கதைகள். அவைகளில் சில மிக மிகக் கேவலமான கதைகளும் கூட என்றாலும் இரண்டு கதைகள் பிரசித்தமானவை; நம் கவனத்தைக் கவரக் கூடியவை.

உமையும் சிவனும் ஒரு நாள் உய்யான வனத்திற்குச் செல்கிறார்கள். அங்கே ஒரு பிடியும் களிறும் கலவியில் களிப்பதைக் காணுகிறார்கள், அம்மையும் ஐயனும் பிடி

யும் களிறுமாக மாறிக் களிக்கின்றனர். அந்தக் கலப்பில் பிறக்கிறார் விநாயகர். இப்படிக் கூறுகிறது சுப்பிரபேத ஆகமம். அதையே சொல்கிறார் ஞான சம்பந்தர்.

**பிடியதன் உருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்**
**கடி கணபதி வர அருளினன்.**

என்று. அதையே கொஞ்சம் மாற்றிக் கூறுகிறது காஞ்சிப் புராணம், சிவபிரானும் உமையும் ஓர் உய்யான வனத்திற்குச் செல்கிறார்கள். அங்குள்ள மந்திர சாலையில் பிரணவம் எழுதப் பெற்றிருக்கிறது, அதையே ஊன்றி நோக்குகின்றனர் இருவரும், அந்த நோக்கிலே விநாயகர் அவதரிக்கிறார் என்று.

இந்த புராணக் கதைகள் எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். உண்மையில் இவர் பிறந்தது கலைஞனது சிந்தனையில்தான். மக்கள் மாக்களுக்குள்ளே உருவத் தாலும் அறிவாலும் ஆற்றலாலும் சிறந்து விளங்குவது யானை. வயதால் கூட 120 வருஷம் வரை ஜீவித்திருக்கக் கூடியது அது. அதனால்தான் உலகத்தைத் தாங்கி நிற்கும் அஷ்ட திக்கஜங்களாக அதனைக் கற்பித்திருக்கிறார்கள், நமது முன்னோர். எவ்வளவோ வலிமையுடையதாக இருந்தாலும் ஒரு கட்டுக்குள் அடங்கி நிற்கும் இயல்பும் வாய்க்கப் பெற்றிருத்தலால், விரிந்த மனத்திற்கும், நிறைந்த அறிவுக்கும், உருவம் கொடுத்துக் கடவுளை உருவாக்க எண்ணியபோது, களிற்றின் உருவத்தைக் கற்பித்திருக்கிறான் கலைஞன். கண்டது, கேட்டது, உணர்ந்தது எல்லாவற்றையும், எக்காலத்தும் மறவாத அதி அற்புத ஞாபக சக்தி யானைக்கு உண்டு என்பதை எத்தனை எத்தனையோ கதைகளின் மூலம் அறிவோம் நாம். மிக்க வலிமை பெற்றிருக்கின்ற அதே நேரத்தில்,

அளப்பரும் சாந்தமும் உடையது யானை. இதம் செய்வார்க்கு வசமாய் உதவுவதிலும் யானையை விடச் சிறந்த உயிரே இல்லை என்பது அறிஞர் துணிபு - ஆதலால் அருங்குணங்கள் பல அமைந்த யானையின் தலையுடன் ஒரு கடவுளை உருவாக்கிய கலைஞன் பாராட்டுவதற்கு உரியவன் தானே.

முடிவும் அறிவும், அதாவது சித்தியும், புத்தியும் விநாயகருக்குத் திருவடிகள் - இல்லை - திருவடி வருடும் தர்மபத்தினிகள் ஆகின்றார்கள், தாழ்செவி, சர்வ சக்தியையும், ஏகதந்தம் பரஞானத்தையும், ஒடிந்த தந்தம் அபயத்தையும், லம்போதரம் பொறுமையையும் அறிவிக்கும் அடையாளங்களாக அமைகின்றன. எல்லாவற்றினுக்கும் மேலாக உலகம் தோன்றுவதற்கு மூலகாரணமாம், 'ஓம்' என்னும் பிரணவ உருவத்திலேயே தெய்வத் திரு உரு அமைகிறது. அதன் மூலம் அந்தத் திரு உருவே அறிவுக்கு அறிவாகவும், எங்கும் வியாபித்து நிற்கும் பரம்பொருளாகவும், யாவராலும் அறியப்படாத நிலையிலேயும் எல்லோராலும் வணங்கப்படும் இயல்புடையதாகவும், இறைவனுடைய தன்மைகள் எல்லாம் நிறைந்து நின்று மக்களுக்கு அருள் செய்யும் திருக்கோலமாகவும் அமைந்து விடுகிறது.

விநாயகர் வணக்கம் நீண்ட நாளாகவே தமிழ் நாட்டில் நிலைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல; எந்தத் தெய்வ வழிபாடும் விநாயக வணக்கத்தை முதன்மையாக வைத்தே நடந்து வருகிறது. விநாயகரை வணங்காமல் ஆரம்பித்த காரியங்கள் முட்டின்றி நிறைவேறுவதில்லை. நிரம்பச் சொல்வானேன். திரிபுரம் எரிக்கப்புறப்பட்ட சிவபிரான் விநாயகரை வணங்காமல் புறப்பட்டு விட்டார். அவ்வளவுதான், தேரின் அச்சு முறித்து விட்டது. விநாயக

வணக்கம் செய்த பின்பே தேர் நகர்ந்தது; 'திரிபுராந்தகர்' என்று பெயர் பெற்றார். தந்தை பாடுதான் இப்படி என்றால் தம்பி பாடும் இதே கதைதான். கோலக் குறமகள் வள்ளியை மணக்க விரும்பிய குமரனும் அண்ணன் விநாயகரை மறந்து விட்டான். அவ்வளவு தான்; எத்தனையோ இடையூறுகள் வள்ளியை மணக்க - ஏன்? - அவள் சம்மதமே பெற. கடைசியில் உணர்ந்தான். முருகன் தன் தவறை. அண்ணாவைப் பிரார்த்தித்தான் அன்போடு. அவரும் சமய சஞ்சீவியாக ஆனை உருவிலேயே வந்து, தம்பி விரும்பிய பெண்ணை, ஆம் வள்ளியை அவனுக்கு மணம் முடித்து வைக்கிறார்.

சரிதான், எல்லாத் தேவர்களும் - ஏன்? எல்லா மனிதர்களுமே பிள்ளையார் குட்டு குட்டி விட்டுத்தான் தங்கள் காரியங்களைத் துவக்குகிறார்கள். பிள்ளையார் சுழி போடாமல் எதையுமே எழுதத் தமிழன் முனைவ தில்லை. இப்படி முன்னவர்க்கும் முன்னவனாய் நிற் கின்றவர், பிள்ளையார். அதனால்தான் சிவன் கோயிலில் மட்டுமல்ல விஷ்ணு கோயிலிலுமே அக்ர ஸ்தானம் கிடைத்து விடுகிறது, அவருக்கு. சிவன் கோயிலில் பிள்ளையாராக, விநாயகராக, கணபதியாக முன் நிற்பவர் தான் பெருமாள் கோயிலில் தும்பிக்கை ஆழ்வாராக கோபுர வாயிலிலேயே அமர்ந்து விடுகிறார்; எல்லோரும் வணங்கும் முதல் தெய்வமாக ஆகிவிடுகிறார்.

இப்படி தமிழ் நாட்டிலேயே காணும் விநாயக வணக்கம் பிறநாடுகளுக்கும் பரவியிருக்கிறது. கடல் கடந்தும் சென்றிருக்கிறது. எல்லோராக் குகையில் எழுந் தருளியதோடு நின்று விடாமல், குஜராத்திலும் ஜைனர்கள் மாத்திரம் என்ன, பௌத்தர்களுமே விநாயகரை வணங்கி வருகிறார்கள். 'கணபதி இருதயம்' என்னும் மந்திரத்தை உருவேற்றுகிறார்கள். இத்துடன் ஜாவாவில், ஜப்பானில்,

சைனாவில், நேபாளத்தில் எல்லாம் இந்த விநாயக வணக்கம் பரவியிருக்கிறது.

இப்படியெல்லாம் கலைஞனது சிந்தனையில் உருப் பெற்று மக்களால் எல்லாம் வணங்கப் பெறும் இக் கடவுளின் திருவுருவத்தைச் சித்திரத்திலே எழுதினார்கள்; கல்லிலே செதுக்கினார்கள், செம்பிலே வடித்தார்கள் தமிழர்கள். பால கணபதி, மகா கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, வாதாபி கணபதி, ஹேரம்ப கணபதி, பிரசன்ன கணபதி, உச்சிஷ்ட கணபதி என்றெல்லாம் எண்ணற்ற பெயர்களால் அழைத்தார்கள். இம்மட்டோ, ஆதி விநாயகர், சோம விநாயகர், மாணிக்க விநாயகர், வரசித்தி விநாயகர் என்றும் பெயரிட்டு, இதை விட இன்னும் அருமையாக ஆண்ட பிள்ளையார், வேதப் பிள்ளையார், உச்சிப் பிள்ளையார், கள்ள வாரணப் பிள்ளையார், கற்பகப் பிள்ளையார் என்றெல்லாம் செல்லப் பெயரிட்டு அழைத்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் பாராட்டப் பெற்ற விநாயகரை கோயில் கர்ப்பக் கிரகத்துக்குள் மட்டும் பூட்டி வைத்துவிட வில்லை தமிழர்கள். ஊர் ஊராக, தெருத் தெருவாக, சந்தி சந்தியாக, பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார்கள். பெரிய வர்கள் மாத்திரம் அல்ல, பாமரர்கள், ஜாதியால் உயர்ந்த வர்கள் மாத்திரம் அல்ல. தாழ்ந்த இனத்தவர்கள் எல்லோரும் கண்டு தொழ, நெருங்கிப் பழகத் தகுந்த முறையில் எல்லாம் அமைத்திருக்கிறார்கள்.

தமிழ்க் கலைஞனது ஆசை இத்துடன் நின்றுவிட வில்லை. பிள்ளையாரை உட்கார வைத்துப் பார்த்திருக் கிறான். நிற்க வைத்தும் நோக்கியிருக்கிறான்; நடம் ஆட வைத்துக் களித்திருக்கிறான்; நடனம் ஆடும் விநாயகரை நர்த்தன விநாயகர் என்று நாம கரணமும் செய்திருக் கிறான்.

இந்த உலகமே ஒரு சுழற்சியில் வசப்பட்டது தானே. அதனால் உலகில் உள்ள எல்லா உயிர்களும் ஆடத்தானே செய்ய வேண்டும். உலகம் ஆட, உயிர்கள் ஆட, மேரு பர்வதம் போன்ற பெரிய பொருள்களும் ஆட, விசால மான ஆகாசத்திலே அண்டங்களும் ஆடுகின்றன. இறைவன் ஆடும் போது அப்போது உள்ளத்தோடு உள்ளமாய் கலந்து நிற்கும் விநாயகரும் ஆடுகிறார் என்கிறார் அதிகார அடிகள்.

**நிலந்துளங்க, மேருத் துளங்க நெடுவான்**
**தலந்துளங்க சப்பாணி கொட்டும் - கலந்து உளங்கொள்**
**காமாரி ஈன்ற கருங்கைக் கட தடத்து**
**மாமாரி ஈன்ற மணி.**

என்பது தானே பாட்டு. இந்த அற்புத தத்துவத்தை விளக்கும் அழகிய திரு உருவம் தான் நர்த்தன விநாயகர்.

இன்னும் அவரையே, மூஷிக வாகனத்தில் ஏறி சவாரி செய்து கொண்டு அவசரம் அவசரமாக எங்கேயோ ஓடும் கோலத்திலும் காணலாம். அப்படி ஓடும் கணபதி தான் வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோயில் கல்யாண மண்டபத் திலே ஒரு கல்தூணிலே இருக்கிறார். அந்த கல்யாண மண்டபத்துச் சிற்பங்களை எல்லாம் கண்டு களித்த மேலை நாட்டு ரஸிக வைஸ்ராய் ஒருவர் மண்டபத்தையே பெயர்த்து, தூண்களை எல்லாம் எடுத்து கப்பல் ஏற்றி, ஆங்கில நாட்டுக்குக் கொண்டு போய் அங்கே மண்டபத்தைத் திரும்பவும் கட்டி முடிக்கத் திட்டமிட்டு விட்டார். இந்த திட்டம் நிறைவேறாமல் போகத்தான் இத்தனை விரைவில் இந்த பிள்ளையார் ஓடியிருக்க வேண்டும். திட்டமிட்டபடி கப்பல் வந்து சேரவில்லை. கல்யாண மண்டபமும் கப்பலில் ஏற வில்லை, எல்லாம் இந்த மூஷிக வாகனர் செய்த வேலை காரணமாகத்தான்.

இன்னுமொரு திருவுருவம் ஹேரம்ப கணபதி என்ற பெயரோடு. இவரையே பஞ்சமுக விநாயகர் என்று அழைக்கிறார்கள் மக்கள். ஒற்றை முகமும், ஒரு கோடும் உடையவர், மூஷிக வாகனத்தில் சவாரி என்றால், ஐந்து முகமும் அதற்கேற்ற கரங்களும் உடையவர் ஏறிச் சவாரி பண்ண வேண்டுவது சிம்ம வாகனத்தில் தானே? இந்தத் திருவுருவத்தை எல்லா இடத்திலும் காண்பது இயலாது. செப்பு விக்கிரக உருவில் ஒன்றிருக்கிறது. நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி அம்மன் கோயிலிலே. இந்தத் திருவுருவங்களோடு வைத்து எண்ணப்பட வேண்டியவரே பிள்ளையார் பட்டிப் பிள்ளையார்.

பிள்ளையார் பட்டியில் அமைந்துள்ள விநாயகர் திருவுருவத்துக்குச் சில சிறப்பியல்புகள் உண்டு. இங்குள்ள விநாயகரது துதிக்கை வலம் சுழித்து, அவருக்கு வலம்புரி விநாயகர் என்ற பெயரைத் தேடித் தருகிறது. எல்லா இடத்தும் நான்கு திருக்கரத்தால் நான்கு திக்கிலும் ஆட்சி செய்பவர், இங்கு இரண்டே திருக்கரத்தால் விண்ணையும் மண்ணையும் ஆட்சிக்குள் கொண்டு வந்து விடுகிறார். அங்குசமும் பாசமும் இல்லாமலே அடியவரை ஆட்சி கொள்ளும் சக்தி உடையவராக இருக்கிறார். வயிற்றை ஆசனத்தில் படியவிடாமல் அர்த்த பத்மாசனத்திலேயே கால்களை மடித்திருக்கச் செய்து கொள்கிறார். வலக் கரத்தில் மோதகம் தாங்கி, இடக்கரத்தை இடையில் பொருத்தி பெருமிதத் தோற்றத்தோடு காட்சி கொடுக்கிறார். ஆம், ஆதிநாளிலே இப்படி இரண்டு திருக்கரத்தோடு உருவானவர்கள் தான், பின்னர் நான்கு திருக்கரங்களோடு எழுந்து நின்று, நடந்து நடமாடி மூஷிகத்திலும், சிம்மத்திலும், ஏறிச் சவாரி செய்பவராகக் கலைஞன் சிந்தனையிலே வளர்ந்திருக்கிறார்.

இந்த பிள்ளையாரைப் பற்றித்தான் எத்தனை எத்தனை கதைகள். சிவபுராணம், விநாயக புராணம், காஞ்சிப் புராணம் முதலிய நூல்களில், ஒரு சில கதைகள் ரஸமானவை; நல்ல அனுபவத்தின் அடிப்படையிலே உருவானவை; சிறந்த உண்மைகளை உணர்த்துபவை.

நம் நாட்டின் இதிகாசங்கள், இராமாயணம், பாரதம் என்பதை எல்லோரும் அறிவர், பாரதத்தை இயற்றியவர் வியாசர் என்பதையும் தெரிவோம். அந்த வியாசருக்குக் கற்றுச் சொல்லியாக அமைந்து பாரதத்தையே எழுதியவர் விநாயகர் என்பது வரலாறு. பாரதத்தை எழுதத் திட்ட மிட்டார் வியாசர்.

அதை அவர் சொல்லும் வேகத்தோடு வேகமாய் விரைவாய் எழுத வேண்டுமே. அதற்கு ஒரு ஆள் தேடினார். நல்ல அறிவுடைய பிள்ளை, ஆற்றல் மிகுந்த பிள்ளை, விநாயகரையே தேர்ந்தெடுத்தார். எண்ணா யிரத்து எண்ணூறு சுலோகங்கள் விரைவாகச் சொல்லிக் கொண்டே போனார் வியாசர்; எழுதிக் கொண்டே வந்தார் வினாயகர். இடையே எழுதும் கோல் கூர் மழுங்கி எழுத்து வேகம் தடைப்பட்டது.

ஆனால் ஏகாக்கிர சித்தத்தோடு சுலோகங்களைச் சொல்லிக் கொண்டு வந்த வியாசரோ நிறுத்தவில்லை. வினாயகரோ அவரது உணர்ச்சி வேகத்தைத் தடை செய்ய விரும்பவில்லை. எழுத்தாணி கூர் மழுங்கியதை அப் படியே தூர எறிநது விட்டு, தன்னுடைய கொம்புகளில் ஒன்றையே ஒடித்து எழுத்தாணியாக்கிக் கொண்டு தொடர்ந்தே எழுதி முடித்தார் பாரதத்தை. நல்ல ரஸமான கதை. 'சோர்வில்லாமலே எக்காலத்தும் பிள்ளைகள் படிக்கவும் எழுதவும் வேண்டும்' என்று எடுத்துக் காட்டும் நல்ல பிள்ளையாக அல்லவா பிள்ளையார் அமைந்து விடுகிறார். அதனால் தான் பிள்ளையார் இன்றும் பிள்ளை

களின் தெய்வமாகவே வாழ்கிறார், வணங்கப்படு கிறார்.

பிள்ளைகளுக்கு உகந்தவராக மட்டும் பிள்ளையார் இல்லை. நாட்டு மக்களுக்கும் நல்லவராக நடந்திருக்கிறார். ‘கங்கை யென்னும் கடவுள் திருநதியையே காவிரியாகத் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்தவரும் அதனால் நாடு நலம் பெறச் செய்தவரும் அவரே தான். கதை இது தான்.

கயிலை மலையிலே திருக்கல்யாணம், பார்வதி தேவிக்கும், பரமசிவனுக்கும். தேவர்களும் மற்றவர்களும் திருமணம் காண கூடிவிட்டார்கள் அங்கே. அதனால் வட நாடு தாழ்ந்து தென்னாடு தூக்கி விட்டது. நாடு சமன் செய்யப்பட வேண்டும் உடனே, என்று கருதினார் பரமசிவன். கல்யாணத்துக்கு வந்த விருந்தினர்களைத் திருப்பி அனுப்புவதோ இயலாத காரியம். ஆதலால் தன்னை யொத்த தவவலிமை உடைய அகத்திய முனிவரையே தென் திசை செல்லுமாறு பணித்தார்.

அகத்தியரும், புறப்படும் போது பரமசிவனது திரு முடியில் உள்ள கங்கையை தன் கமண்டலத்தில் ஏந்தி தன்னுடன் கொண்டு வர மறக்கவில்லை. வருகிற வழியில் நித்திய கர்மங்களை முடிக்க வேண்டி தன் கமண்டலத் தைத் தரையில் வைத்தார். சமயம் பார்த்துக் கொண்டிருந்த விநாயகர் இது தான் தக்க தருணம் என்று எண்ணி, காக உருவில் வந்து கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டார். ஒடிப்பெருகியது கங்கை தமிழ் நாட்டில். காகத்தால் கவிழ்க்கப்பட்ட கங்கைதான் அன்று முதல் காவிரியானாள் தமிழ் நாட்டில். ‘காகம் கவிழ்த்த காவிரிப்பாவை’ எனப் பாடப்பெறும் பேறும் பெற்றாள். இதனால் நாடு வளம் உற்றது. சோழ வளநாடு சோறு பெற்றது. ஆம், எல்லாம் விநாயகர் அருளினால்தான்.

தமிழ் நாட்டில் பிள்ளையாரை வணங்கி வீடு பெற்றவர்கள் கதை அனந்தம் என்றாலும், வாழ்வோடு வாழ்வாக பிள்ளையாருடன் ஒட்டிக் கொண்டவள் ஔவைப் பிராட்டி. இளமையிலேயே பிள்ளையார் வணக்கம் அவள் உள்ளத்தில் ஊன்றி விட்டது.

**வேழ முகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு மிகுத்து வரும்.**

என்று தமிழ் நாட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் போதித்தவர் அவர் தான்.

**"சீதக் களபச் செந்தா மரைப்பூம்**
**பாதச் சிலம்பு பலவிசை பாடப்**
**பொன்னரை ஞானும் பூந்துகில் ஆடையும்**
**வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்**
**பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்**
**வேழ முகமும் விளங்குசிந் தூரமும்**
**அஞ்சு கரமும் அங்குச பாசமும்**
**நெஞ்சிற் குடி கொண்ட நீலமேனியும்**
**நான்ற வாயும் நாலிரு புயமும்**
**மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்**
**இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்**
**திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்**
**சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான**
**அற்புதம் நின்ற கற்பகக் களிறே"**

என்றெல்லாம் பாடி விநாயக வணக்கத்தைத் தமிழர்கள் உள்ளத்தில் எல்லாம் ஊன்றச் செய்தவரும் அவரே தான். அவர் முக்தியடைந்ததும் அந்தப் பிள்ளையார் மூலமே தான். கதை நல்ல அற்புதமான கதை.

சேரமன்னர், சேரமான் பெருமாள் நாயனாரும், அவரது தோழர் சுந்தரமூர்த்தி நாயனாரும் நாட்டில் செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்து முடித்த பின்னர், கயிலாயம் நோக்கிப் புறப்பட்டனர். இருவரும் சென்றனர் யானைமீதும், குதிரை மீதும் ஏறிக்கொண்டு. செல்லும் வழியில் ஔவையைக் கண்டனர். அந்த அம்மையையும் உடன் வர அழைத்தனர். அம்மையோ அப்போது விநாயகருக்குப் பூசை செய்து கொண்டு இருந்தார். நண்பர் களுடன் எளிதாகக் கயிலாயம் செல்லலாமே என்ற ஆசை ஔவையாருக்கு. ஆதலால் விரைவிலேயே பூசையை நடத்திவிட முனைந்தார். ஔவையாரின் அவசரத்தை அறிந்த பிள்ளையார் 'ஏன் பாட்டி! இத்தனை அவசரம் இன்று?' என்று கேட்டார். விஷயத்தைச் சொன்னார் ஔவையார். 'அடடா' அதுதானா? உன் நண்பர்களைப் போகச் சொல். அவர்கள் அங்கு செல்லுமுன் நான் உன்னைக் கைலாயம் கொண்டு சேர்க்கிறேன் என்றார். அவசரப்பட்ட சேரமானும் சுந்தரரும் சென்று விட்டார்கள். அம்மையும் நிதானமாகவே பூசை செய்தார். பூசை முடிந்ததும் அப்படியே அம்மையைத் தன் தும்பிக்கையா லேயே அநாயசமாகத் தூக்கி, கயிலாயத்திலே இறக்கி விடு கிறார் பிள்ளையார். ஔவையாரும் கைலாய வாசலிலே நின்று முன் சென்ற சேரமானையும், சுந்தரரையும் 'வருக! வருக!' என வரவேற்கிறார். 'எப்படி இந்த ஔவையார் தமக்கு முன் கயிலாயம் வந்து சேர்ந்தார்?' என்று அறியாது திகைத்தனர் இருவரும்.

ஆம், பிள்ளையாரைப் பின் பற்றினால் கயிலாயம் சேர்வது எளிதாகவும் இருக்கும். விரைவாகவும் நடக்கும் என்று தெரிந்தனர், அவர்கள் இருவரும் அன்று. அதையே நாமும் தெரிந்து கொள்கிறோம் இன்று.

இன்னுமொரு கதை. சிதம்பரத்தை அடுத்த திருநாரையூரிலே உள்ள பிள்ளையார் பொல்லாப் பிள்ளையார். பொல்லா என்பதனால் அவர் ஒரு பொல்லாத பிள்ளை அல்ல. சிற்றுளியால் பொள்ளப்படாத சுயம்பு மூர்த்தி என்பதனால் தான். அவரைப் பொள்ளாப் பிள்ளையார் என்று மக்கள் அழைத்தனர். நாளாவட்டத்தில் பொள்ளாப் பிள்ளை, பொல்லாப் பிள்ளையாகவே மாறிவிட்டார். உலக வழக்கில். ஆனால் இந்தப் பொல்லாப் பிள்ளை செய்த பொல்லாத வேலை காரணமாகவே, நமக்கு தெய்வம் மணக்கும் தேவாரப் பாக்கள் எல்லாம் கிடைத் திருக்கின்றன. திருநாரையூரிலே பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தவர் ஒரு அந்தணர். ஒரு நாள் வெளியூர் செல்ல விரும்பியபோது தன் மகனைப் பூசை செய்யும் படி பணித்துவிட்டுச் சென்றிருந்தார். பிள்ளை என்னத் தைக் கண்டான்? பூசையை முடித்து, நைவேத்தியத்தைப் பிள்ளையார் முன் வைத்து அவர் அதை உண்ண வேண்டி னான். அசையாது கல்லுப் பிள்ளையாராக இருந்தார் பொல்லாப் பிள்ளையார். பார்த்தான் அந்தணச் சிறுவன். 'உண்ணுகின்றீரா, இல்லாவிட்டால் உமது திருவடியிலே என் தலையை மோதி உடைத்துக் கொள்ளவா? என்றான். இப்படிச் சும்மா பயங்காட்டவில்லை. உண்மையாகவே தன் தலையை மோத முனைந்து விட்டான்.

பார்த்தார் பிள்ளையார். தும்பிக்கையை நீட்டி, வாயைத் திறந்து அவன் தந்த நைவேத்தியத்தை எல்லாம் வாங்கி வாங்கி உண்டார். இதை, ஊர் திரும்பிய தந்தை நம்பவில்லை முதலில். மறுநாள், நிகழும் அற்புதத்தைக் கண்டார். அவ்வளவு தான். பொல்லாப் பிள்ளையாருக்கு அமுதூட்டிய அந்தணச் சிறுவன் நம்பியாண்டார் நம்பியாகி விடுகிறான். சோழ மன்னர் ராஜராஜன் இந்த நம்பியை வந்து கண்டு வணங்குகிறான். அவன் ஆர்வம் தீர, அந்தப் பிள்ளையாரே நம்பியிடம் திருமுறைகள்

இருக்கும் இடத்தையும், அதைப் பெறும் வகையையும் எடுத்துரைக்கிறார். சிதம்பரத்திலே சமயகுரவர் மூவரும் கைசாத்திட்டு வைத்திருந்த அறையில் இருந்த திருமுறை அம்பலத்துக்கு வந்து விடுகிறது.

நாட்டுக்கு வேண்டும் அற்புதமான பாக்கள் அனைத்தும் கிடைத்து விடுகிறது நமக்கு. பொல்லாப் பிள்ளை யாரும் திருமுறை கண்ட பிள்ளையார் என்ற புதிய பட்டத்தையும் தட்டிக்கொண்டு போய் விடுகிறார். நாடு நலம் பெற, காகம் கவிழ்த்து காவிரி கொணர்ந்தவரே, மக்கள் உள்ளம் இறைவனிடம் ஈடுபடத் திருமுறைகளை யும் தேடியெடுத்துக் கொடுத்து விடுகிறார்.

கணபதியின் பிள்ளைவிளையாட்டிலே சிறந்தது கஜமுகாசுரனை வென்றது தான். அசுர குலத்திலே, மாகத முனிவருக்கும் விபுதைக்கும் மகனாக கஜமுகாசுரன் பிறக்கிறான். வழக்கம் போல் தேவர்களை எல்லாம் துன் புறுத்துகிறான். தேவர்கள் சிவனிடம் முறையிடுகிறார்கள். தேவர் குறை தீர்க்கத் திரு உளம் கொண்ட சிவபிரான், தன்னுடைய அம்சத்திலே கணபதியைச் சிருஷ்டிக் கிறார்.

யானை முகத்தோடும், ஐந்து திருக்கரங்களோடும், மூன்று திருக்கண்களோடும் அவதரித்த இந்தப் பிள்ளை யைச் சிவகணங்களுக்கு எல்லாம் தலைவனாக்குகிறார் சிவபெருமான். கணங்களுக்கு எல்லாம் தலைவனாய் அமர்ந்த கணபதி கஜமகாசுரனுடன் போர் தொடுக்கிறார். கஜமுகனே எத்தனையோ மாயைகளை நிகழ்த்தி கடும் போர் புரிகிறான். கடைசியில் பெருச்சாளி வடிவோடு வந்த போது, அவனை அடக்கி அவன் மேலேயே ஆரோ கணித்து, தன்னை அன்று முதல் சுமக்கச் செய்து விடுகிறார்.

கஜமகாசுரன் தேவர்களை எல்லாம் அடக்கி ஆண்ட பொழுது, அவன்றன் கொலுவில், அவன் தேவர்களை எல்லாம் அடிமைகளாக நடத்தி, தங்கள் தங்கள் தலையில் மும்முறை குட்டி, இரண்டு கைகளாலும் எதிராக காதுகளைப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் போடச் செய்து வந்தான். இப்படி கஜாமகாசுரன் முன்பு செய்து கொண்டதைத்தான், கணபதி கஜமுகாசுரனை வென்று அடக்கிய பின்பும் அவர் முன் செய்யத் தலைப்பட்டனர். இப்படித் தேவர் செய்யும் திருத்தொண்டு கணபதிக்கு உகந்ததாயிருந்தது.

அதனால் தான், இன்றும் கணபதியை வணங்குவோர் தலைகளில் குட்டிக் கொண்டு, காதைப் பிடித்துத் தோப் புக் கரணம் போட்டு வணங்குகின்றனர். ஆணவம் மிகுந் துள்ள ஆடவர் எல்லாம் இப்படி குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதாலேயே, தன் முனைப்பு நீங்கினவர்களாய், என்றும் இறைவனுக்கே ஆட்படும் பேறு பெறுகிறார்கள் அல்லவா? ஆண்டவன் சந்நிதி யிலே தன்முனைப்பு நீங்கத்தானே தரையில் விழுந்து வணங்குகிறோம்; தோப்புக்கரணம் போடு கிறோம்.

இன்னும் எத்தனையோ கதைகள் விநாயகரைப் பற்றி. கதைகளைக் கதைகள் என்ற அளவில் மட்டும் படிக் காமல், கதை எந்த அடிப்படையில், எந்த தத்துவத்தை விளக்க எழுதியிருக்கிறது என்று தெரிந்து கொள்வோ மானால் - தெரிந்து கொள்ள முயல்வோமானால் - சமய உலகில் இருக்கும் குழப்பங்கள் தீர்ந்து விடும். தமிழன் கண்ட கடவுள், ஏதோ ஒரு நாளில், ஒரு வருஷத்தில் உருவானவர் அல்ல.

நீண்ட காலமாக கலைஞர்கள் சிந்தித்துச் சிந்தித்து 'உள்ளக் கிழியில் உரு எழுதி' அதன் பின் தான்

பாக்களில், சித்திரத்தில் சிற்பத்தில் எல்லாம் உருவாக்கி இருக்கிறார்கள். அப்படி உருவானவர்களில் தலை சிறந்தவர் தான் ஆனை முகப் பெருமான். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் ஏன்? கடல் கடந்தும் சென்று மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் இடம் பெற்றிருக்கிறார் அவர். நாட்டுக்கு நாடு அவர் வேறு வேறு திரு உருவங்களில் அமைந்திருக்கிறார் என்றால் அது அந்த அந்த நாட்டு மக்களின் சிந்தனையிலும், கற்பனையிலும் உருவான தோற்றங்கள்தான். 'கற்பனை கற்பித்த கடவுளாம்' கற்பக விநாயகர் 'அவரவர் தமது தமது அறிவு அறிவு வகை வகை' யாகத்தானே கோலம் கொள்ள முடியும்; அருள் பாலிக்க இயலும்.

# சிற்ப வடிவில் ஒரு புதிர்

பத்து வருஷங்களுக்கு முன் நான் தஞ்சையில் இருந்தேன். அப்போது என்னுடன் இணை பிரியாது இந்தவர்கள் இரண்டு நண்பர்கள் (ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது அல்லவா). நான் தஞ்சைக் கலைக் கூடம் அமைக்கும் போது கூடவே இருந்து, நான் தேடி எடுத்து வரும் சிற்பங்களின் அழகை எல்லாம் அனுபவிப்பார்கள். நான் சொல்லும் விளக்கங்களை கேட்டு மெய் மறப்பார்கள். நானும் இவர்களை தஞ்சை மாவட்டத்தில் பல பாகங்களுக்கும் கூட்டிச் செல்வேன். பல கோயில்களுக்கும் செல்வோம். அங்கு இருக்கும் சிற்பங்களின் அழகை எல்லாம் கண்டுகளிப்போம்.

இப்படி கலை அனுபவத்தில் ஒரு நாள் நாங்கள் மூவரும் கும்பகோணத்தை அடுத்த தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலுக்குப் போனோம். அக்கோயில் இரண்டாம் ராஜ ராஜன் கட்டியது. அங்குள்ள ராஜகம்பீர மண்டபத்தில் எண்ணிறந்த சிற்பவடிவங்கள் இருக்கின்றன என்றெல்லாம் அவர்களுக்குச் சொல்லியிருந்தேன். சரியென்று கோயிலுள் நுழைந்து ராஜ கம்பீர மண்டபத்துக்கு இட்டுச் செல்லும் படிக் கட்டுகளை நோக்கி நடந்த போது கிழக்கே பார்த்த கோஷ்டத்தில் ஒரு சிலை, மூன்று முகம், எட்டுத் திருக்கரங்களோடு இருந்தது.

அத்துடன் அவ்வடிவின் பாதிப்பாகம் பெண் வடிவு என்று காட்டத் தக்க வகையில் விம்மிப் பெருத்த ஒரே மார்பகம். இடுப்பிற்கு கீழே மடி மடியாய்த் தொகுத்துக்

கட்டியிருக்கும் சேலை காலிலே பாதசரம் எல்லாம் இருந்தது. சிலை எந்த மூர்த்தத்திற்காக எடுத்தது என்று எனக்கு விளங்கவில்லை. நண்பர்களை பார்த்து இச்சிற்பம் எந்த வடிவத்தை விளக்குகிறது என்று. உங்களுக்குத் தெரிகிறதா என்று கேட்டேன். அவர்கள் சிறிதும் தயங்காமல் இது அர்த்த நாரியின் வடிவம்தான் என்றனர். உடன் வந்திருந்த அர்ச்சகரும் ஆமா, ஆமா இது அர்த்த நாரீஸ்வர மூர்த்திதான் என்றார்.

நான் கேட்டேன். ஒற்றை மார்பகமும் உடுத்தியிருக்கும் ஆடையையும் வைத்து நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். அர்த்தநாரீஸ்வரருக்கு ஏது மூன்று முகம்; ஏது எட்டுக் கரங்கள் என்றேன். நண்பர்களும், அர்ச்சகரும் விழிக்க ஆரம்பித்தார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். ஆமா சார்! இவைகளை நாம் கவனிக்கவில்லையே. இது அர்த்த நாரீஸ்வர மூர்த்தம் போலவும் இருக்கிறது. அயனும் அரியும் அதனுள் அடங்கியவர்கள் தானே. அதனால் அர்த்த நாரீஸ்வரர் என்னும் அந்த மூர்த்தத்தில் பிரம்மாவையும், விஷ்ணுவையும் இணைத்து சிற்பி உருவாக்கி இருப்பாரோ என்று என்னிடம் கேட்டார்கள். எனக்கொன்றும் சொல்ல முடியவில்லை. ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியாமல் தஞ்சை திரும்பினோம்.

வீடு திரும்பியதும், வீட்டில் இருந்த சிற்ப நூல்களையெல்லாம் புரட்டினேன். இந்திய விக்கிரகங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதியிருக்கும். T.A. கோபிநாதராவ் அவர்களின் புத்தகங்கள் நான்கையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தால், இப்படி ஒரு வடிவத்தை அவர் வெளியிடவும் இல்லை. அதற்கு விளக்கமும் கூறவில்லை. கஸ்யப சில்பம் என்னும் புத்தகத்தில் புரட்டினால் அங்கும் ஒரு விளக்கமும் கிடைக்கவில்லை.

H.கிருஷ்ண சாஸ்திரி எழுதியிருக்கும் 'தென்னிந்தியக் கடவுளரும் அவர்களது துணைவியரும்' என்ற புத்தகத்தில் இந்த வடிவத்தின் படம் இருந்தது. சரி கிடைத்து விட்டது என்று துள்ளிக் குதித்து விளக்கத்தைப் படித்தால் என் நண்பர்கள் சொன்னபடி அது அர்த்த நாரீஸ்வர வடிவம் என்றே எழுதி இருந்தது. இதைப் பார்த்து நண்பர்கள் குதூகலிப்பார்கள் என்று நினைத்தேன். நான் நினைத்ததற்கு மாறாக அவர்களும் என்னுடன் சேர்ந்து, இந்த விளக்கமும் சரியானதில்லை, தப்புத்தான் என்றார்கள்.

அதன் பின் விளக்கங்கள் வேண்டி சரஸ்வதி மகால் அர்ச்சகரைக் கேட்டேன். சுவாமி மலையில் உள்ள சிற்பக் கலைஞர்களைக் கேட்டேன். நான் எடுத்த புகைப் படத்தையும் காட்டிக் கேட்டேன். எல்லோருமே பரக்கப் பரக்க விழித்தார்களே ஒழிய, சரியான விளக்கம் சொல்பவர்களைக் காணோம்.

இப்படியே நானும் பல நாளாய் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்து விட்டு, கடைசியில் ''இது ஒரு புரியாத புதிர்'' என்றே விட்டு விட்டேன். தேவர் மூவர் என்பது போல தேவியர் மூவர். அவர்களே கலைமகள், அலைமகள், மலை மகள் எனப்படுவர் என்பதை அறிவோம். இம்மூவரும் சேர்ந்து இணைந்த வடிவமே பராசக்தியின் வடிவம் என்று அறிஞர் கூறக் கேட்டிருக்கிறேன். இப்பராசக்தியே, தேவர் மூவருக்கும் தேவியர் மூவருக்கும் மேலான ஒரு சக்தி வாய்ந்த தெய்வம் என்றும் விளக்கங்களாக படித்திருக்கிறோம். இப்படி எண்ணங்களைச் சுழல விட்டுக் கொண்டிருக்கும் போது நான் முன்னர் எப்போதோ படித்த பாட்டு ஒன்று என் ஞாபகத்திற்கு வந்தது.

**மூவர்கற்கும் முதற் பொருளாய்**
**முத்தொழிலுக்கும் வித்தாகி**
**நாவிற்கும் மனத்திற்கும்**
**நாடறிய பேரறிவாய்**
**தேவர்களும் முனிவர்களும்**
**சித்தர்களும் நாகர்களும்**
**யாவர்க்கும் தாயாகும்**
**எழிற் பரையை வணங்குவாம்**

என்ற பாடலைப் படித்த உடனே விஷயம் விளங்க ஆரம்பித்தது.

கற்பனைத்திறன் மிகுந்த சிற்பி ஒருவன், திரி மூர்த்தி வடிவம் ஒன்றை வடிக்க திட்டமிட்டு வேலையை ஆரம்பித்திருக்கிறான். வடிவத்தைச் செதுக்கும்போது முன்னோக்கியிருந்த ஒரு முகத்தில் பெண்மையின் சாயல் எப்படியோ அமைத்துவிட்டதை உணர்ந்திருக்கிறான். சரி அவ்வடிவத்தைப் பராசக்தியின் வடிவமாகவே அமைத்து விடுவோமே என்று எண்ணியிருக்கிறான். இன்னும் அவனது சிந்தனை விரிவடைந்திருக்கிறது. திரிமூர்த்திகளும் திரிமூர்த்தியர் துணைவியர் பராசக்தி எல்லோரும் இணைந்து நிற்கும் ஒரு விசுவ ரூபக் காட்சியாகவே ஆக்கினால் என்ன என்று எண்ணிருக்கிறான். அதற்கு என்ன செய்வது. இறைவனும் இறைவியும் இணைந்து நிற்கும் அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்தையும் இந்த வடிவில் இணைத்து விட்டால் தன் எண்ணம் பூர்த்தியாகும் என்று சிந்தித்திருக்கிறான்.

இப்படித்தான் இந்த விசுவரூபம் உருப் பெற்றிருக்க வேணும். கடைசியில் கலைஞன் எண்ணத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்த விஸ்வ ரூபக் காட்சியே இது என்று தீர்மானத்திற்கு வந்தேன். இது தான் முடிந்த முடிவு என்று

கூற நான் முனையவில்லை. இதை விடப் பொருத்தமாகப் பலரும் ஒப்புக் கொள்ளும் ஒரு விளக்கத்தை யார் தந்தாலும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன்.

நான் சொல்லும் விளக்கத்தை பல கலா ரசிகர்களிடமும், சிற்பக் கலைஞர்களிடமும் சொல்லிப் பார்த்திருக்கின்றேன். ஒருவரும் இதை மறுக்கக் காணோம். ஆகவே இந்த புரியாத புதிரை விடுவித்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். என் எண்ணம் சரிதானா என்ற கேள்வி இன்னும் என் மனதில் இருக்கத்தான் செய்கிறது.

# காதல் கடவுள் கல்லுருவிலே

காதல் என்றால் என்ன? அது என்ன ஒரு பண்டமா? கடைச்சரக்கா! விலைக்குக் கிடைக்குமா? இல்லை விலை மதிக்க முடியாத ஓர் அற்புதப் பொருளா? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் விடை எளிதாகக் கூறி விட முடியுமா என்ன! அப்படி முடியாது தான். ஒருத்தி ஆம், காதல் நோயால் தவிப்பவள் தான், தன் தோழிக்கு விளக்க முனைகின்றாள். அவளோர் கட்டழகன் மதுரை வீரனிடத்து தணியாதக் காதல் கொண்டவள். அவன் அவளுக்குத் தந்த காதல் நோயை அழகாக வர்ணிக்க முற்படுகின்றாள்.

**மைக்கருங் கண் மாதரார்**
**மனங் கவர்ந்த மார வேள்**
**மதுரை வீர தஞ்சுகன்**
**மணந்து தந்த காதல் நோய்**

என்று அழகான முன்னுரையோடு ஆரம்பிக்கிறாள். பின்னும் பேசுகிறாள், அந்தக் காதல் நோய்.

**கைக்குள் வந்தகப்படாது**
**கண்முன் நிற்கும்;**
**ஒருவரால் காணொனாதது;**
**தானும் என்று காட்டொணாதது**

என்றெல்லாம் திணறித் திணறிச் சொல்லிவிட்டு பின்னும் சொல்கிறாள்.

**அது அன்றியும்**
**ஒக்கும் என்றும் உரைக்கலான**
**உரையும் இல்லை.**

என்றே முடிவு கட்டி விடுகிறாள். அப்படி எல்லாம் பேசியவள்தான், கடைசியாக. அந்தக் காதல் நோயை - இருவரும்

**உள மறிந்த தன்றி மற்று இவ்**
**ஊரறிந்த தில்லையே,**

என்று முடிக்கிறாள் - உண்மைதானே! காதலை கைக்குள் அடக்கிக் காட்டிவிட முடியுமா, இதோ அதைப் பாருங்கள் என்று. அதன் காதைப் பிடித்து திருகி. எல்லோருக்கும் காதல் என்றால் என்னவென்று தெரியும். என்றாலும் ஒருவர் கண் முன் கொண்டு வந்து நிறுத்திவிட முடியுமா? இல்லை. அதைப் போலத்தான் இருக்கும் என்று உவமையாவது கூறி விளக்க முடியுமா? முடியாது தானே. அதன் தன்மையை இருவர் உள்ளம் மட்டுமே அறியும். ஊரார் அறிவது என்பது சாத்தியமா என்ன?

அப்படி அறிந்து விட்டால் அதைப் பற்றிதான் இத்தனை பேச்சேது? அதனைச் சுற்றிச் சுற்றி இத்தனை காவியங்கள் எழுவது ஏது? இதை யெல்லாம் தெரிந்து தானோ என்னவோ காதல் கடவுள் காமனையும் உருவமில்லாத ஒருவன் என்று வர்ணித்து விட்டார்கள் கவிஞர்கள். இப்படி உருவமில்லாத ஒருவன் சும்மா இருக்கிறானா என்றால், அதுவும் தான் இல்லையே.

தென்றல் தேரில் ஏறிக் கொள்கிறான். கரும்பை வில்லாய் வளைக்கிறான். மலர் அம்பை விடுகிறான். இரண்டு இதயங்களைச் சேர்க்கிறான். இல்லை ஒருவரது இதயத்தை மற்றொருவரிடமிருந்து பிரித்து இருவரையும் துடிதுடிக்க செய்கிறான். உருவமில்லாத போதே இத்தனை செய்கிறானே. அவனுக்கு உருவமும் இருந்து விட்டால்!



இந்த உருவமில்லாத காதற் கடவுளை உருவாக்கு கிறான், தமிழ் நாட்டில் சிற்பி ஒருவன். ஒரே குதிரையும் ஒரே சக்கரமும் பூட்டிய கல் தேர் ஒன்று. அந்தத் தேர்த் தட்டில் அற்புத அழகோடு கூடிய தன் காதலி ரதியையும் அணைத்துக் கொண்டு கரும்பு வில்லையும் ஏந்திக் கொண்டு புறப்படுகிறான். போர்க்கோலத்தில் இப்படி ஒரு சிலை இன்று தஞ்சைக் கலைக் கூடத்தில் இருக்கிறது. அதைத்தான் பார்க்கிறீர்கள் படத்திலே - இந்தச் சிலா உருவைக் கண்ட ஒரு கவிஞன்.

**காதற் கடவுள் காமனுமே**
**காதலி ரதியுடன் தேர் ஏறி**
**காதலை வளர்க்க விரைகின்றான்**

என்று பாட ஆரம்பித்தவன் கடைசியில், இனி வேதனை உறுபவர் எத்தனையோ என்று முடிக்கிறான். ஆரம்பத்தில் வேதனைப்பட்டுத் தானே பின்னால் இன்பம் காண முடியும். அதுதானே காதல் தத்துவம்.

மேலும் இந்தச் சிலை உருவில் காமனையும் ரதியையும் ஒன்றாக இணைத்திருப்பது ஓர் அற்புதமான உண்மையை விளக்குகிறது. இரண்டு இதயங்கள் சேராத இடத்து காதல் இல்லை. மன்மதன் இல்லாமல் ரதி இல்லை. ரதி இல்லாமல் மன்மதன் இல்லை. இருவரும் பிரிந்து நின்றால் காதலே இல்லை. இணைந்து நின்றால் காதல் மட்டும் தானா - எல்லாம் உண்டுதான். காதலின்

தத்துவத்தை அற்புதமான ஒரு ஆங்கிலப் பாடலில் வெளியிடுகிறான் - காதல் கவிஞன் - ஷெல்லி. அந்த ஆங்கிலக் கவிதை மலரை தமிழ் மணத்துடன் அளிக்கிறான் ஒரு கவிஞன். ஆம் தமிழர்களுக்குத்தான்

**நீண்டு வளர்ந்த நெடு முடியை நிதம்**
**நீருண்ட மேகம் தழுவலையோ**
**நீலக் கடலிற் புரண்டு வரும் திரை**
**போய் ஒன்றொன்றனை கவ்வலையோ**
**ஓடும் சிறு நதி ஆடி வந்தே கடல் -**
**ஓடு கலந்து குலாவலை யோ**
**ஓல மிடும் வண்டும் கோல மலர்களில்**
**ஒன்றியிருந்து தேன் உண்ணலையோ**
**இந்நிலம் தன்னிலே தன்னந் தனியாக**
**எய்திடும் ஒருயிர் எங்கு முண்டே**
**என்னைக் கலந்து நீயின்பந் தராவிடில்**
**யாது பொருள் இந்தக் காதலுக்கே**

என்றெல்லவா கேட்கிறான். அப்படித் தன் காதலியைக் கேட்டுக் கொண்டேதானே காதற்கடவுள் - கல்லுருவில் காட்சி கொடுக்கிறான்.

# அனுமனது விசுப ரூபம்

**பிறப்பு நிலை கேடு**
**இவையாவான்; பாவம்**
**அறத்தினொடு ஐம்பூதம்**
**ஆவான் - உறற்கரிய**
**வானாவான் மண்ணாவான்**
**மன்னுயிர்கள் அத்தனையும்**
**தானாதல் காட்டினான் தான்**

என்று கீதா ரகஸ்யத்தையே உரைக்கின்றார், பெருந் தேவனார், தான் இயற்றிய பாரதத்தில், தேர்தட்டின் மீது திகைத்து வாள்த்தடக்கை வில்நெகிழ வாளா இருந்திட்ட அர்ச்சுனனுக்கு "எல்லாம் நானே ஆதலால் பலன் கருதாது உன் கருமத்தைச் செய்" என்று உபதேசிக்கிறார் பகவான். இந்த கீதோபதேசத்தை, அருச்சுனனைத் தவிர வேறு ஒரு நபரும் அதே சமயத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் தான், பார்த்தனுடைய ரதத்தின் கொடியில் அமர்ந் திருந்த அனுமார். அவரோ கீதோபதேசம் கேட்கு முன்பே எல்லாவற்றையும் "பாராயணம்" செய்யும் மனப் பக்குவம் பெற்றிருந்தவர்.

ஆதலால், கீதாவிற்கு விளக்கம் சொல்லுவதில் கீதாச் சிரியனையும் மிஞ்சி விடுகிறார். கீதார்த்தமு என்று தொடங்கும் கீர்த்தனத்தில் பக்த தியாகராஜர். அனுமன், அர்ச்சுனனுடைய தேர்க் கொடியில் வீர புருஷனாக இருந்து கீதோபதேசத்தைக் கேட்டதே ஒரு அழகான கதை. கதை இதுதான்.

சிரஞ்சீவிப் பட்டம் பெற்றவன் அனுமன், ஆதலால் ராமனை விட்டுக் கடைசியாகப் பிரிகிற போது எல்லாக் காலத்திலும் தான் வாழ்ந்தாலும், ராமனுக்கு அத்தகைய நிலைத்த வாழ்வு இல்லையே. ஆதலால் அவனை எப் பொழுதுமே காணும் வாய்ப்புப் பெறுவது எங்ஙனம் என்று ஏங்கியிருக்கிறான்.

அப்போது ராமன், அவனுக்கு அடுத்த யுகத்திலும் ராமனாகவே காட்சி கொடுப்பதாக ஒத்துக் கொண்டு விடுகிறான். அனுமனும் அதே விருப்பத்தோடு அடுத்த யுகத்தில் சேதுக்கரைக்கு வந்து தவம் செய்கிறான். தீர்த்த யாத்திரை புறப்பட்ட அருச்சுனன் அதே சேதுக்கரைக்கு வருகிறான். ராம நாம பஜனம் செய்யும் அனுமனைப் பார்த்து 'என்ன உங்கள் ராமன் இந்தச் சொத்தைக் கடலை கடப்பதற்கு கல்லாலேயே ஓர் அணைகட்டியிருக்கிறான். நானாகயிருந்தால் என்னுடைய அம்புகளைக் கொண்டே ஓர் அஸ்திரபாலம் அமைத்து அதன் பேரிலே சேனையை நடத்தி கடல் கடந்திருப்பேனே! என்று எகத்தாளமாகப் பேசுகிறான். அனுமனுக்கோ அசாத்திய கோபம். அவனும், "உன் அஸ்திரபாலம் என்னைப் போன்ற ஒருவனைக் கூடத் தாங்க வலியற்றதாக இருக்கும்" என்று மடக்குகிறான்.

அதைத் தான் பார்த்து விடுவோமே என்று அர்ச்சுனன் தன் அம்புகளைக் கொண்டே அரைக்கணத்தில் ஓர் அஸ்திர பாலத்தை அமைத்து விடுகிறான். அனுமனும் உடனே விசுவரூபம் எடுத்து, அந்தப் பாலத்தின் மேல் நடக்க ஆரம்பிக்கிறான். பாலமோ நொறுங்கித் துகள் துகளாகி விடுகிறது. அருச்சுனனுக்கோ அவமானம் தாங்க முடியவில்லை. தன் உயிர் துணைவனான கிருஷ்ணனை நினைத்துக் கொண்டே தீப்புகுந்து உயிரை விட்டுவிட விரைகிறான்.

அந்தச் சமயத்தில் வருகிறான் ஒரு வேதியன். அனுமன் அருச்சனன் இருவரையும் பார்த்து - அவர்கள் நடத்திய போட்டி விவரங்களைக் கேட்கிறான். 'என்ன! போட்டி என்றால் மத்தியஸ்தர் ஒருவரை வைத்துக் கொள்ளாமலா போட்டி போடுவது. சரி. நான் மத்தியஸ்தனாக இருக்கிறேன், திரும்பவும் அருச்சனன் பாலம் அமைக்கட்டும்' என்கிறான்.

அருச்சுனனும் பாலம் அமைக்கிறான், அம்புகளாலேயே திரும்பவும். அனுமனும் தன் விசுவ ரூபத்துடனே பாலத்தின் பேரில் குதிக்கிறான்; ஓங்கி மிதிக்கிறான். இந்தத் தடவை பாலம் நொறுங்கவில்லை. அசையாது நிற்கிறது. அனுமன் தலைகவிழ்கிறான். அந்சத் சமயத்தில் வேதியனாக வந்து மத்தியஸ்தம் பண்ணியவன், 'நானே ராமன்' என்று தன் உருவைக் காட்டுகிறான். அதே நேரத்தில் அருச்சுனனுக்கும் "நானே கிருஷ்ணன்" என்றுக் காட்டிவிடுகிறான். "எல்லாம் நானே" என்னும் கீதோபதேசம் அன்றே நடந்துவிடுகிறது இருவருக்கும். கடைசியில் அருச்சுனன் வேண்டிக் கொண்டபடி அனுமனும் பாரத யுத்தம் நடக்கும் போது அவனுடைய தேரில் கொடியாக அமைந்து, வெற்றி பெற உதவுவதாக வாக்களித்து விடுகிறான். திரும்பவும் விரிவாக நடக்கிறது கீதோபதேசம்.

போர்க்களத்தில் குறையாத வீரமும், அசையாத பக்தியும் உடைய அனுமனுமே கேட்கிறான் கீதோபதேசத்தை - அறிதற்கரிய விளக்கங்களை எல்லாம் பெறுகிறான். வீரத்திற்கும், பக்திக்கும் தலை சிறந்த எடுத்துக்காட்டு அனுமன். ஆதலால்தான், ராமாயண பாத்திரங்களிலே தலை சிறந்த ஒரு பாத்திரமாக அனுமன் அமைகிறான்.

"எவனிடம் உன்னிடம் இருப்பது போல் ஞாபகசக்தி, மனத்தெம்போடு கூடிய தைரியம், சிறந்த மதி நலம்,

ஆழ்ந்த சாமர்த்தியம் எல்லாம் நிறைந்திருக்கிறதோ, அவன் எல்லோரையும் வெல்லும் ஆற்றல் பெறுவான்'' என்று அனுமனைத் தேவர்கள் புகழ்ந்ததாக வான்மீகர் சொல்கிறார். இதைப் போலவே கவிச்சக்கரவர்த்தி கம்பனும், உத்தம கர்ம யோகிக்கு வேண்டிய மூன்று பெரிய பண்புகள் அனுமனிடம் வளர்வதாக குறிக்கின்றான். பிரம்மச்சாரியினுடைய புலனடக்கம், பிரமதேவனைக் காட்டிலும் மேம்பட்ட அறிவு, எல்லாவற்றிற்கும் மேலாக தருமத்தை நிலை நிறுத்தத் துடிக்கும் ஊக்கம், எல்லாம் நிறைந்திருந்தது அனுமனிடம். மாணியாம் வேடம் தாங்கி,

**மலர் அயற்கு அறிவு மாண்டு, ஓர்**
**ஆணியாய் உலகுக்கு எல்லாம்**
**அறம் பொருள் நிரப்பும் அண்ணல்**

என்பதுதானே கம்பன் உருவாக்கிக் காட்டும் அனுமன். அனுமன் ஒரு நவவியாகரண பண்டிதன். அவன் கல்லாத கலையே இல்லை. அவன் செய்யாத தொண்டும் இல்லை. கடல் கடந்து இலங்கை சென்று அசோக வனத்திடை தவம் செய்யும் தவமாம் தையலைக் கண்டு தொழுகிறான். ராமனுடைய பண்ணையில் அவன் ஏவின வேலையைச் செய்யும் பண்ணையாளாக, கூவின சத்தத்திற்கெல்லாம் பணி செய்யும் வேலைக்காரன் என்றே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான். அத்தகைய தொண்டு செய்யும் பாக்கியம் கிடைத்ததற்காக மகிழ்கிறான். அந்த மகிழ்ச்சியில் பேசுகிறான் சீதையிடம்.

**வண்ணக் கடலின் இடை இடந்த**
**மணலிற் பலரால் வானரங்கள்**
**எண்ணற்கரிய படைத்தலைவர்**
**இராமற்கு அடியார்; யான் அவர் தம்**

**பண்ணைக்கு ஒருவன் எனப் போந்தேன்
ஏவல், கூவல் பணி செய்வேன்**

இப்படி அடங்கி ஒடுங்கிப் பேசும் அனுமன் பேரில் தான், ராமனும் சுக்ரீவனும் எத்தனை நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தென்திசை நோக்கிச் செல்லும் அனுமன், சீதையை, சீதை இருக்கும் இடத்தைக் கட்டாயம் கண்டு வருவான் என்று நம்புகிறான் காகுத்தன். ஆனால் அனுமனுடைய ஆற்றலை எல்லாம் நன்கு அறிந்த அந்த கவி குலக் கோமகனாகிய சுக்ரீவனோ, சீதையைக் கண்டு விட்டால், சும்மா வெறுங்கையோடு வரமாட்டான், கொண்டு வந்து விடுவான் என்றே நம்புகிறான்.

ஆனால் இதே நம்பிக்கை சீதைக்கு முதலில் அனுமனிடம் உண்டாக வில்லை. இத்தகைய சிறிய உருவம் படைத்த அனுமன் எப்படி இந்த கடலைக் கடந்தான் என்று சந்தேகிக்கிறாள். அனுமனோ நான் இக்கடலை கடந்தது காலினால்தான்' என்று விளக்குகிறான். சீதைக்கோ அதிசயத்திலும் அதிசயமாகத் தோன்றுகிறது. சீதையின் சந்தேகத்தை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டிருக்க விரும்பவில்லை அனுமன்.

அதுவரை அடங்கி ஒடுங்கி நின்ற அனுமன் தன் விசுவரூபத்தையே காட்டுகிறான். அனுமனோ பெரிய யோகி, அதனால் பல சக்திகள் வாய்ந்தவன். ஆதலால் அவன் விண்ணிற்கும் மேலே விரிந்திருக்கும் வான் முகட்டையும் முட்டும் வகையில் உயர்ந்த உருவம் உடையவனாகி விடுகிறான்.

இப்படி அண்ட முகடு அளவும் வளர்ந்தவனைக் கண்டு அன்று உலகெலாம் அளந்த நாயகனான திரிவிக்கிரமனுமே நாணம் அடைகிறான், தன்னால் இவ்வளவு பெரிய உருவை அன்று எடுக்க முடியாது போயிற்றே என்று.

அனுமனுடைய அறிவை, ஆற்றலை, பக்தியை எல்லாம் எப்படி எப்படி எல்லாமோ பாராட்டியிருக் கிறார்கள் கவிஞர்கள். அத்துடன் அவன் எடுத்த அந்த பேருருவை - விசுவ ரூபத்தையுமே கற்பனை பண்ணி மகிழ்ந்திருக்கிறார்கள். எண்ணரிய சக்திகளை யெல்லாம் ஒழுக்கத்தின் உயர்வால் பெற்ற ஒருவன் மக்கள் சிந்தனை யில் எவ்வளவு உயர்ந்து விடுகிறான் என்பதைத் தானே இப்படி விசுவ ரூபமாகக் காட்டி விளக்குகிறார்கள் கலைஞர்கள்.

காவியம் மூலம் காணும் இந்த விசுவரூபத்தை ஓவியம் - சிற்பம் மூலம் காண்பது மிகவும் எளிதாக இருக்கும். மரத்திலே, செம்பிலே வடித்தெடுத்த பெருமை, தமிழ் நாட்டுக்கு உண்டு. நாமக்கல் கோட்டைக்கு வெளியே நாசிம்ம சுவாமி சந்நிதிக்கு மேற்கே இருக்கும் அனுமனும் க்ன்னியாகுமரியை அடுத்த சுசீந்திரத்திலே தாணு மாலயன் கோயிலே நிற்கும் அனு மனும் கல்லுருவிலே பெரியவை தான். இரண்டிடத்தும் அனுமன், அஞ்சலி ஹஸ்தனாக ஏவல் கூவல் பணி செய்ய எப்பொழுதுமே தயார் என்ற நிலையில்தான் நிற்கிறான். ஆதலால் அங்கெல்லாம் உங்களை இழுத்துப் போக விரும்பவில்லை இப்போது.

அவன் எடுத்த பெரிய உருவத்திற்கேற்ற பெருமை ஒரு சிறிதும் குறையாமல் மூன்று சின்னஞ்சிறிய ஊர் களிலே இருக்கும் அனுமனைத்தான் காட்ட விரும்பு கிறேன் நான். வட ஆற்காடு ஜில்லாவில் ஆரணி ரோட்டு ரயில் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருப்பது களம்பூர். இந்த களம்பூரை அடுத்த சிறிய ஊர் தான் கஸ்த்தம்பாடி. இந்த ஊரில் எளிய வாழ்வு வாழ்வதற்கே கஷ்டப்படும் குடி ஜனங்கள்தான் உண்டு.

இந்த ஊரிலே ஒரு சிறு கோயில். அந்தக் கோயிலுக் குள்ளே ஒரு சிறு சந்நிதி அனுமனுக்கு. அங்குள்ள

அனுமனை வீர ஆஞ்சநேயர் என்று அழைக்கின்றனர் அன்பர்கள். சிறை இருக்கும் செல்வியைத் தேடி இலங்கைக்குத் தாவ விரும்பும் அனுமன் மகேந்திர மலையில் ஏறுகிறான். பேருருவோடு கிளம்புகிறான். அந்த நிலையை

**வால் விசைத்து எடுத்து,**
**வன்தாள் மடக்கி**
**மார்பு ஒடுக்கி, மானத்**
**தோல் விசைத் தோள்கள்**
**பொங்க, கழுத்தினைச்**
**சுருக்கித் தாண்டும்**
**கால் விசைத் தடக்கை**

நீட்டி - மேல் விசைத்து எழுந்தான் என்று கம்பன் கூறுகிறான். இத்தனையும் சொல்லி விட்டு, இந்தக் காட்சியை கண்கள் நெடுநேரம் கண்டு அனுபவிக்க முடியவில்லை. காரணம் அதற்குள் அவன் விண்ணில் பறந்து விடுகிறான் என்கிறான் கம்பன். ஆனால் மகேந்திரமலையில் நின்று புறப்படும் நிலையை அப்படியே படம் பிடித்து விடுகிறான் ஒரு சிற்பி. அந்த நிலையை ஒரு கலை உருவமாகக் கல்லிலே செதுக்கியும் வைத்து விடுகிறான்.

பாய்வதற்குத் தயாராகும் நிலையிலே அமைந்த திரு உருவம் தான், கஸ்தம்பாடியிலே இருக்கிறது. கட்புலனுக்கு எட்டாத வண்ணம் அன்று அனுமன் இருந்தான் என்று கம்பன் கையை விரித்தாலும், கலைஞன் கையை விரிக்காமல், அந்த நிலையை இன்னும் நாம் கண்குளிரக் காணும் வண்ணம், கற்பித்து நிறுத்தி விடுகிறான்.

கல்லிலே கண்ட அஞ்சனை புதல்வனை மரத்திலே காணவேண்டுமானால் கோவை ஜில்லாவினுக்கே போக வேணும், பொள்ளாச்சியை அடுத்த ஊத்துக்குழி என்ற

கிராமத்திற்கே வந்து சேரவேணும். அங்குள்ள ஜமீன் தாருக்கு காளிங்கராயர் என்று பட்டம். கலிங்கம் வென்ற கருணாகரன் உடன் சென்ற சிறந்த படைத்தலைவன் பரம்பனர போலும், அந்த ஜமீன்தார் அரண்மனைக் குள்ளே நான்கு ஐந்தடி உயரத்தில் இருக்கிறான், இந்த அனுமன். ஏதோ மரத்தாலாய பீடத்தின் பேரில்த் தான் சிற்பி அமைத்து நிறுத்தியிருக்கிறான்.

என்றாலும், தோற்றம் அந்த மகேந்திரமலை மேலே - முதல் முதலாக ஏறி நின்ற நிலைதான். மேரு கிரிக்கும் மீதுற நிற்கும் பெரும் மெய்யனாகக் காட்சி கொடுக்கிறான். உருண்டு திரண்ட மேனி, ஓங்கி வளர்ந்த வடிவம். நிமிர்ந்து உயர்ந்த கதை, சுருண்டு வளைந்த வால் எல்லாம் அந்த உருவத்தின் காம்பீர்யத்தை பறை சாற்றுகின்றது. அசப்பிலே பார்த்தால் சிலை என்றே சொல்ல முடியாது. நல்ல ஆஜானு பாகுவான அனுமனே எழுந்து நிற்பது போலத்தான் இருக்கும். நல்ல வடிவ அழகோடு கூடிய சிற்பச் சிலைகளும் - மரத்திலே ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு - இந்தச் சிற்பமே ஒரு எடுத்துக்காட்டு.

இனித்தான் வருகிறோம் ஒரு நல்ல செப்புச் சிலையைக்காண. விசுவரூபம் என்றால் இது வரை பெரிய உருவம் என்று தானே எண்ணி வந்தோம். ஆனால் இப்போதுக் காணும் விசுவ ரூபம் உண்மையிலே எட்டுத் திசையும், பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய் முட்டி நிற்கும், பெரிய உருவம் தான். மூர்த்தியினுடைய பெயரே "திரிநேத்ர சதுர்புஜ அனுமார்" என்பதாகும்.

மூன்று கண்களுடனும், பத்துக் கைகளுடனும் இவர் காட்சி தருவார் என்பதைப் பெயரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். நமது தெய்வங்களிலே வலிமிகுந்தவர்கள் சிவன், விஷ்ணு, தேவேந்திரன், யமன் முதலியவர்கள் தான். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே

நின்றால், ஒருவரை ஒருவர் வெல்வது கூட எளிதாக இருக்கும். எல்லோருமே சேர்ந்து ஓர் உருவமாக நின்றுவிட்டால் அந்த வடிவினை வெல்லுதல் என்பது அசாத்தியமே.

அத்தகைய திருஉருவம் தானே உண்மையில் விசுவ ரூபமாக இருக்க முடியும். அளவில் மட்டும் பெரியதாய் இராமல், ஆற்றலிலும் பெரியதாய் இருக்க வேண்டு மல்லவா. இத்தகைய விசுவரூப தரிசனமே கிடைக்கிறது நமக்கு இங்கே. சிவனுடைய நெற்றிக்கண், மான் மழு எல்லாம் இந்த உருவில் அமைந்து விடுகிறது. விஷ்ணுவோ தன் சங்கு சக்கரம், வில், வாள் எல்லா வற்றையும் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்கிறான். இந்திரனுடைய வஜ்ஜிராயுதம், கேடயம் எல்லாம் வந்து சேர்ந்து கொள்கிறது.

யமனுடைய பாசத்தையும் சூலத்தையுமே பறித்துக் கொள்கிறான் அனுமன். இப்படியே பத்துக் கைகளிலும் பத்து ஆயுதங்கள். இந்த ஆயுதங்களை எல்லாம் தாங்கும் வலிமை பெற்ற விரிந்த மார்பும் திரண்ட தோள்களும் வேறே. தலையிலே நீண்டுயர்ந்த மணி மகுடம். இத்தனையும் ஏந்தி நிமிர்ந்து நிற்கும் கம்பீரமான தோற்றம். எல்லாம் சேர்ந்து கலை உலகத்தில் இந்தச் சிலா உருவத்திற்கு ஓர் உயரிய ஸ்தானத்தையே அளிக் கிறது.

இந்த உருவத்தைதான் பார்க்கிறீர்கள் பக்கத்திலே. வசதி உள்ளவர்கள் எல்லாம் நேரிலும் சென்று காணலாம். மாயவரம் தரங்கம் பாடி ரோட்டிலே திருக்கடவூருக்கு கிழக்கே மூன்று நான்கு மைல் போனால் - அனந்த மங்கலம் இங்கே இருக்கிறது என்று வடதிசையைக் காட்டிக் கொண்டு ஒரு கைகாட்டி நிற்கும். அந்தக் கைகாட்டிய திசை வழி அரை மைல் சென்றால் ஒரு சிறு

கோயிலிருக்கும். மன்னார் குடியில் உள்ள ராஜகோபாலன் தன் துணைவி செங்கமல வல்லியுடன் தன் பக்தன்

நாயக்க மன்னன் ஒருவனுக்காக இங்கே புறப்பட்டு வந்து விட்டார் என்று கர்ண பரம்பரை கூறும் அந்த ராஜ



கோபால சாமி கோயிலிலே தான் இருக்கிறான், இந்த திரிநேத்ர சதுர் புஜஅனுமன். எனக்கு தோன்றுவது என்ன வென்றால். இந்த அனுமனு டைய பெருமையை உணர்ந்த மக்கள் அன்றே இந்த ஊருக்கு அனுமந்த மங் கலம் என்று பெயரிட்டிருக் கிறார்கள். அதைத் தான் நாம் அனந்த மங்கலம் என்று இன்று சொல்லி திருப்தி அடைகிறோம் என்பது தான்.

அறிவாலே, ஆற்றலாலே, அன்பாலே சிறந்தவன் அனுமன் என்று கண்டோம். அவனது பேர் உருவை கல்லிலே, மரத்திலே, செம்பிலே உருவாக்கி வழிபடவும் தெரிந்து கொண்டோம். அறிவு, ஆற்றல், அன்பு எல்லாம் கலந்த ஒரு கலவையை, கல், மரம், செம்பு என்னும் மூன்று பொருளிலும் கண்டு மகிழும் வாய்ப்பு கிடைக்கிறது நமக்கு. இதுபோதாதா என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

# கோதையின் அழகிய கோலம்

**எழில் உடைய அம்மனையீர்**
**தென் அரங் கத்து இன்ன முதர்**
**குழல் அழகர், வாய் அழகர்**
**கண் அழகர், கொப் பூழில்**
**எழுகமலப் பூ அழகர்**
**எம்மானார் என்னுடைய**
**கழல்வளையைத் தாமும்**
**கழல்வளையே ஆக்கினரே**

என்று பாடுகிறாள் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாம் ஆண்டாள். அரங்கனது அழகை இப்படி நுணித்து நுணித்து அனுபவித்து இருக்கிறாளே, இவள் எவ்வளவு அழகு வாய்ந்தவளாக இருத்தல் வேண்டும் என்று எண்ணினேன். அதற்காக திவ்யப் பிரபந்தத்தைப் புரட்டினேன். கோதை தான் தன் அழகைப் பற்றிப் பேச நாணி நிற்கிறாள். நிற்கட்டும். இந்தப் பெரியாழ்வார் தன் மகள் அரங்கனிடம் கொண்ட காதலைப் பற்றியெல்லாம் பலபல சொல்லுகிறாரே அவராவது கோதையின் அழகைப் பற்றிச் சொல்ல மாட்டாரா என்று ஏங்கினேன். அவருமே 'கம்' என்று இருந்து விடுகிறார். பின்னர் திவ்ய சூரி சரிதையையும் குருபரம்பரைப் பிரபாவத்தையும் தேடி எடுத்துப் படித்தேன்.

பெரியாழ்வார் நந்தவனத்தில் களை எடுத்துக் கொண்டிருந்தபோது அங்கே திருத்துளாய் வேரின் கீழ் சுவர்ண கலசத்தில் காஞ்சன மயமான பசுங்குழந்தை

ஒன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது என்று ஆண்டாளின் அவதார விசேஷத்தைக் கூறுகிறது, திவ்ய சூரி சரிதை. குரு பரம்பரை பிரபாவம் என்னும் பன்னிராயிரப்படி பூதேவியே இறைவனை வேண்டி பெரியாழ்வாருக்கு குழந்தையாகத் தோன்றினாள் என்று கூறுகிறது.

இல்லா விட்டால். அந்த அரங்கன் என்ன ஏமாந்த சோணகிரியா? அழகு குறைந்திருந்தால் ஆண்டாளை மணம் செய்து கொள்ள ஓடி வந்திருப்பானா! லட்சணங்கள் அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட கோதையும் நிறைந்த அழகுடையவளாகத்தானே இருந்திருக்க வேண்டும்.

ஆகவே அவளது அழகை இந்தக் கலைஞர்கள் எப்படி உருவாக்கியிருக்கிறார்கள் என்று காணும் வேட்கை மிகுந்தது. ஆதலால் அன்று அவள் பிறந்து வளர்ந்த பதியாகவும் இன்று கோயில் கொண்டிருக்கும் பதியாகவும் இருக்கும் ஸ்ரீ வில்லிபுத்தூருக்கே சென்றேன். ஆண்டாளும் அரங்கனும் பெரிய திருவடியும் சேர்ந்து நின்று சேவை சாதிக்கும் சந்நிதிக்கே சென்றேன். நல்ல காலமாக ஆடிப்பூர உத்சவத் தினமாக இருந்ததால் உற்சவ மூர்த்தமாக மூவரும் வெளி மண்டபத்திலேயே எழுந்தருளியிருந்தனர். என்றாலும் அணிகளும் பணிகளும் நிறைய அணிந்து பட்டாடை புனைந்து நின்றார்கள். ஆதலினால் முக விலாசத்தை மட்டுமே காண முடிந்தது சர்வஅங்கசுந்தரியாக அவள் நிற்பதைக் காண முடியவில்லை. மூலத்தானத்திலுமே இதே கதை தான்.

அதுவும் மண்டபத்திலிருந்து எட்டி நின்று பார்க்கும் போதோ ஒன்றுமே தெரியவில்லை. பட்டாச்சாரியார்களோ மாலைகளையோ இல்லை அணிகளையோ களைந்து காட்டத்தயாராக இல்லை. இதனால் இந்த சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் அழகு முழுவதையும் காண வாய்ப்பு இல்லாது போய் விட்டது.

நானோ விடாக் கண்டன். கோயிலில் வேறு எங்காவது சிலை வடிவில் நிற்க மாட்டாளா அவள், என்று ஏங்கும் உள்ளத்தோடேயே கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தேன்.

அப்போது பட்டாச்சாரியர் பையன் ஒருவன் என்னுடன் வந்தான். அவன் சொன்னான், சார், இங்கு அந்தப் பெரியாழ்வார் பாதுகாத்து வந்த நந்தவனம் ஒன்றிருக்கிறது. அங்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. அங்கு ஆண்டாளின் வடிவம் ஒன்றும் இருக்கிறது. அதைப்படம் கூட எடுக்கலாம் என்றான். சரி, என்று அந்தப் பையனைக் கையில் போட்டுக் கொண்டு, வேறு பட்டாச்சாரியர்களுக்கோ, இல்லை, நிர்வாக அதிகாரிக்கோ தகவல் ஒன்றும் கொடுக்காமல் நானும் பையனும் பெரியாழ்வர் வளர்த்த நந்தவனத்தை நோக்கி நடந்தோம். அது ஆண்டாள் கோயிலுக்கும் வடபத்ரசாயி கோயிலுக்கும் இடையே இருக்கிறது. நல்ல மதிற் சுவர்களால் சூழப்பட்டு இருக்கிறது. நந்தவனத்தில் புஷ்பங்கள் அதிகமில்லை. முன் மண்டபத்தோடு கூடிய சிறிய கோயில் ஒன்று இருக்கிறது.

அக்கோயிலுள் சுமார் மூன்றடி வடிவத்தில் சிலை உருவில் ஆண்டாள் நிற்கிறாள். அவளோ என் வருகையை எதிர் நோக்கியிருந்தவள் போல கதவுகளை எல்லாம் திறந்து வைத்துக் கொண்டே நின்றாள். நந்த வனத்தில் கோடி சூரியப் பிரகாசத்துடன் அன்று துளசியடியில் கிடந்த குழந்தையாம் கோதை, அங்கு குழந்தையாக இருக்கவில்லை. கொஞ்சம் வளர்ந்து பெரியவள் ஆகியிருந்தாள். கட்டுக்கட்டென்று நின்ற அவள் வடிவிலே நிறைந்த அழகு காணப்படவில்லை. அவளைப் படம் பிடித்து உங்கள் முன் இங்கு நிறுத்தியிருக்கிறேன் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். அழகே

உருவெடுத்தவள் என்று கருதப்படுகின்ற ஆண்டாளின் திவ்யரூபம் காணும் என் ஆவல் தீர்ந்த பாடில்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது உத்தாரவியம் என்று கருதப்படும் பள்ளி கொண்டான் என்ற தலத்திற்கே சென்றேன். பாலாற்றின் கரையிலே பள்ளி கொண்ட பரந்தாமனைக் கண்டு வணங்கினேன். பின்னர் கோயிலின் மேலப் பிராகாரத்தில் உள்ள ராமன், கண்ணன் சந்நிதிகளுக்கும் சென்று வணங்கிய பின் வடகோடி மூலையில் உள்ள ஆண்டாள், சந்நிதிக்கும் சென்றேன். அங்குள்ள சிலை வடிவிலும், செப்பு படிமமாகவும் உருவாக்கியிருக் கிறார்கள்.

ஆண்டாளைக் கண்டேன் இருவருமே என் கற்பனை யில் உருவாகி இருந்த அழகிகளாகக் காணப்படவில்லை. திரும்பவும் கோயில் பிராகாரங்களிலேயே சுற்றிக் கொண் டிருந்தேன். கருவறையை அடுத்த பிராகாரத்திலே ஒரு



மூலையிலே கண்ணன் ஒரு வனும் இன்னொரு மூலை யிலே ஆண்டாளும் சிலை யாகச் சின்னச்சிறு வடிவில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை வெளிக் கொணர்ந்து நோக்கினேன்.

அந்த ஆண்டாள் ஸ்ரீ வில்லிபுத்தூர் நந்தவனத்து ஆண்டாளைப் போல கட்டு முட்டென்று நிற்கவில்லை. அதற்கு மாறாக கம்பீரமாக வளர்ந்து நின்றாள்.

சொல்லப்போனால் இடுப்பிற்கு கீழே உள்ள கால்கள் கொஞ்சம் அளவுக்கு மீறி நீண்டிருந்தது போல் தோன்றிற்று, எனக்கு. ஆனால் முழங்காலுக்கு மேலே அவளது வடிவம் மிக்க வனப்புடையதாக இருந்தது. கையில் தாமரை மலர் ஒன்று ஏந்தி அவள் எழிலாக நிற்கிற கோலம் கண் கவர் வனப்புடையதாக இருந்தது. அவளையும் என் காமிராவுக்குள் அடைத்துக் கொண்டு வந்து உங்கள் முன் நிறுத்தி யிருக்கிறேன்.

இத்துடனும் நான் திருப்தி அடையவில்லை என்னுடைய லக்ஷ்ய சௌந்தர்ய தேவியான ஆண்டாளை யான் இன்னும் காணவில்லை என்றே ஏங்குகிறது என் உள்ளம். மணம் செய்துகொண்டு நின்ற கோலம் இன்னும் எவ்வளவோ அழகுடையதாக இருந்திருக்க வேண்டும் என்றே என் உள் உணர்வு சொல்லிற்று. ஆதலால் கோதையின் அழகிய கோலத்தை தேடித்திரியும் பணியை நிறுத்தவில்லை. திருக்கோயிலுக்கு மேற்கே பெண்ணை நதிக் கரையில் ஒரு திருவரங்கம் இருக்கிறது என்றார்கள். அந்தக் கோயிலைக் காண சென்றேன்.

அங்கே பெரிய ஆகிருதியாய் இருபத்தி நாலு அடி நிலத்தில் அனந்தன் மேல் துயிலில் அமர்ந்திருக்கும் அரங்கனைக் கண்டேன். நல்ல அழகனாக உருப் பெற்றிருக்கும் அவனை வந்தித்து வணங்கினேன். அங்குள்ள சுற்றுக் கோயில்களை எல்லாம் சுற்றிச் சுற்றி வந்தேன். ஒரு சிறு சந்நிதியிலே செப்புச் சிலை வடிவில் நிற்கும் ஆண்டாளைக் கண்டேன். சுமார் மூன்றடி உயரமே உடையவளாக அவள் நின்றாலும், அவள் பாசுரங்களில் கண்ட அழகையெல்லாம் அவள் வடிவிலேயும் காண முடிந்தது.

தலையைக் கோதி முடித்துக் கொண்டையிட்டு நிற்கும் அழகைச் சொல்வதா? இல்லை வலக்கையை உயர்த்தி

இடக்கையைத் தாழ்த்தி ஏதோ பரத நாட்டியம் ஆட முடியாது நிற்கும் கோலத்தைச் சொல்வதா? இன்னும் வலது காலை அழுத்தமாக ஊன்றி இடது பிட்டியை வளைத்து நிற்கும் அவளது ஒயிலைச் சொல்வதா? எதைச் சொல்லுவதென்றே தெரியவில்லை. அத்தகைய அழகிய வடிவிலே நிற்கிறாள் அவள்.

**தோளையே சொல்லுகேனோ**
**சுடர் முகத்து உலவு கின்ற**
**வாளையே சொல்லுகேனோ**
**அல்லவை கேனோ**
**மீளவும் திகைப்பதல்லால்**
**துளித் துளி விளம்பல் ஆற்றேன்**

என்று சீதையை வர்ணிக்க முனைந்த கவிச் சக்ரவர்த்தி கம்பன் எப்படிக் கையை விரிக்கிறானோ அவனைப் போலவே நானும் கையை விரிக்க வேண்டியிருக்கிறது. சொல்லால் உருவாக்கி நிறுத்த முடியாது போய் விடுகிறது. ஆனால் கவிஞனுக்கு புகைப்படக் கலைஞனான எனக்கோ அவ்வடிவினை அப்படியே படம் பிடித்து உங்கள் முன் நிறுத்த முடிகிறது.

**ஒரு மகள் தன்னை உடையோன்**
**உலகம் நிறைந்த புகழால்**
**திரு மகள் போல வளர்த்தேன்**
**செங்கண் மால்தான் கொண்டுபோனான்**

என்று ஏங்குகிறாரே, பெரியாழ்வார், அந்தத் திருமகளை, இங்கல்லவா கொண்டு வைத்து ஒளித்து வைத்து நமக்கு இத்தனை அலைச்சலைக் கொடுத்து விட்டார்கள் என்றாலும் கோதையின் கோலம் கண்ட பெருமிதத்தில் ஒரு வெற்றி நடையே போட்டுத் திரும்பினேன் நான்.

# அன்னையும் கன்னியும்

பிரான்சு தேசத்தில் இரண்டு சிறுகதைகள்.

**ஒன்று:**

கடவுள் முதல் முதல் மனிதனைப் படைத்து இந்த பூலோகத்திற்கு அனுப்பி வைக்கிறார். ஆனால் மனிதன் இந்த பூமியில் காலூன்றி நிற்கவில்லை கடவுள் இருக்கும் அந்த சுவர்க்க பூமிக்கே திரும்பி விடுகிறான். கடவுள் பார்க்கிறார். அந்த மனிதனை இந்த நில உலகிலேயே நிறுத்திக் கொள்ள, இன்பப் பொருள்களான பூஞ்சோலை, வண்ண மலர், இனிய பழங்கள், இசைத்தும்பி, வெள்ளருவி, நீராழி இன்னும் என்ன வெல்லாமோ கொடுத்து திரும்பவும் அனுப்பி வைக்கிறார். இவை ஒன்றும் அவன் விரும்பும் இன்பத்தை அளித்து விடவில்லை. ஆதலால் திரும்பத் திரும்ப சுவர்க்கத்திற்கே ஓடி விடுகிறான். கடைசியாக கடவுள் பார்த்தார். ஒரு பெண்ணைப் படைத்து, அந்த மனிதனுடன் இந்தப் பெண்ணையும் சேர்த்து உலகத்திற்கு அனுப்பி வைக்கிறார். அவ்வளவுதான். உலகத்திற்கு பெண் துணை யோடு வந்த மனிதன் சுவர்க்கத்திற்கு திரும்பவே இல்லை. இது ஒரு கதை.

**இரண்டாவது கதை:**

கடவுளின் பரம விரோதியான சைத்தான் மனிதனைக் கெடுக்க எண்ணுகிறான், பூமிக்கடியில் தங்கத்தையும் வைரத்தையும் புதைத்து வைக்கிறான் மரங்களில் இருந்து மதுவை குடம் குடமாய்ப் பொழிய வைக்கிறான்.

கடலுக்கடியில் முத்தையும் பவளத்தையும் பரப்பி வைக்கிறான். அத்தனையும் உனக்கே என்று வாரி வாரிக் கொடுத்து மனிதனை மயக்கப் பார்க்கிறான். இந்தப் பொன்னாலும், பொருளாலும், மரங்களாலும், மதுவாலும் அவர்களைக் கெடுக்க முடியவே இல்லை. கடைசியில் ஒரு பெண்ணைப் பிடித்து அவனிடம் அனுப்பி வைக்கிறான். அவ்வளவுதான் மனிதன் கெட்டே போய் விடுகிறான். இப்படி ஒரு கதை.

இரண்டு கதையும் உண்மையாய் நடந்த கதை அல்ல. இரண்டுமே கலைஞனது கற்பனையில் உதித்தவை தான் பெண் மனிதனை வாழ்விக்க வந்தவள். அவனுக்கு அளப்பரிய இன்பத்தை அளிக்கக் கூடியவள் என்ற ஓர் அடிப்படையான எண்ணத்திலே உருவானது தான் முதல் கதை. எவ்வளவோ ஒழுக்கமாக வாழும் மனிதனும், ஆம் பொருளினாலும், மதுவாலும் கெட்டொழிந்து போகாத மனிதனும் பெண்ணாலே கெட்டுப் போய் விடுகிறான் என்ற உண்மையை விளக்க எழுந்ததுதான் இரண்டாவது கதை.

இரண்டு கதைகளிலுமே உண்மை புதைந்து கிடக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. மனிதனை வாழ்விப்பவளும், தாழ்விப்பவளும் பெண்ணே தான் என்ற உண்மை, பிரான்ஸ் தேசத்திற்கு மட்டும் தெரிந்த உண்மையில்லை. உலகமே ஒப்புக் கொண்ட உண்மை தான்.

ஆனால் தமிழன் இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறான். எப்படியோ பூமியிலே வந்து நிலைத்து விட்ட மனிதனும் பெண்ணும் தங்களைப் படைத்த தலைவனை அறிய முற்படுகிறார்கள். மனிதன் சொல்கிறான், இந்த இறைவன் ஆண்மகனாகத்தான் இருக்க வேண்டும் என்று. பெண் சொல்லுகிறாள், அந்தப் பரம்

பொருள் பெண்ணாக, இறைவியாகத்தான் இருக்கிறாள் என்று. இவர்களுடைய விவாதம் தீர்ந்த பாடாக இல்லை.

கடைசியில் இருவருக்கும் பிறக்கிறான் ஒரு பிள்ளை. அவன் வளர்ந்து பெரியவன் ஆகிறான். அவனிடமே சொல்கிறார்கள், தங்கள் விவாதத்தை. அவனிடம் கேட்கிறார்கள் விடையை. அவன் சொல்கிறான். கடவுள் தாயாக இருக்கிறாள் என்று. மேலும் சொல்கிறான் இறையிடத்தில் ஆண்மையுமில்லை, பெண்மையும் இல்லை. தாய்மை தான் நிறைந்திருக்கிறது என்று; உண்மைதானே.

இந்தப் பிள்ளையின் கண்கண்ட தெய்வம் தாய் தானே. அந்தத் தாய் சுட்டிக் காட்டிய பின் தானே தந்தையைத் தெரிந்து கொள்கிறான். அன்னையிடம் அன்பைப் பெறுகிறான். அப்பனிடம் அறிவைப் பெறுகிறான். அன்பைச் சொரிபவளாக அம்மையும் அறிவை வளர்ப்பவனாக அப்பனும் அமைகிறார்கள். அதனால்தான் கடவுளை மனிதன் முதன் முதலில் வழிபடத் தெரிந்தது தாய் உருவில் தான்.

பால் நினைந்து ஊட்டும் தாயின் அன்பைக் கசிந்து கசிந்து பாடிய மாணிக்க வாசகர் மேலும் இறைவன் அருளை நினைந்து,

**தாயாய் முலையைத் தருவானே**
**தராது ஒழிந்தால், சவலையாய்**
**நாயேன் அழிந்து போவேனே.**

என்று இரங்குகிறார். இன்னும் நாவுக்கரசராம் அப்பரும்

**தாயவள் காண் உலகிற்குத்**
**தன் னொப்பில்லாதத்துவன் காண்**

என்று பாடிப்பாடி மகிழ்கிறார். இப்படி தாயான தத்துவனுக்கே இறை வழிபாடு, மனிதன் உள்ளத்தில்

முதன் முதல் எழுந்திருக்கிறது. பேசரிய உயிரை எல்லாம் பெற்று நோக்கி, பெரும் போகம் அவை அளித்து, ஆசு அகலும் அடியார் உளத்து அப்பனுடன் இருக்கும் அன்னையைக் கண்டு தொழாத கவிஞன் இல்லை. கசிந்து பாடாத கவிஞன் இல்லை.

இந்த உலகிலே பிறந்த மனிதன் முதலில் உண்ணத் தெரிந்திருக்கிறான். பின்னர் உடுக்கத் தெரிந்திருக்கிறான். பின்னர் இருக்க படுக்க இடம் தேடி இருக்கிறான். உண்டு உடுத்து உறங்கத் தெரிந்த மனிதனது வாழ்வு இவைகளில் மட்டும் நிறைவு பெறாது இருந்திருக்கிறது. இன்ப உணர்விற்கு ஏங்கி இருக்கிறான்.

அப்படி இன்பம் தேடி அலைந்த மனிதன் தான் ஓங்கி உயர்ந்த மலையைக் கண்டு அதனுடைய அழகை, காம்பீர்யத்தைக் கண்டு அதிசயித்து நின்றிருக்கிறான். அகன்று பரந்த கடலைக் கண்டு அந்தக் கடலில் விளையும் முத்தையும், பவளத்தையும் பார்த்து அந்தக் கடல் அலைகள் எழுப்பும் இன்னிசையைக் கேட்டு தன் வயம் இழந்திருக்கிறான். முன்னமேயே இறைவனைத் தாய்மை உருவிலே கண்டு தொழக் கற்ற இந்த மனிதனை, மலையையும் அலையையுமே உருவகப்படுத்தி மலை மகளாக, அலை மகளாக அந்த அன்னையை நினைக் கிறான்.

இந்த மலை மூலமாக, அலை மூலமாக ஆரம்பித்த அன்னை வழிபாடு, அவன் உள்ளத்தில் எழுந்த அழகு உணர்ச்சி காரணமாக அந்த அன்னையையே உலகிற்கு அன்போடு அறிவையும் நல்கும் நல்ல கலை மகளாகவும் உருவகப்படுத்தியிருக்கிறது. இப்படித் தான் மலை மகள் அலைமகள், கலைமகளாக, அன்னை அவன் எண்ணத் தில் தோன்றியிருக்கிறாள்.

இப்படி மூன்று அன்னையரை உருவாக்கிய அவன் மூவரையும் ஒருவராகவே காணும் பேற்றுக்குத் தவம் கிடந்திருக்கிறான் இப்படி மூவரும் ஓர் உருவாய் இணைந்து நிற்கும் அன்னையே தேவர் மூவர்களுக்கும் முதற் பொருள். அவர்கள் செய்யும் முத்தொழிலுக்கும் அடிகோலியவளும் அவளே, அவளே பராசக்தி என்றெல்லாம் எண்ணியிருக்கிறான்.

இப்படி எண்ணியவன் உள்ளத்திலே

**மூவர்க்கும் முதற் பொருளாய்**
**முத்தொழிற்கும் வித்தாகி**
**நாவிற்கும் மனத்திற்கும்**
**நாடறிய பேரறிவாய்**
**தேவர்க்கும் முனிவர்க்கும்**
**சித்தர்க்கும் நாகர்க்கும்**
**யாவர்க்கும் தாயாகும்**
**எழிற் பரையை வணங்குவாம் -**

என்ற பாடல் எழுந்திருக்கிறது. இந்தப் பராசக்தியாம் அன்னை தான், எண்ணற்ற திருப்பெயர்களோடு எழில் நிறைந்த எத்தனையோ திருவுருவங்கள் தாங்கி நாட்டில் உள்ள கோயில்களில் எல்லாம் எழுந்தருளியிருக்கிறாள். திருநெல்வேலியில் அவளை வடிவன்னை என்பர். மதுரையில் அங்கயற்கண்ணியென அவள் நிற்பாள்.

ஆனைக்காவில் அகிலாண்ட நாயகியாக நிற்பாள். தஞ்சையில் பெரிய நாயகியாகவும், குடந்தையில் மங்களாம்பிகையாகவும், திருக்கடவூரில் அபிராமியாகவும் நிற்கிறாள். இன்று காஞ்சியில் காமாட்சியாகவும் காசியில் விசாலாட்சியாகவும் இருப்பவளும் அவளே தான்.

இவர்களில் கலை உலகில் பிரசித்தி பெற்ற ஒரு சிலரை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையாளரின் நோக்கம்.

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியில் இருப்பவளே வடிவன்னை, அவள் தன் பெயருக்கு ஏற்ப சிறந்த வடிவுடையவளாகவே உருப் பெற்றிருக்கிறாள். கருவறையில் நிற்கும் அந்த வடிவன்னையை எட்ட இருந்து காண்பதாலும் அவள் வடிவு முழுவதையும் ஆடை அணியால் மறைத்துக் கொண்டிருப்பதாலும் அவளது அழகு முழுவதையும் கண்டு மகிழ்வது சாத்தியமில்லாது போய் விடுகிறது என்றாலும் கலைஞர்கள் நம்மைச் சும்மா விட்டு விடுவார்களா?

அவளையே அழகு உரு செப்பு சிலா வடிவிலும் நிறுத்தியிருக்கிறார்கள். கம்பீரமான தோற்றத்தோடு அவள் நிற்கும் ஒயில் மிக மிக அழகானது. அவளையே காண்கிறீர்கள் பக்கத்திலே. இரண்டே திருக்கரங்களோடு அமைக்கப்பட்டிருந்தாலும் அவளது வடிவில் தாய்மையையும் இறைமையையும் சேர்ந்தே படைத்து இருக்கிறான் கலைஞன். இவனைத் தரிசிக்க சென்ற கலைஞன் அவளிடமே ஒரு சிபாரிசு கேட்கிறான். பலமுறை நெல்வேலி நகரில் சந்நிதிக்குச் சென்று குறைகளையெல்லாம் பன்னிப் பன்னிச் சொல்லியும் கேளாது அந்த அப்பனிடம் சிபாரிசு செய்யச் சொல்கிறான். ஏதோ பணிந்து துணிந்து கூறுபவனாக இல்லை. கொஞ்சம் மிடுக்குடனேயே அவளுக்கே சவால் விட்டுக் கேட்கிறான். அத்தனை மிடுக்கு உரிமை உடையவன் தானே கவிஞன். அவன் கேட்கும் கேள்வி இதுதான்.

**ஆய் முத்துப்பந்தரின் மெல்லணை மீது**
**உன் அருகிருந்து**
**நீமுத்தம் தா என்று அவர்**
**கொஞ்சும் வேளையில் நித்த நித்தம்**
**வேய் முத்தரொடு என் குறையை**
**எல்லாம் மெல்ல மெல்லச் சொன்னால் உன்**

**வாய் முத்தம் சிந்தி விடுமோ**
**நெல்வேலி வடி வன்னையே?**

இப்படிக் கேள்வி கேட்கும் பக்தனை அன்னை உதாசீனம் செய்ய முடியுமா? அவன் வேண்டுகோளை நிறைவேற்ற அவன் சொல்லிகொடுத்த நேரத்தையும் காலத்தையுமே உபயோகப்படுத்தி காரியசித்தியும் பெற்றிருப்பாள். நல்லதொரு அன்னையையும் அவள் மூலம் பக்தன் அடையும் நன்மையையுமே நினைத்துக் கொண்டு மேலே நடக்கலாம்.

தான் பெற்ற பிள்ளைகளைப் பராமரிப்பதில் அன்னையின் முதற் கடமை அவன் பசியை ஆற்றுவது தானே, சின்னப் பிள்ளையாய் இருந்தால் முலை அருத்துவாள். ஒன்றிரண்டு வயது கழித்ததும் அன்னம் ஊட்டுவாள். பின்னர், அவன் வளர்ந்து பெரியவனாக ஆன காலத்தில் அவனுக்கு உணவு படைத்து அவன் உண்பதைக் கண்டு மகிழ்வாள்



இந்த தாய்மையை நினைத்த கலைஞன் அவளை அன்ன பூரணி என்றே அழைக்கிறான். அன்னபூரணியின் வடிவம், காசி விசுவநாதர் ஆலயத்தை ஒட்டிய கோயில் ஒன்றில் இருக்கிறது. மூலவிக்கிரகம் அவ்வளவு அழகாக இல்லை. பொன்னால் செய்யப்பட்ட அன்னபூரணி ஒருத்தியும் அங்கே உட்கார்ந்திருக்கிறாள். அவளும் தழையத் தழையச் சேலையை உடுத்திகொண்டு

எழுந்து பரி மாறுவதற்கே மிக்க சிரமப்படுபவளாகத்தான் இருக்கிறாள்.

காஞ்சி காமாக்ஷி கோயிலில் அவள் சந்நிதிக்குப்பின் புறம் அன்ன பூரணி ஒரு சிறிய வடிவில் இருக்கிறாள். அவள் இருக்குமிடத்தில் இருட்டடித்து வைத்திருப்பதன் காரணமாக அவளது அழகையும் அன்பையும் நம்மால் அனுபவிக்க முடிகிறதில்லை. ஆனால் நான் உங்களை எல்லாம் அழகே உருவான அன்னபூரணி ஒருத்தி இருக்கும் இடத்துக்கே அழைத்துச் செல்ல விழை கின்றேன்.

அந்த அன்னபூரணி இருக்கும் இடம்தான் கும்ப கோணத்தை அடுத்த தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில். அந்தக் கோயில் வாசலில் நுழைந்ததும் நம் கண்முன் வருவது ராஜகம்பீர மண்டபம். அந்த மண்டபத்தின் உள்பக்கத்தில் மேற்புறத்துச் சுவரில் ஒரு சிறிய மாடத்தில் கிழக்கு நோக்கியவளாய் நிற்கிறாள் அவள்.

நான்கு அடி உயரமே உள்ள நல்ல கருங்கல்லில் உரு வாக்கியிருக்கிறார்கள். மக்கள் பசிப்பிணி ஆற்றும் ஆர்வம் அவள் முக விலாசத்தில் தெரிகிறது. அவள் உதடுகளில் அரும்பும் இளநகை நமது பசியையே மறக்கச் செய்கிறது. இடக்கையில் அமுத கலசம் ஏந்தி நிற்கும், இந்த அன்ன பூரணி உலகையே புரக்கப் புறப் பட்டவள்தான் என்று தோன்றுகிறது. அவளைக் காணும் போது, அம்மா தாயே, நீ மூடி வைத்திருக்கும் அமுத கலசத்தை திறந்து விரைவிலே மக்கள் பசியும் பிணியும் இன்றி வசதியும் வளமும் பெற்று வாழ வகை செய்வாய் அம்மா'' என்று பிரார்த்திக்கவே தோன்றுகிறது எனக்கு. கலை உலகில் இவளை சௌபாக்கிய சுந்தரி என்றும் அழைக்கிறார்கள். மக்கள் பசி அகற்றிவிட்டால் மற்ற சௌபாக்கியங்கள் எல்லாம் விரைவிலேயே வந்து விடாதா என்ன?

உலக மக்களது பசியகற்றுவது இந்த அன்ன பூரணி என்றால், அந்தக் காத்தற் கடவுளாய மகா விஷ்ணுவின் வேலை பாதிக்கும் மேல் தீர்ந்து விடுகிறதே என்று கேட்கத் தோன்றும். வெறும் உண்டியும் உடையும் மட்டும் மனிதனது தேவை என்றில்லை. எத்தனை எத்தனையோ பொருள்களுக்கு அல்லவா ஆசைப்படுகிறான். 'அந்த ஆசையை எல்லாம் பூர்த்தி செய்ய வேண்டியவளும் அவள் தானே.

அந்த நிலையில்தான் தன் அண்ணனான அந்தப் பரந்தாமனுக்கும் நல்ல பக்கத் துணையாக நிற்கிறாள். அவன் ஏந்திய சங்கையும் சக்கரத்தையுமே அவனிட மிருந்து பெற்று மக்களுக்கு எல்லாம் அபயம் அருளுபவ ளாய் நிற்கும் அந்த அன்னையையே நாராயணி என்கிறார்கள் கலைஞர்கள். இந்த நாராயணியை எல்லாக் கோயில்களிலும் காண முடியாது. அவளது வடிவில் சிறந்தது ஒன்று தஞ்சைக் கலைக் கூடத்தில் இருக்கிறது. ஏதோ சாந்த சொரூபியாக இருப்பவளே யானாலும் காத்தல் தொழிலுக்கேற்ப கருணை நிறைந்தவளாகவே காட்சி தருகிறாள்.

இப்படி அண்ணன் வேலையில் மட்டும் தான் இவள் பங்கு பெறுகிறாள் என்றில்லை. காதல் ஒருவனை கைப் பிடித்து அவள் காரியம் யாவினும் கை கொடுத்து நிற்கும் தமிழ்ப் பெண் குலத்தில் பிறந்தவள் ஆயிற்றே. ஆதலால் இறைவனுடைய காரியங்களுக்கும் சக்தி தருபவளும் அவளாகத்தானே இருக்க வேண்டும். அப்படி சக்தி அருளுபவளாக இருக்கும் அன்னையையே போக சக்தி என்று வடிக்கவும், நம் கலைஞர்கள் மறக்கவில்லை. சோழ நாட்டில் உள்ள சிவத்தலங்களில் எல்லாம் கருவறையிலே லிங்க உருவில் இருக்கும் இறைவன் பக்கலிலேயே

அவனுக்கு எல்லா சக்திகளும் அருளுபவளாக போக சக்தியும் இருப்பாள்.

சில இடங்களில் நின்ற கோலத்திலும், சில இடங்களில் இருந்த கோலத்திலும் எல்லாம் தலை சிறந்த சக்தியாக இருப்பவள் தான் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள போக சக்தி. அவள் இருக்கின்ற ஒய்யாரம்தான் என்ன! ஒரு காலை மடக்கி, ஒரு காலைத் தொங்க விட்டு, கையை அபயகரமாக வைத்து நம்மை எல்லாம் தன் பக்கம் அழைத்து அருள் புரிபவளாக அல்லவா இருக்கிறாள். வயிற்றில் உள்ள மடிப்புகள் எல்லாம் அவள் எண்ணரிய பிள்ளைகளைப் பெற்றவள் என்றல்லவா கூறுகின்றன.

கலை உலகில் கம்பீரமாகக் கொலு வீற்றிருக்க வேண்டிய இவள் சிறிய வடிவிலே பெரு உடையார் கருவறையிலே ஒரு பக்கமாக ஒதுங்கியே உட்கார்ந்திருக்கிறாள். அங்கு சென்றால் அர்ச்சகரிடம் கேட்டு அவள் இருக்கும் இடத்தைத் தேடி தரிசிக்க மறந்து விடாதீர்கள்.

இப்படியே எத்தனை எத்தனை அன்னையரையோ நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். உலகெல்லாம் புரக்கின்ற இந்த அன்னையையே கன்னியாகவும் கண்டிருக்கிறார்கள் கலைஞர்கள். மனிதனுக்கு இம்மையில் வாழ்வு அளிக்க தாய்மை உருவில் தோன்றியவள், மறுமையிலும் அருள் புரிய கன்னி வடிவிலே தவக் கோலம் கொண்டு நிற்கிறாள்.

அவள் இறைவனோடு தொடர்பு கொள்ளும் உறவு உணர்விற் கலந்த உறவாக இருப்பதனாலேயே கன்னித் தன்மை அழியாமலே தாய்த் தன்மை பெறுகிறாள். அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை தான் என்றாலும் பின்னையும் கன்னி என மறை பேசும்

ஆனந்த ரூப மயிலாக இருக்கிறாள் என்கிறார் தாயுமானவர். தாயும் ஆனவனே அன்னையின் கன்னித் தன்மையைக் கூறிவிட்டார் என்றால் அதன் மேல் அப்பீல் ஏது. இந்தக் கன்னியாம் அன்னையைக் காண ஒரு நடையே நடக்கவேணும். நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரியைக் காண வேண்டும். இவளை மணம் புரிய வந்த இறைவன் கூடக் கடைசியில் ஏமாந்தல்லவா திரும்பியிருக்கிறார்.

கையில் அக்க மாலை ஏந்தி நிற்கும் அவளது தவக்கோலம்தான் எத்தனை அழகு வாய்ந்தது. பெண்ணாய்ப் பிறந்து தாயாய் பேறு பெற்று வாழ்வது சிறந்தது தான் என்றாலும் கன்னியாகவே இருந்து உலகுயிர் அனைத்துக்கும் அருள் புரிவது என்பது எளிதான காரியமா என்ன?

அந்த அரிய காரியங்களை கன்னிக்குமரி செய்கிறாள் என்று கற்பனை பண்ணியிருக்கிறார்கள் கலைஞர்கள். உலகெல்லாம் காக்கும் ஒரு தனிக்கடவுளை அன்னையாகவும் கன்னியாகவும் கற்பனை பண்ணத் தெரிந்த கலைஞர்கள் நம்மவர் என்று அறிகிற போது தமிழனாகப் பிறந்த நாமும் பெருமிதம் அடையலாம் தானே.

# தெய்வத்திருமணம்

மக்கள் பிறந்து வளர்ந்து பருவம் எய்தி, எண்ணற் கரிய அனுபவங்களைப் பெற்று, மூப்புற்று மறைகின்றனர் என்பதை எல்லோரும் அறிவார்கள். குழந்தைப் பருவத் தில், காண்பவர் எல்லோருக்கும் களிப்பை அருளினாலும் பூரணமான இன்பத்தைக் குழந்தையாக இருப்பவர்கள் பெறுகிறார்களா என்பது மனோதத்துவ நிபுணர்கள் கண்டறிய வேண்டியதொன்று.

வயோதிகர்கள் பருவத்தைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். தாங்கள் துன்பப்படுவதுடன் மற்றவர்களுக் கும் துன்பம் ஊட்டும் பருவம் அது. ஆதலால் மக்கள் வாழ்வில் இன்பப் பேறு அடைகின்ற பருவம் இரண்டிற் கும் இடையிட்ட பருவம்தான். கட்டிளம் காளையும், கவின் நிறைந்த கன்னியும், ஒருவரை ஒருவர் அடுத்து காதலித்து மணம் புரிந்து அனுபவிக்கும் இன்ப வாழ்வி னுக்கு இணையே கிடையாது. இருவரும் அக்காலத்து சேர்ந்து நடத்தும் வாழ்க்கை "மடநாகு உடனாகச் செல்லும் மழவிடை போல் செம்மாந்திருக்கும்" என்று கவிஞர் வர்ணிப்பர். இப்படி இணைந்து நடத்தும் வாழ்வு தான் மலர்ந்த வாழ்வாகும். மணம் வீசும் நாளாகும். அதனால் தான் ஆணையும் பெண்ணையும் இணைக்கும், அந்தச் சடங்கிற்கே மணம், திருமணம் என்றெல்லாம் பெயர் வைத்து விட்டார்கள் பெரியவர்கள்.

உருவமில்லாத கடவுளுக்கு உருவத்தைக் கற்பித்தான் கலைஞன். "ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றுமில்லாத

இறைவனை ஆயிரம் திருநாமம் சொல்லி தெள்ளேணம் கொட்டினான் கவிஞன். வாழ்விலே தான் கண்ட அனுபவங்களை எல்லாம் இறைவனுக்கும் ஏற்றி, அவனும் அதே அனுபவங்களைப் பெற்றவன்தான் என்று கட்டுரைத்தான் மனிதன். புல்லாய், பூண்டாய், புழுவாய், பறவையாய், பல் மிருகமாய் மனிதனாய் வளருகின்ற உயிர்த் தோற்றத்தை அறிந்த அறிஞன், இறைவன் மீனாய், ஆமையாய், பன்றியாய், சிங்கமாய், வாமனனாய், மனிதனாய், ராஜ தந்திரியாய் வளர்கின்றான் என்று கற்பனை பண்ணுகிறான்.

அதனால் காத்தற் கடவுள் தச அவதாரம் எடுக்க வேண்டியிருக்கிறது. இவன் நற்சிந்தையில், அறுபத்திநாலு திருவிளையாடல்கள் இறைவன் செய்தான் என்றும், அதே போல அறுபத்து நாலு மூர்த்தங்களாக உருவாகிறான் இறைவன் என்றும் கூறி வந்ததற்குத் தான் எவ்வளவு கற்பனை வேண்டும். எண்ணங்கள் விரிவாக விரிவாக அறுபத்தி நாலு, அறுபத்தி நாலு ஆயிரமாக உயர்ந்து கொண்டே போனாலும் வியப்பு இல்லைதான்.

சும்மா உட்கார்ந்திருந்தால் சுகாசன மூர்த்தம் என்பான். ரிஷபத்தில் ஏறிச் சவாரி செய்தால், ரிஷபாரூடன் என்பான். கட்டிய மனைவி பக்கத்தில் இருந்தால் உமா மகேஸ்வரன் என்பான். இருவருக்குமிடையே கந்தன் புகுந்தால் சோமாஸ்கந்தன் என்பான். கங்கையைத் தரித்தால் கங்காதரன். பிக்ஷைப் பாத்திரம் ஏந்தி நடந்தால் பிக்ஷாடனன். இல்லை எழுந்தே கூத்தாடினால், ஆனந்த நடராஜன் என்பான். இப்படி எத்தனை எத்தனையோ மூர்த்தங்களில் இறைவனை கண்டு தொழத் தெரிந்து இருக்கிறான் மனிதன். மனிதனது சிந்தனையில் இப்படி

வளர்ந்தோங்கிக் கொண்டே வந்த இறைவனுக்கும் இறைவிக்குமே திருமணம் முடித்து வைக்கவும் துணிந்து இருக்கிறான். ஒரு வேளை இவர்கள் திருமணத்தை இவன் இருந்து நடத்தி வைக்கா விட்டால் அவர்கள் வாழ்க்கை மணம் பெறாது என்று எண்ணினானோ என்னவோ!

கற்பனை பிறந்தது கலைஞனுக்கு, கதை பிறந்தது கவிஞனுக்கு, கதை இது தான்.

கயிலையில் அம்மையும் அப்பனும் வீற்றிருக்கிறார்கள். அந்த அனாதி காலத்தில் இருந்தே, தக்ஷன் மகள் தாக்ஷாயணி தந்தை தன் கணவனை மதியாத காரணத்தால், யாக குண்டலத்திலேயே புகுந்து மறைகிறாள். இதனால் அவமானம் உறுகிறாள். இதனால் தான் திரும்பவும் ஒரு பிறப்பு எடுத்து இறைவனை அடைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறாள். பிராத்தனை நிறைவேறுகிறது, பர்வத ராஜன் புத்திரியாகப் பிறந்து, அவன் மனைவியால் வளர்க்கப்படுகிறாள். இறைவனையே தான் நாயகனாக அடைய தவம் புரிகிறாள், என்றெல்லாம் கதை வளருகிறது.

உமையைப் பிரிந்த உமாமகேஸ்வரன் மோனத்தில் இருக்கிறான், முனிவர்கள் மயக்கங்கள் எல்லாம் தீர. அதனால் எல்லாத் தொழிலுமே ஸ்தம்பித்து விடுகிறது. மோனத்தைக் கலைக்க மன்மதனையே ஏவி விடுகிறார்கள் மற்றத் தேவர்கள்; மோனம் கலைகிறது. ஆனால் மன்மதன் வெந்து பொடி சாம்பலாகி விடுகிறான். மோனம் கலைந்து இறைவன் பர்வதராஜன் புத்திரி பார்வதியை மணந்து கொள்கிறான்.

பர்வதராஜன் புத்திரியை பரமேஸ்வரனுடன் சேர்க்கும் முயற்சியில் வெற்றி கண்டு விடுகிறான் மன்மதன், இந்த முயற்சியில் அவன் அழிந்தே போனான் என்றாலும் கூட காமனை வெல்வது கடவுளுக்கே சாத்யமில்லை என்ற

நிலையல்லவா ஏற்பட்டு விடுகிறது. அன்றுதான் பிறக்கிறது கவிதையும் காவியமும், இசையும் நடனமும் சித்திரமும் சிற்பமும்.

"மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண் திருவை உலகறியத் தீ வேட்டவனுடைய பெருமையை உலகறியப் பாடுகிறார் மணிவாசகர். அப்படி உலகறியத் தீ வேளாது ஒழிந்தினனேல் கலை நவின்ற பொருள்களெல்லாம் கலங்கி விடும் உலகனைத்தும் என்றும் உரைத்து விட்டார்.

இனிச் சந்தேகம் இல்லையல்லவா, கலை பிறக்குது காதலிலே, ஒரு சிலை பிறக்குது அந்தக் கதையினிலே. தஞ்சையில் கலைக்கூடம் நிறுவிய பின் தஞ்சை ஜில்லாவின் பல கிராமங்களில் மண்ணுக்குள் மண்ணாய் மறைந்து கிடந்த சிலா உரு வங்கள் பல வெளி வர ஆரம்பித்து இருக்கின்றன. அப்படி வெளி வந்தவைகளில் சிறந்த சிற்பச் செல்வந்தான் திரு வெண்காட்டில் இருந்து கிடைத்த செப்பு விக்ரஹங்கள் எட்டு, அவைகளில் நான்கு ஒரு நல்ல அமைப்பு.

அந்த நாலு விக்ரஹங்கள், நான் மேலே சொன்ன கதையை நமக்கு அறிவிக்கின்றன. புதிதாக மணமுடித்த பெண்ணைக் கூட்டிக் கொண்டு விரைவாகவே கயிலை செல்லத் துடிக்கிறார் சிவபெருமான். எட்டியே நடை போடுகிறார். முன் எவ்வளவோ நாள் பழகியவள் தான் என்றாலும் இன்று அவள் புது மணப் பெண்தானே. அதனாலே நாணிக் கோணி நிற்கிறாள்.

இந்த நிலையைக் காண்கிறாள் கலைஞன். அவன் உள்ளத்தில் உருவாகிறது சிலை. வலது கை நீண்டு வளைந்து இறைவனின் வலக்கரத்தைப் பற்றி மகிழ, இடக்கரம் லாகவமாய் மேல் நோக்கி நாணும் தலைக்குப்

பக்கபலமாக இருக்க அதற்கேற்ற நிலையில் காலும், உடலும் இடையும் கழுத்தும் துவள, ஒய்யாரமான ஒயிலுடன் நிற்கிறாள் பார்வதி. இத்தகைய அழகியைத் துணையாகப் பெற்ற இறைவன் நடையில் ஒரு மிடுக்கும் காண்பதில் அதிசயம் இல்லை தான். அரையில் கட்டிய அரைக்கச்சும், தோளில் அணிந்துள்ள வாகு வலயமும், மார்பினில் இலங்கும் யக்ஞோப வீதமும், அவர் அழகை அதிகப்படுத்துகின்றன என்றாலும் அவருடைய காம் பீர்யத்தைத் தலையில் அமைந்திருக்கும் கிரீடமே காட்டு கிறது.

மணக்கோலத்தில் இருக்கும் இந்த நாயகி நாயகன் நல்ல செல்வந்தர் என்று தெரிகிறது. இல்லாவிட்டால் உச்சி முதல் உள்ளங்கால் வரை சிறந்த அணிகள் இவர்களுக்கு எங்கே கிடைக்கப் போகிறது.



தங்கையின் திருமணத்தில் தமையனுக்கும் ஒரு சிறந்த இடம் கிடைத்து விடுகிறது. அவனும் வந்து விடுகிறான். தன் மனைவி சீதேவியுடன். பார்வதிக்கு நல்ல திருமணத் தோழியாக அவள் அமைந்து விடுகிறாள். தன் இடக் கையால் மைத்துனியைத் தழு வும் நிலையில் இருந்தாலும் புது மணப்பெண் ஆயிற்றே, நேரே பார்த்தால் நாணுவளே என்று தன் முகத்தை ஒரு பக்க மாகத் திருப்பிக் கொள்கிறாள், இந்த சீதேவி. அவளுக்குமே நாணம் வந்து விடுகிறது

இங்கே. தங்கைக்கு ஏற்ற மணவாளன் கிடைத்து விட்டார் என்ற பெருமிதத்தில் கொஞ்சம் எட்டி நின்றே கடைக் கணிக்கிறார் விஷ்ணு, இப்படி உருவாகி இருக்கிறது நான்கு சிலைகள், பார்வதியும் பரமசிவனும் ஒரே வார்ப்பில் உருவானவை. சீதேவியின் பீடமும், மற்றைய சிலை உருவங்களின் பீடமும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதால், சிலைகளை எப்படி அமைத்துக் காண வேண்டும் என்பதில் சிரமமே இல்லை. இந்த நான்கு உருவங்களும் அளவில் சிறியவையே. எல்லாம் இரண்டு மூன்றடி உயரமே. ஆனால் அவை கலையுலகில் உயர்ந்திருக்கும் உயரத்திற்குக் கணக்கே யில்லைதான்.

இந்த நல்ல சிற்ப உருவங்கள் நாலும் இன்றிருப்பது தஞ்சைகலைக் கூடத்திலே. சென்று காண வசதி உடைய வர்கள் சென்று காணட்டும். அதற்கு இயலாதவர்கள் படத்திலாவது கண்டு மகிழட்டும், கதையைப் படிக் கட்டும், கலையை உணரட்டும்.

# சிற்ப வடிவில் ஒரு நாடகம்

தாருகாவனம் என்று ஓர் இடம். அங்கே முனிவர் பலர் தவம் செய்கிறார்கள். கலைகளைக் கற்கிறார்கள், வேதங்கள் ஓதுகிறார்கள், யாகங்கள் செய்கிறார்கள். இதனால் எல்லாம் சிறந்த அறிவையும் பெறுதற்கரிய சித்திகளையும் பெறுகிறார்கள். அறிவோடு வளர்கிறது ஆணவம், தம்மை ஒப்பாரும் தமக்கு மிக்காரும் இல்லை என்ற கர்வமும் அதிகம் ஆகிறது. அதனால் இறைவனைப் பழிக்கிறார்கள்; உதாசீனம் செய்கிறார்கள். இவர்கள் கர்வத்தைக் குலைத்து ஆணவத்தை அடக்கி ஆட்கொள்ளப் புறப்படுகிறார் சிவபெருமான், உடன் புறப்படுகிறார் மகா விஷ்ணுவும்.

கங்காளன் உருவில் கையில் டமரு முகத்தைக் கொட்டி முழக்கிக் கொண்டு, தாருகாவனத்திற்கே வந்து விடுகிறார் சிவபெருமான். மோகனமான மோகினி உருவில் விஷ்ணுவும் பின் தொடர்கிறார். இந்த ஆணழகன் ஆட வல்லானைக் காண வருகிறார்கள் அங்குள்ள ரிஷி பத்தினிகள் எல்லாம். அவ்வளவுதான். அன்னம் இட அகப்பையோடு வந்த அரிவையர் எல்லாம் அழகைக் கண்டு மயங்கி நின்று நிறை அழிகின்றனர். மோகினியைத் தொடர்ந்த முனிவர்களது கதையும் அதேதான்.

அறிவையும், தவ வலிமையையும் இழந்து பின் தொடரு கிறார்கள். இவர்கள் ஆணவம் எல்லாம் அழிகிறது, இவ்விருவர் வருகையால். இப்படி ஒரு கதை. கதை நல்ல நாடகம் நடிப்பதற்கு ஏற்றதாக இருக்கிறது.

உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை உருவாக்கி, அதன் மூலம், நாடகம் காண வருபவர்களின் உள்ளம் கவர் வதைத் தானே நல்ல நாடகம் என்கிறோம் நாம்.

ஆனால் இத்தகைய நாடகம் நடிப்பதற்கு, நல்லதொரு அரங்க மேடை வேண்டும். வர்ண விஸ்தாரம் நிறைந்த காட்சி ஜோடனைகள் வேண்டும்; சிறந்த நடிகர்கள் வேண்டும்; அவர்களுக்கு உயர்ந்த ஆடை அணிகள் வேண்டும்; பின்னணி வாத்திய கோஷ்டி வேண்டும்; முன்னாலே மின் சார விளக்குகள் வேண்டும். இத்தனை யும் ஒன்றாய்க் கூடி நாடகம் உருவாக வேண்டும்.

இப்படி நடத்தப் பெறும் நாடகம் ஒரு நாள் நல்ல வாய்ப்பான நாடகமாக அமையும், இன்னொரு நாள் அழுது வடியும். நடிப்பவர்கள் எல்லாம் மனிதர்கள் தாமே. எப்பொழுதும் ஒரே நிலையில் அவர்கள் இருக்க இயலாதவர்கள் ஆயிற்றே. நாடகத்தின் வெற்றியும் தோல்வியும் நாளையும் கிழமையையும் பொறுத்ததாகி விடுகிறது.

ஆனால், அரங்கம் இல்லாமல், திரைச்சீலை இல்லா மல், காட்சி ஜோடனைகள் இல்லாமல், பின்னணி வாத்தியமில்லாமல். மின்னும் விளக்குகள் இல்லாமல் நாடகம், நடத்தத் தெரிந்தவர்கள் தமிழ் நாட்டுக் கலைஞர்கள். அந்தக் கலைஞர்கள் வரிசையில் முதலில் நிற்பவன் கவிச் சக்கரவர்த்தி கம்பன். இராம கதையை காவியமாக எழுத முனைந்தவன், இராம நாடகத்தையே அல்லவா நடத்துகிறான். அழகான காட்சிகளை உருவாக்கி, அதில் அற்புதமான பாத்திரங்களை நடமாட விட்டு, இதயத்தைத் தொடும் இன்னிசை எழுப்பி, சிறந்த நாடகத்தையே நடத்தி விடுகிறான். அடுத்தடுத்து வரும். அழகான காட்சிகள் ஒன்றா இரண்டா? ரஸானுபவங்களும் ஒன்பதா, பத்தா? எத்தனை எத்தனையோ விதத்தில்



எண்ணற்ற 'காட்சி களைக் காட்டி நம்மையெல்லாம் ஒரே ஆனந்த அனுபவத்தை அல்லவா அடையச் செய்கிறான். இவன் செய்தது பிரமாதம் இல்லை. இவன் சொல்லையும் இசையையும் வைத்து இத்தகைய அற்புதத்தைச் செய்கிறான். சொல்லும் இசையும் இல்லாமல் கல்லையும் உளியையும் வைத்தே நாடகம் நடத்திக் காட்டுவோம் நாம் என்கிறான், ஒரு தமிழ் நாட்டுச் சிற்பி. தாருகாவனத்து ரிஷி பத்தினியர் கதை யையே எடுத்துக் கொள்கிறான். அதைக் கல்லுருவில் நடத்திக் காட்டி வெற்றி பெறுகிறான்.

தாருகாவனத்துக்கு நடந்தே வருகிறான் சிவபெருமான் கங்காளன் உருவத்தில். நீண்டுயர்ந்த மகுடம், தலையை அலங்கரிக்கிறது குழையும், சுருள் தோடும் காதுகளில் மிளிர்கின்றது. தோளிலே வாகுவலயம்; மார்பிலே பொன்னாரம், காலிலே பாதுகை, ஒரு கையிலே மயிற் பீலி, மற்றொருகையில் துடி. இந்தத்துடியை முழக்கிக் கொண்டு, பக்கத்திலே வரும் மானுக்கும் புல்லருத்திக் கொண்டு அசைந்த நடை போட்டு, கன ஜோராக வருகிறான் கங்காளன். இவன் துடி ஒலிக்கத் துடி ஒலிக்க, துடிக்கிறது உயிர்கள் எல்லாம். பர்ண சாலையில் உள்ளே கிடந்த ரிஷி பத்தினிகளும் ஒவ்வொருவராக வெளியே வருகிறார்கள்.

வந்தவள் ஒருத்தி ஒசிந்த நோக்கோடு அழகனைக் காணுகிறாள். ஒருத்தி முகிழ்த்த முறுவலோடு தன்னை



மறக்கிறாள். கயமலர் கண்ணினை உடைய ஒருத்தியோ, விழித்த கண் விழித்த படியே நின்று மெய் மறக்கிறாள். இப்படி வந்தவர்கள் ஏழுபேர். 'எல்லோரும் நிறை அழிகிறார்கள். நாணி நிற்கிறார்கள். ஏழுபேருடைய உணர்ச்சியும் ஒன்றே தான் என்றாலும் அதை ஏழு விதமாக அமைக்கிறான் சிற்பி. பொதுவாக நோக்கினால், "சொல் நலம் கடந்த காமச் சுவையை ஓர் உருவம் ஆக்கி, இந்நலம் தெரியவல்லார்" எழுதியது என்ன நிற்கின்றார்கள் எழுவரும்.

இவர்களில் இருவரை மட்டும் ஒரு 'குளோஸ் அப்' காட்சியில் பார்க்கலாம். ஒருத்தி தன் மனம் திரும்பவும் திரும்பவும், அந்தக் கங்காளன் பக்கத்தே செல்வதை அறிந்து அந்த மனதை அடக்கி அவன் பக்கமே திரும்பும் முகத்தைத் திருப்ப முயல்கிறாள். இன்னொருத்தியோ, தன் நாணத்தை எல்லாம் மறைக்க, இந்தப் பெண் பின்னாலேயே மறைந்து நிற்க விரைகிறாள். இருவரும் காணுவதெல்லாம் கங்காளன் அழகைத்தான். இருவர் உள்ளமும் குதூகலிப்பதும் அதனால்தான்; இருவர் உடை நெகிழ்வதும், வளை கழல்வதும் அதனால் தான். கம்பன் சொன்னான், இராமன் அழகு கண்டு மிதிலைப் பெண்கள் நின்ற நிலையை "தன்னையும் தாங்கலாதார் துகில் ஒன்றும் தாங்கி நின்றார்" என்று. அந்த நிலையில் தான், தம்மையே தாங்க இயலாத இவர்கள் நழுவும் துகிலைத்

தாங்கித் தங்கள் மானம் காக்க விரைகிறார்கள். இத்தனையும் நடக்கிறது ஒரு நாடகமாக, இந்த நாடகத்தைச் சொல்லில் வடித்தார் ஒரு கவிஞர்.

**அடியில் தொடுத்த பாதுகையும்**
**அமைந்த நடையும் இசைமிடறும்**
**வடிவில் சிறப்ப நடந்தருளி**
**மூழை ஏந்தி, மருங்கணைந்த**
**தொடியில் பொலி தோன் முனி மகளிர்**
**சுரமங்கையரை மயல் மூட்டி**
**படியிட்டு எழுதாப் பேரழகால்**
**பலிதேர் பகவன் திரு உருவம்**

என்று இத்தனை நாடகத்தையும் கல்லில் வடித்தான் ஒரு சிற்பி. இந்தச் சிற்ப நாடகத்தைக் காண விரும்புபவர்கள் எல்லாம் நேரே தஞ்சாவூருக்கே செல்ல வேண்டும். அங்கு அரண்மனைக்குள் அமைந்திருக்கும் கலைக் கூடத்தைச் சென்று காண வேண்டும். கலைக் கூடத்தின் தென் பகுதியில் இந்த நாடகம் நடந்து கொண்டிருக்கும்; காட்சி ஜோடனைகள் மாறாது. எப்போதும் நிரந்தரமாகவேயிருக்கும்.

அந்த நாடகக் காட்சி. கலை நுணுக்கம் தெரிந்தவர்கள் காதுகளில் எல்லாம் துடி ஒலிக்கும் ஓசையே கேட்கும். படியிட்டு எழுதாப் பேரழகு நிறைந்த அந்த கங்காளன் திரு உருவத்தையே நோக்கிக் கொண்டிருந்தால் ஒரு வேளை நாமும், அந்த முனிமகளிரைப் போலவே, கல்லாகவே அங்கு நின்று விடுவோமோ என்னவோ? அதைத் தடுக்கவா வது, அழகன் பேரில் வைத்த கண்ணை எடுத்து, அந்த அழகிகளின் அங்க அவயவங்களில் எல்லாம் காணும் அந்த அற்புதமான உணர்ச்சியை உணர்ந்து மகிழலாம். நிறைந்த மனத்தோடு வீடும் திரும்பலாம்.

# கண்டறியாதன கண்டேன்

தண்டகாரண்யத்தில் பஞ்சவடியிலிருந்து சீதையை ராவணன் அபகரித்துப் போய் விடுகிறான். சீதையைத் தேடி ராமனும் லக்ஷ்மணனும் காடும் மலையும் கடந்து வருகிறார்கள். இவர்களைச் சொல்லின் செல்வனான அனுமன் எதிர்கொண்டு அழைத்து, அவனுடைய அரசனான சுக்ரீவன் இருக்கும் மலைப்பக்கம் இட்டுச் செல்கிறான். சுக்ரீவன் தூரத்திலே வருகின்ற ராமனையும் லக்ஷ்மணனையும் பார்க்கிறான். முதல் முதல் அவனுக்கு இருவரது அழகுதான் தென்படுகிறது. புண்டரீகங்கள் பூத்து புயல் தழீப் பொலிந்த திங்கள் மண்டலம் உதயம் செய்த மரகதக் கிரிபோல் இருந்த இருவரையும்தான் முதலில் காண்கிறான்.

அந்த மரகதக் கிரிகளையே கொஞ்சம் உற்று நோக்குகிறான். அதன் பின் அப்போது தெரிகிறது அந்த அழகுக்குப் பின் அமைந்து கிடக்கும் அவர்கள் வீரம். ''வீரராய் விளைந்த'' அவ்விருவரையும் இன்னும் கொஞ்சம் கூர்மையாகவே சுக்ரீவன் நோக்கிய பிறகு விளங்கிற்று அவனுக்கு இவர்கள் அழகிய வீரர்கள் மட்டுமல்ல, 'அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர்கள்' என்று. அவர்களது தெய்வத் தன்மையை தேறி உணர்ந்த பின், மானுடராக அல்லவா இவர்கள் மாறி இப்பிறப்பில் வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறான்.

**ஆறுகொள் சடிலத்தானும், அயனும்**
**என்று இவர்களாதி**

வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்றதம்மா!

என்றே ஆர்ப்பரிக்கிறான். இப்படி சுக்ரீவன் கண்டு, நோக்கித் தேறியதை கவிச்சக்கரவர்த்தி கம்பர் நிரம்பவும் அருமையாகக் கூறுகிறார்.

கம்பர் சொல்லும் கதையை விட்டு விடலாம். அவர் சொல்லும் இந்த மூன்று பாட்டுகளுக்குள் ஒளிந்து கிடக்கும் உண்மையை மட்டும் பார்க்கலாம். இந்த உலகத்திலே சிலர், கண்ணால் காண்பதை மட்டுமே உண்மை என ஒத்து கொள்கிறார்கள். அவர்கள் காட்சிக்கு அப்பாற்பட்ட அத்தனையையும் பொய் என ஒதுக்கித் தள்ளி விடுகிறார்கள்.

இன்னும் ஒரு சிலர், கண்ணால் காண்பதை விட அறிவால் அறியும் விஷயங்களும் உண்டு. அவைகளும் நல்ல உண்மைகள் தாம் என்று முன் சொன்னர்களை விட இன்னும் ஒரு படி மேலே செல்கிறார்கள். இவர்கள் நிலை உயர்ந்ததுதான்.

ஆனால் இந்த நிலைக்கும் அப்பாற்பட்டதும் ஒன்றிருக் கிறது. கண்ணால் காண்பதையும், அறிவால் அறிவதையும் விட, இறை அருளாலே தேர்ந்து தெளியும் நிலையும் ஒன்று உண்டு. அந்த நிலையில்தான், கண்டு அறியாத வற்றையும் கண்டு விடுகிறார்கள் பலர். கடவுளைக் காண்பது எளிதல்ல தான். ஆனாலும் அவன் அருளே கண்ணாகக் காணும் பேறு பெற்று விட்டால், கண்டு அறியாதவற்றையும் கண்டு விடலாம். ''கண்டறியாதன கண்டேன்'' என்று அற்புதமாகப் பாடியும் விடலாம். அப்படிப் பாடியவர் அப்பர் அடிகள்.

அப்பர் பெருமான் கயிலாயத்தை நேரே தரிசிக்க விரும்பினார், காலால் நடந்தே புறப்பட்டு விட்டார். கால்கள் தேய்ந்து நடக்க முடியாமற் போயிற்று என்றாலும் விட்டாரில்லை. கையைத்தரையில் ஊன்றி ஊன்றி நடந்தார். அதிலும் தளர்ச்சி ஏற்பட்டபின் மார்பாலேயே ஊர்ந்து சென்றார். எப்படியும் கயிலை சேர்ந்து விட உறுதி பூண்டார். இந்த உறுதியை இறைவன் கண்டார். இறைவன், அவர் நின்ற இடத்திலேயே ஒரு திருக்குளத்தை தோற்றுவித்து அதில் மூழ்கி எழுந்திருக்கச் சொன்னார். அப்படி மூழ்கியவர் தான் திருவையாற்றுக்கு வந்தார். அங்கேயே கயிலையைக் கண்டார். இப்படி யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றார் அப்பர். அங்கும் கயிலாயத்தில் உள்ள நிலையை கண்டார். ஆம் காணுகின்ற பொருள்களில் எல்லாம் உயிர்களில் எல்லாம் சிவத்தையும் சக்தியையும் கண்டார்.

காதல் மடப் பிடியோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்
பேடை மயிலோடும் கூடி
பிணைந்து வருவென கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்
வரிக்குயில் பேடை யோடு ஆடி
வைகி வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்

என்றெல்லாம் பாட முடிகிறது அவரால், உண்மை தானே. நாம் கண்ணாலே காண்பதெல்லாம் களிறையும் பிடியையும் மயிலையும் பேடையையும் தான். அறிவைத் துணைக் கொண்டு நோக்கி ஆண் பெண் இரண்டு பெரிய தத்துவங்கள் அந்த உயிர் பிராணிகளிடத்தே அடங்கிக் கிடப்பதையும் கூடக் கண்டு விடலாம்.

ஆனால் அவன் அருளே கண்ணாகக் கொண்டு பார்க்கும் போதுதான் சிவமும் சக்தியும் ஒன்றி நின்று, ஒவ்வொரு உயிர்த்தத்துவத்திலும் காட்சி கொடுப்பதைக் கண்டு விடுகிறார் அப்பர். கண்டு அறியாதன எல்லாவற்றையும் கண்டு எக்களிப்புடன் கூறுகிறார் நமக்கு. நமக்கு அந்த அனுபவம் எல்லாம் சித்தியாகவா போகிறது.

ஒரு கோயிலுக்குப் போகிறோம், இரண்டு நண்பர்களுடன். கொஞ்ச தூரத்தில் போகும் போதே கோயில் மதில், கோபுரம், விமானம் எல்லாம் தென்படுகிறது. காட்சியில் மட்டும் நம்பிக்கை வைத்துள்ள நண்பர் சொல்கிறார். என்ன! எல்லாம் கல்தானே - கல்லால் கட்டிய கோயிலுக்கு என்ன இத்தனை முக்கியத்துவம் என்கிறார்.

நாம் சொல்கிறோம், இல்லை, கோயில் வெறும் கல்லில்லை - அந்தக் கல்லிலே தான் எத்தனை எத்தனை சிற்றுளி வேலைகளின் நயம். கோபுரத்தின் ஒவ்வொரு பகுதியும் - விமானத்தின் ஒவ்வொரு அடுக்கும் - அந்தக் கோயிலை உருவாக்கிய சிற்பியின் கலைத்திறனை அல்லவா பறை சாற்றுகின்றது. அங்கு கல்லையா பார்க்கிறோம். கல்லில் உருவான கலையையே அல்லவா காண்கிறோம் என்கிறோம் நாம்.

ஆனால் அந்த மூன்றாவது நபர் இருக்கிறாரே, எல்லோருடைய பேச்சையும் மௌனமாகவே கேட்டு விட்டு கடைசியில் சொல்கிறார் "உண்மை தான், நேரிலே காண்பது கல். அறிவாலே தெரிந்து கொள்வது கலை. ஆனால் இந்தக் கல்லுக்குள் கனியாகவும், கலைக்குள் கடவுளாகவும் காண்கிறோமே அந்தத் தெய்வத் தன்மை, அதற்கென்ன சொல்வது'' என்கிறார். ஆம் அவர் சொல்வது தான் எவ்வளவு பொருத்தம்.

கண்டு அறியாதவற்றைத் தானே காண்கிறார் அவர். நாமும் அவருடன் - அப்பருடன் சேர்ந்து கண்டறியாதன கண்டேன் என்று பாடி மகிழலாம் அல்லவா! அப்படியே பாடித் துதிப்போம் நாம் எப்போதும்.

# ஆண்டவன் வடிவிலே ஒரு ஐயம்!

இன்று இறை வழிபாட்டில் நம்பிக்கையுடைய அன்பர்கள் எல்லாம் அவரவர் வீட்டில் விக்ரஹங் களையோ, இல்லை. திரு உருவப் படங்களையோ வைத்துப் பூசை செய்து வருகிறார்கள். இந்த ஆத்திக அன்பர்கள் இடையே ஒரு பிரச்சனை; யார் யார் படங்களைப் பூசைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று; இதைவிட யார் யார் திரு உருவை வைத்துக் கொள்ளக் கூடாது என்று; விநாயகரை வைத்துக் கொள்ளலாம், வள்ளி தெய்வானையோடு கூடிய குமரனை வைத்துக் கொள்ளலாம், அன்னை மீனாக்ஷியை, அகிலாண்டேஸ் வரியை இன்னும் தாயான அம்பிகை பலரையும் வைத்துக்கொள்ளலாம்.

கலைமகளை வைத்துக் கொள்ளலாம் அலைமகளை வைத்துக் கொள்ளலாம், ஆனால், நடராஜனையோ, பிக்ஷாடனனையோ, கஜசம்ஹாரனையோ இல்லை பழனியாண்டவனையோ வைத்துக் கொள்ளலாமா? என்பது கேள்வி. நடராஜன் ஒரு காலைத் தூக்கி இருக்கிறானே நம்மையும் காலை வாரி விட்டு விடுவானோ என்னவோ? என்று ஓர் அச்சம் பலருக்கு.

சம்ஹார மூர்த்தியையோ, பிச்சைக்குப் புறப்படு பவனையோ, எங்கு வைத்தாலும் வீட்டில் வைத்துக் கொள்ளுதல் கூடாது என்று ஒரு எண்ணம் சிலருக்கு.

இந்தப் பழனியாண்டியோ, மொட்டை அடித்து, கோவணம் மாத்திரமே கட்டிக் கொண்டு கோலூன்றி எல்லாவற்றையும் துறந்த நிலையிலே அல்லவா நிற்கிறான். அவனை வீட்டில் வைத்து வழிபட்டால் நம்மையுமே மொட்டை அடித்து எல்லாவற்றையும் துறக்கும்படி செய்து விடுவானோ என்னவோ என்ற பயம். ஆதலால் யார் படத்தைப் பூசையில் வைத்திருந் தாலும் பழனியாண்டவன் படத்தை வைத்திருத்தல் கூடாது. இப்படி ஒரு எண்ணம்.

இந்த எண்ணம் எவ்வளவு தவறானது என்பதைக் காட்டவே இச் சிறு கட்டுரை. இறைவனை எந்த மூர்த்தத் தில் வேண்டுமானாலும் வைத்து வணங்கலாம். 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திரு நாமம் பாடித்தெள்ளேனம் கொட்டத்' தெரிந்தவன் தமிழன்.

'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறைவன், என்று எழுதிக் காட்ட ஒண்ணாத' ஒரு வனைப், பல கோலங்களில் கல்லிலும செம்பிலும் ஆக்கி நாடு முழுவதும், கோயில்கள் தோறும் நிறுத்தத் தெரிந்தவன் தமிழன். 'கற்பனை கற்பிக்கும் கடவுளின்' கோலத்தில் எந்தக் கோலமும் வந்தித்து வணங்கி வழிபாடு செய்வதற் குரியதே.

அதிலும் இளைஞனாக, அழகனாக, வீரனாக எல்லாம் காட்சிகொடுப்பவன் முருகன். 'மணம் கமழ் தெய்வத்து இளநலம்' காட்டுபவன் அவன். அவன் வடிவங்களில் ஒருவடிவமான பழனியாண்டவன் திருக்கோலம் எப்படி எழுந்தது என்று அறியலாம் தானே.

முருகன் இளைஞனாக, அழகனாக மட்டும் இருக்கிற வனில்லை. சிறந்த வீரனாகவும் இருப்பதை தேவ

சேனாபதித் திருக்கோலத்திலே பார்க்கிறோம். இத்துடன் சிறந்த அறிஞனாகவும் இருக்கிறான். ஞானப் பழமாகவே அன்னைக்கும், ஞான குருவாகவே தந்தைக்கும் அமைந்தவன் என்றல்லவா அவனைப் பற்றிய கதைகள் கூறுகின்றன.

அன்றொரு நாள் காலையிலே, அன்னை பார்வதியும் அத்தன் பரமசிவனும் அமர்ந்திருக்கிறார்கள் கயிலை மலையிலே. அங்கு வந்து சேருகிறார் நாரதர். அவர் சும்மா வரவில்லை, கையில் ஒரு மாங்கனியையும் கொண்டு வருகிறார். அதை ஐயனிடம் கொடுத்து அவன்றன் ஆசி பெறுகிறார். அவனுக்குத் தெரியும் இவர் செய்யும் விஷமம்.

அந்த விஷமத்திலிருந்து தானே பிறக்க வேண்டும் ஓர் அற்புத உண்மை. நாரதர் தந்த கனியைச் சிவபெருமான் அன்னை பார்வதியிடம் கொடுக்கிறார். பார்வதிக்கு ஓர் ஆசை. மக்கள் இருவரையும் அழைத்து எல்லோரும் சேர்ந்து உண்ணலாமே என்று. மக்களும், ஆம் விநாயகரும் முருகனும் தான், வந்து சேருகின்றனர்.

இதற்குள் சிவபெருமான் நினைக்கிறார், 'இந்தக் கனிமூலம் ஒரு போட்டிப் பரீக்ஷையே நடத்தலாமே' என்று. 'உங்களுக்குள் ஒரு பந்தயம். யார் இந்த உலகை முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கே இக்கனி' என்கிறார் சிவபெருமான்.

இந்தப் போட்டியில் தனக்குத் தான் வெற்றி என்று மார் தட்டிக்கொண்டு மயில் வாகனத்தில் ஏறி ககன வீதியிலே புறப்பட்டு விடுகிறான் முருகன். விநாயகருக்கோ, தம் மூஷிக வாகனத்தில் ஏறிக் கொண்டு தம்பியுடன் போட்டிபோட முடியாதுதான். ஆனால், அவர் சாவதான

மாக அன்னையையும் அத்தனையும் சேர்ந்தே ஒரு சுற்றுச் சுற்றுகிறார். 'உலகம் உங்களிடம் தோன்றி, உங்களிடம் நிலைத்து, உங்களிடம் தானே ஒடுங்குகிறது ஆதலால் உங்களைச் சுற்றினால் உலகத்தைச் சுற்றியதாகத் தானே அர்த்தம். கொடுங்கள் கனியை' என்கிறார்.

மறுக்க முடியாமல் கனியைக் கொடுத்து விடுகிறார்கள் அம்மையும் அப்பனும் விநாயகரிடம். உலகத்தை எல்லாம் சுற்றி, அலுத்து வந்த பிள்ளை விஷயம் அறிந்து தாய் தந்தையரிடம் கோபித்துக் கொண்டு கோவணாண்டியாக வெளியேறி விடுகிறான் கயிலையை விட்டு. தாயாகிய பார்வதி, 'அப்பா! நீயே ஞானப்பழமாக இருக்கும்போது உனக்கு வேறு பழம் நாங்கள் தர வேண்டுமா?' என்று கூறி சமாதானப் படுத்துகிறாள். இப்படித் ஞானப் பழமாகவே இருக்கும் பழனியாண்டவன் - பழனி மலை மீது ஏறி நின்று கொண்டிருக்கிறான் என்பர் புராணிகர்கள்.

இத்துடன் இன்னொரு கதை. மூவர்க்கும் முதல்வனான முருகனை, ஏனோ ஒரு நாள் பிரமன் மதியாது நடந்திருக்கிறான். அவ்வளவுதான், அவனை அழைத்து அவன் செய்யும் சிருஷ்டிக்கே அடிப்படையான பிரணவத்தின் பொருள் சொல்லச் சொல்லியிருக்கிறான் முருகன். பிரமன் சொல்லமுடியாமல் விழித்திருக்கிறான். உடனே அவனைக் காதைப் பிடித்து இழுத்து தலையிலே குட்டி, 'பிரணவத்தின் பொருளை அறியாத நீ,' சிருஷ்டி செய்ய அருகதை உடையனில்லை' என்று கூறிச் சிறையிலேயே அடைத்து விடுகிறான் முருகன். விஷயம் அறிகிறார் சிவபெருமான்; மகனிடத்து வருகிறார். 'உனக்குத் தெரியுமா பிரணவத்தின் பொருள்?' என்று கேட்கிறார். 'ஓ! தெரியுமே,' என்று எகத்தாளமாகச் சொல்கிறான். 'இப்போது சொல் பார்ப்போம்' என்கிறார். சளைக்க

வில்லை முருகன். 'கேட்கிறபடி இருந்து கேட்டால் சொல்லுவோம,' என்று அழுத்தலாகவே கூறுகிறான்.

பார்த்தார் சிவபெருமான் வேறு வழியில்லை. தன் பிள்ளையின் காலடியிலே சிஷ்யனாக அமர்ந்து, கை கட்டி வாய் பொத்தி, பிள்ளை மூலமாகவே பிரணவ மந்திர உபதேசம் பெறுகிறார். இப்படித் தான் 'குருவாய் அரனுக்கும் உபதேசித்தான் குகன்' என்பர் அறிஞர்கள். இந்த ஞானபண்டிதன்தான், சுவாமிநாதன் என்ற பெயரோடு அந்தப் பழைய ஏரகம் - இன்றைய சுவாமி மலையில் இருந்து, தன் தந்தைக்கு மாத்திரம் அல்ல, உலகில் உள்ள மக்கள் எல்லோருக்குமே, ஞான உபதேசம் செய்து கொண்டிருக்கிறான்.

இதில் ஒரு வேடிக்கை - ஞானப்பழமாக நிற்கும் பழநி யாண்டவனும், ஞான பண்டிதனாக விளங்கும் சுவாமி நாதனும், கோவணாண்டியாகவே நிற்கின்றனர். கையில் தண்டு ஒன்றை மட்டும் ஏந்திக் கொண்டு, மற்றைய உடைமைகளை எல்லாம் துறந்து விடுகிறார்கள், சின்னஞ் சிறு பிள்ளையாக இருக்கும்போதே.' ஏன் இப்படி இந்த இரண்டு மூர்த்திகள் மட்டும் முற்றும் துறந்த முனிவர்களாக இருக்கிறார்கள் இந்த இளவயதிலேயே?' என்று கேட்டேன் பலரிடம்.

இந்தக் கேள்விக்கு விடைதேடிப் புரட்டினேன், பல புத்தகங்களை. விடை கிடைப்பதாக இல்லை. விளையாட் டாகச் சொன்னார் ஒரு பக்தர் 'ஒரு மனைவியே சற்று ஏறுமாறாய் இருந்தால் சந்நியாசம் கொள்ள வேண்டியது தானே; ஒன்றுக்கு இரண்டு மனைவியர் என்றால் ஒருவரிடமும் கூறாமல் சந்நியாசம் கொள்வதைத் தவிர வேறு வழி என்ன?' என்று.

ஆனால் இந்த மனைவியரை அடையும் முன்பே அல்லவா, மணம் ஆகாத அந்த இளவயதிலேயே அல்லவா முருகன் பால சந்நியாசி ஆகிவிடுகிறான்.

தமிழ் நாட்டு அறிஞன், அந்தப் பொய்யில் புலவன் வள்ளுவன் சொன்னான், இவ்வுலகில் இருக்கும் துன்பங்களில் இருந்தெல்லாம் விடுபடவேண்டுமானால், இவ்வுலகத்தில் நாம் உடைமை என்று கருதுகின்ற பொருள்களில் உள்ள ஆசையை எல்லாம் விட்டு விடவேண்டும்; அப்படி ஆசையை விட விடத்தான், பெற வேண்டிய பேறுகளை எல்லாம் பெறலாம் என்று.

**வேண்டின் உண்டாகத்**
**துறக்க, துறந்தபின்**
**ஈண்டு இயற்பால் பல**

என்பது தானே அவன் சொன்ன அருமையான குறள். உண்மைதானே. உலக மக்களுக்கு எல்லா நன்மைகளையும் பேறுகளையும் அளிக்க விரும்பும் நாயகன், அந்த உலகத்து உடைமைகளிலேயே, பேறுகளிலேயே தானும் ஆசை வைத்து அதில் திளைத்து நின்றால் எப்படிப் பக்தர்களுக்கு அருள் செய்ய இயலும். ஆதலால் அவன் உடைமைகளை எல்லாம் துறக்கிறான், மக்களுக்கு எல்லாம் அவர்கள் வேண்டிய பேறுகளை எல்லாம் அளிப்பதற்காகவே.

அவன் முற்றத் துறந்து கோவணாண்டியாக நிற்பதினாலேதான், நாம் பெறற்கரிய பேறுகளை எல்லாம் பெற முடிகிறது. அவன் துறவியானது நம்மை எல்லாம் துறவிகளாக்க அல்ல, ஆக்கம் உடையவர்களாக, அருளுடையவர்களாக ஆக்கத்தான். மக்கள் வாழ்வதற்காகவே ஆண்டவன் துறவுக் கோலம் பூணுகிறான். இல்லாவிட்டால் அவனுக்குப் பற்று, துறவு என்றெல்லாம் உண்டா?

இத்துடன், அவன் வள்ளுவன் சொன்ன மற்றொரு உண்மையையுமே நன்றாக அறிந்தவன். இவ்வுலகத்தின் செலாவணி நாணயம் பொருள். அது போல பேரின்ப உலகத்திற்குச் செலாவணி நாணயம் அருள். இரண்டும் இல்லாமல் வாழ்வு பூர்த்தியாகாது.

**அருள் இல்லார்க்கு அவ்வுலகம்**
**இல்லை. பொருள் இல்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி ஆங்கு**

என்று தெரியாமலா சொன்னான் வள்ளுவன். இதைத் தெரிந்து முருகனே அருளையும் பொருளையும் சேர்த்தே மக்களுக்கு வழங்க, ஆண்டியாக வேடம் புனைந்து ஆண்டவன் ஆகிறான்; ஞானப் பழமாக, ஞானபண்டித னாக நின்று, நமக்கெல்லாம் ஞானம் புகட்டுகிறான்; மங்கையர் இருவரை மணந்து நல்ல மணவாளன் ஆகிறான்; செல்வம் கொழிக்கும் சீரலை வாயிலில் சிறந்த செல்வனாகவே வாழ்கிறான். எல்லாம் மக்கள் இனம் உய்யத்தான்.

இப்போது பெறுகிறோம் விடை, ஞானப்பழமாக நிற்கும் பழனியாண்டவனை நமது பூசையில் வைத்து வணங்கலாமா, வணங்கக் கூடாதா? என்ற கேள்விக்கு. இன்னும் ஆச்சரியம், பழனி யாண்டவன் நல்ல மொட்டை ஆண்டி என்றுதானே நேரில் சென்று தரிசித்த வர்களும் பின்னர் கடைகளில் படங்களை விலைக்கு வாங்கியவர்களும் அறிகிறோம். உண்மையில் அவன் மொட்டை ஆண்டி அல்ல அப்பனைப் போல் சடை யாண்டியே என்று சொன்னால் பலர் நம்ப மாட்டீர்கள். ஆனால் சமீபகாலத்தில், கோயில் நிர்வாகிகளின் வேண்டுகோளின்படி ஆண்டவன் அருகிலேயே சென்று அவன் திருக் கோலத்தைக் கண் குளிரக் கண்டு, அதை

ஓவியமாக வடித்து. எடுத்திருக்கும் ஆனந்த விகடன் சித்ரீகர் சில்பி' அவனைச் சடையாண்டியாகவே காட்டு கிறார். அவிழ்ந்து தொங்கும் சடை அவன் தலையை அலங்கரிக்கிறது என்பதை, அவர் எழுதியிருக்கும் படத்தில் காணலாம். சரி, இனிமேலாவது அவன் நம்மை மொட்டை அடிக்கும் மொட்டை ஆண்டி அல்ல, நல்ல சடையோடு கோலாகலமாகக் காட்சி தருபவனே என்று அறியலாம் அல்லவா.

வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தரும் இந்த ஞானப் பழத்தை, இனி நெஞ்சில் மாத்திரம் அல்லாமல் பூசை அறையிலும் வைத்து, வந்தித்துச் சுவைக்க தயக்கம் ஒன்றும் வேண்டாம் தானே!

# கொடியடியில் மடக்கொடி

அயோத்தி நகரிலிருந்து மிதிலைக்கு, அங்கு நடக்க இருக்கும் சீதா கல்யாணத்தைக் காண ஒரு கூட்டம் புறப்படுகிறது. அக்கூட்டத்தில் ஆண்களும், பெண்களும், சக்கரவர்த்தி தசரதனையும், அவனது தேவியரையும் தொடர்ந்து செல்கிறார்கள். தங்கள் அபிமானத்திற்குரிய சக்கரவர்த்தித் திருமகனான இராமன் அல்லவா சீதையை மணம் முடிக்கப் போகிறான் என்று குதூகலித்த உள்ளத்துடன் நடக்கிறார்கள் எல்லோரும். வழியெல்லாம் ஒரே கும்மாளம். பூக் கொய்கிறார் சிலர். நீர் விளையாடு கிறார் சிலர். ஏன், உண்டே மகிழ்கிறார் பலர்.

இப்படி, கூட்டம் சென்று கொண்டே இருக்கிறது. இக்கூட்டத்தைக் காண்கிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். அவனது கற்பனையில் எத்தனை எத்தனையோ காட்சிகள். அந்தக் காட்சிகளை வைத்துக்கொண்டே பலபல உண்மை களை மிக எளிதாகக் கூறி விடுகிறான் அவன். அப்படி, அவன் கண்ட காட்சியில் ஒன்று, கற்பனையில் கண்ட காட்சிதான், கவிதை உருவில் வெளிவருகிறது.

**நஞ்சினும் கொடிய நாட்டம்**
**அமுதினும் நயந்து நோக்கி**
**கெஞ்சவே கமலக் கையால்**
**தீண்டலும், நீண்ட கொம்பர்**
**தம் சிலம்பு அடியில் மென் பூச்**
**சொரிந்து உடன் தாழ்ந்த எனின்**

வஞ்சி போல் மருங்குலார் மாட்டு
யாவரே வணங்கலாதார்

என்பது பாட்டு. உண்மைதானே. இந்த நில உலகில் எந்த ஆடவன்தான் பெண்மைக்கு அடங்கி, ஒடுங்கி, வணங்கி வாழாதவனாக இருக்கிறான்? அப்படி ஆடவரை அடிமை கொள்ளும் பெண்கள் நீண்டு வளர்ந்த கொம்புகளை வளைத்துப் பிடிக்க வேண்டியதுதான். அந்தக் கொம்பு களும் அவர்கள் இழுக்கும் இழுப்பிற்கெல்லாம் வளைந்து கொடுத்து அவர்கள் காலடியிலேயே மலர்களைச் சொரிந்து விடுகின்றனவே. இப்படி ஒரு காட்சி கவிஞன் கண்ணுக்குத் தோன்றுகிறது.

இந்தக் காட்சியே கல்லுருவிலும் என் கண்ணுக்குத் தோன்றுகிறது. தமிழ் நாட்டுக் கோயில்களில் பல விஜய நகர நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டவை என்பது பிரசித்தம். அப்படிக் கட்டப்பட்ட கோயில் வாயில்களில் எல்லாம் கல்லால் ஆகிய நிலைக்கதவுகளின் அடித் தளத்தில் இரண்டு பக்கங்களிலும், இரண்டுபெண்கள் கொடியடியில் நிற்பதைக் கண்டிருக்கிறோம். அவர்கள் தங்கள் தலைக்கு மேல் வளைத்துச் சுற்றியிருக்கும் கொடியே மேலும் மேலும் வளர்ந்து வளைந்து வாயிலின் முகடு வரை சென்றிருப்பதையும் கண்டிருக்கிறோம். இவ்விதம் கொடியடியில் நிற்கும் மடக்கொடிகளாய் நிற்பவர்களையே 'விருக்ஷிகர்' என்று இலக்கியங்கள் பேசுகின்றன.

இப்படி கொடியும் கொம்பும் ஆக நிற்கும் பெண் களையே மகாபாரதத்தில் விருக்ஷிகா, விர்த்திகா, விர்க்ஷி என்று கூறப்பட்டிருக்கிறது. இவர்களையே சமஸ்க்ருத இலக்கியங்கள், சலபாஞ்சிகைகள் என்று அழைக்கின்றன. பாணரது ஹர்ஷ சரிதம் இந்த சலபாஞ்சிகைகளை, கல்

தம்ப புத்திரிகளை வர்ணிக்கிறது. இன்னும் கிருஷ்ண மிகிரர் எழுதிய பிரபோத சந்திரோதயத்திலும் இந்த சலபாஞ்சிகை களைக் காண்கிறோம்.

சிற்பக்கலை உலகில் நுழைந்தாலும், இந்த சலபாஞ்சி களைப் பல கோலங்களில் காணலாம். பர்ஹூத், சாஞ்சி ஸ்தூபங்களிலும் இந்த மடக்கொடியார் இருப்பதைக் காண்போம். சாஞ்சியில் உள்ள கீழ்ப்பக்கத்து வாயிலில், அசோக மரத்துக் கொம்பு ஒன்றைப் பற்றி, ஒயிலாகச் சாய்ந்து நிற்கும் பெண் கொடியையே பார்க்கிறோம்.

ஆனால் இந்த சலபாஞ்சிகைகளின் சிறந்த வடிவினைக் காண, நாம் தமிழ்நாட்டிற்குத்தான் வந்தாக வேண்டும். நேரே கும்பகோணம் போய், அங்கிருந்து வடக்கே மூன்று மைல் சென்று திரிபுவனம் என்ற தலத்திற்கு வரவேண்டும் அங்கே திரிபுவனச் சக்கரவர்த்தி என்று அபிஷேகப் பெயர் சூடிக் கொண்ட மூன்றாம் குலோத்துங்கன் கட்டிய கம்பஹரேஸ்வரர் கோவிலுக்கே செல்ல வேண்டும். அங்கு மூலக் கோயிலில் இருக்கும் நடுக்கம் தீர்த்த பெருமாளை யும், அவரது துணைவியாம் தர்மசம்வர்த்தனியையும் கண்டு தொழுவதை ஒத்திப் போட்டு விட்டு, கோவிலின் வடபக்கத்தில் கட்டப்பட்டுள்ள சரபர் சந்நிதிக்குள் நுழைய வேண்டும். அப்படி சென்று சேர்ந்தால் அங்குள்ள முக மண்டபத்தில் சரபர் சந்நிதி வாயிலில், இரண்டு பெண் வடிவங்கள் நிற்பதைக் காண்போம். இவைதான் சலபாஞ்சிகை வடிவங்களிலேயே சிறந்த வடிவங்கள் என்று நான் கூறாமலேயே நீங்கள் தெரிந்து கொள் வீர்கள்!

இருவரும் கொடி தாங்கி நிற்கும் கொடிகளாக இருப் பதையுமே பார்ப்பீர்கள். இருவரும் நான்கு நான்கரை அடி உயரத்தில் நல்ல உயிர் ஓவியங்களாக நிற்கின்றனர்.

ஒருத்தி இரண்டு கால்களையும் தரையில் ஊன்றி, தன்னை ஒட்டி வளர்ந்திருக்கும் பூங்கொம்பை வளைத்துபு பிடித்து ஒயிலாக நிற்கிறாள். மற்றொருத்தியோ ஒரு காலைத் தரையிலே ஊன்றி, மற்றொரு காலை மடித்து, மரத்தினையே மிதித்து, மிக்க வலுவுடன் இரண்டு கையாலும் சேர்த்துக் கொடியினை வளைத்து நிற்கிறாள்.

இருவரும் அரை வரையிலேயே ஆடை அணிந்திருக்கின்றனர். மேலாடை ஒன்றும் அணியாதவராய் கன்னங் கருத்த வடிவில், பொன்னம் பெருத்த தனங்களுடன், காணும் ஆடவர் உளத்தை எல்லாம் கொள்ளை கொள்ளும் வஞ்சிகளாக நிற்கின்றனர்.

கழுத்தில் அணிந்திருக்கும் கண்டசரங்கள்தான் எத்தனை எத்தனை வகை! கூந்தலையெல்லாம் வாரி முடித்து, அவைகளைச் சுற்றி முத்துமாலைகளைக் கோத்துக்கட்டி. அந்தக் கொண்டையிலே மகரிகைகள் என்னும் அணியை அணிந்து சர்வாலங்கார கோதைகளாக நிற்கும் அவர்தம் அழகுதான் என்னே! காதிலே அணிந்திருக்கும் விராட குண்டலங்கள்தான் எத்துணை அழகு! இடுப்பிலே அணிந்திருக்கும் அந்தரீயம், காலிலே அணிந்திருக்கும் அப்பைநீளம் வரையல்லவா, மடிமடியாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த சலபாஞ்சிகை வடிவங்களைக் கண்டால்,

> **"மெலியும் இடை தடிக்கும் முலை**
> **வேய் இளந்தோள் சேயரிக்கண் வென்றி மாதர்"**

என்று கம்பன் போன்ற மகாகவிகள், சொல்லால் உருவாக்கிய கன்னியை அல்லவா இந்தச் சிற்பிகள் கல்லில் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள் என்று தோன்றும் . இன்னும்,

> **பாவையர் கை தீண்ட**
> **பணியாதார் யாவரே**

**பூவையர் கை தீண்டலும்**
**அப்பூங்கொம்பு மேவி அவர்**
**பொன்னடியில் தாழ்ந்தனவே**

என்று புகழேந்தி பாடியது போல, கொடியடியில் நிற்கும் மடக்கொடியார் பிடிப்பதற்கு முன்னமேயே வளைந்து கொடுத்துத் தாழும் கொம்புகளையும் அல்லவா சிற்பி அழகுற வடித்திருக்கிறான். இந்த வடிவங்களையே பார்க்கிறீர்கள் பக்கத்தில் உள்ள படங்களில்.

இத்தகு சலபாஞ்சிகை வடிவங்கள் இரண்டு தமிழகத்தில் உருவாகி எழில் ஓவியங்களாக நிற்பதைக் காணவே ஒரு நடை கட்டலாம் திரிபுவனத்தை நோக்கி. இனி நான் வேண்டாம் என்றாலும் நீங்கள் கேட்கவா போகிறீர்கள்?

# மணிவாசகர் கண்டதில்லை

**உருத் தெரியாக் காலத்தே**
**உள் புகுந்து என் உளம் மன்னிக்**
**கருத்திருத்தி ஊன் புக்குக்**
**கருணையினால் ஆண்டு கொண்ட**
**திருத்துருத்தி மேயானைத்**
**தித்திக்கும் சிவபதத்தை**
**அருத்தியினால் நாயடியேன்**
**அணிகொள் தில்லை கண்டேனே**

என்பது மணிவாசகர் பாடிய பாடல். திருப்பெருந் துறையிலே குருந்த மரத்தடியிலே தன்னை வலிந்து ஆட் கொண்ட பெருமானை, அப்பெருமானோடு இணைந்து அவர் அருளிய சிவபதத்தின் அருமையை எல்லாம் தான் தில்லையிலே கண்டு கொண்டதாக மணிவாசகர் பாடு கிறார். மணிவாசகருக்குத் திருப்பெருந்துறைக்கு அடுத்த படியாக தில்லையில் ஈடுபாடு அதிகம் இருந்திருக்கிறது. ஆதலினால்தான் ''தில்லை பாதி திருவாசகத்தில்'' என்ற பழமொழியே எழுந்திருக்கிறது.

தில்லை மூதூர் ஆடிய திருவடியிலே அளவிலா ஈடுபாடு உடையவராய் இருந்திருக்கிறார். திருப்பெருந் துறையை விட்டுப் புறப்பட்ட மணிவாசகர் உத்தரகோச மங்கை, திருவிடைமருதூர், திருவாரூர், திருமுதுகுன்றம், திருவண்ணாமலை எல்லாம் சென்றபின் தான் திருத் தில்லை வந்து அடைந்திருக்கிறார். அங்கு தான் திரு வாசகத்தை மணிவாசகர் சொல்லச் சொல்ல, சிற்றம் பலவன் ஏட்டில் எழுதினான் என்பது வரலாறு.

மேலும் திருவாசகத்திற்கு உரை சொல்லும்படி மணிவாசகரைக் கேட்டபோது, அதன் பொருளாக விளங்குபவன் தில்லையில் நடம்புரியும் திருச்சிற்றம் பலவனே என்று அவனையே சுட்டிக் காட்டி நின்றார் என்பதும் கர்ண பரம்பரை வழக்காக நாம் தெரிந் திருக்கிறோம்.

தில்லையில் வித்தகனார் விளையாடலைக்கண்டு பரவசம் அடைந்த மணிவாசகர், பின்னர் பலநாள் அங்கு தங்கியிருக்கும் நாட்களில் குலாப்பத்து, திருப்பதிகம், கோயிற்பதிகம், கீர்த்தித் திருஅகவல், திரு அண்டப்பகுதி, போற்றித்திருஅகவல், திருப்பொற்சுண்ணம், திருத் தெள்ளேணம், திருஉந்தியார், திருத்தோணோக்கம், திருப் பூவல்லி, திருப்பொன்னூசல் முதலியவற்றைப் பாடினார். அன்னைப் பத்து, கோத்தும்பி, குயிற்பத்து, தசாங்கம், அச்சப்பத்து இவைகளும் இங்கு எழுந்தவையே, இவை களைப் பற்றி எல்லாம் விரிவாகப் பேச காலமோ நேரமோ இடந்தராது.

தில்லையிலே ஆனந்தக் கூத்தருடைய தாண்டவத் திலே ஈடுபட்டு அனுபூதி பெற்று அசைவற்று நின்றிருக் கிறார். இதை, அறியாத, மெய்க்காவலர் இவரைக் கனக சபையை விட்டு கீழே இறங்கச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொற்களை இவர் செவி ஏற்கவில்லை. சிவானந்தப் பிரகாசத்தில் திளைத்து நின்று சிவசிவ என்றே குரல் கொடுத்திருக்கிறார்.

அதன்பின் மோனநிலை கலைந்து, கோயிலை வலம் வரும்போது, கீர்த்தத்திருவகவல், திரு அண்டப்பகுதி, போற்றித் திரு அகவல் ஆகிய மூன்று அகவல்களையும் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறார். அதனால்தான் இன்னும் சைவத் தமிழ் உலகம், மக்கள் திருக்கோயிலில் வலம் வரும்போது வீண்பேச்சும் சழக்குரையும் பேசாது இவ்வகவல்களையே பாராயணம் செய்து கொண்டே

வரவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. ஆனால் நாமெல்லாம் இந்த மரபை அனுஷ்டிக்கிறோமா என்பது கேள்வி.

கீர்த்தித் திரு அகவலில், அரியொடு பிரமற்கு அளவறிய வொண்ணாதவனாக, தூண்டு சோதி தோற்றிய தன்மையை நினைக்கிறார். உத்தரகோசமங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பைப் பாராட்டுகிறார். திரு அண்டப் பகுதியிலோ இன்னிசை வீணையில் இசைந் தோனாக, பிரமன்மால் காணப் பெரியோனாக, அதே சமயத்தில் பக்திவலையில் படுவானாக, சொற்பதம் கடந்த தொல்லோனாக எல்லாம் இறைவனைக் காண்கிறார், அவன் பஞ்ச பூதங்களிலும் நிறைந்திருக்கிற தன்மையை.

**பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**

என்றெல்லாம் விளக்கம் தருகிறார்.

கீர்த்தித் திருஅகவல் முதலிய மூன்று அகவல்களையும் பாடிய பின்னர் மணிவாசகர் தில்லையில் தங்கியிருந்த காலத்து அங்குள்ள பெண்கள் வளைக்கரங்கள் ஒலிக்க, கிண்கிணிமாலைகள் ஒலிக்க, முகத்தில் குறு வியர்வை பொடிப்ப, விழிபுரளச் சுண்ணம் இடிப்பதைக் கண்டார். அதையே பொற்சுண்ணம் இடிக்கும் பாடல்களாகப் பாடினார்.

**முத்தணி கொங்கைகள் ஆட ஆட**
**மொய் குழல் வண்டினம் ஆட ஆட**
**சித்தம் சிவனொடும் ஆட ஆட**
**செங்கயற்கண் பனி ஆட ஆட**

**பித்தெம் பிரானொடு ஆட ஆட**
**பிறவி பிறரொடும் ஆட ஆட**
**அத்தன் கருணையொடு ஆட ஆட**
**ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே,**

என்னும் பாடல்களைப் படிக்கும்போது, சுண்ணம் இடிப்பாரது சுவை மிகுந்த பண்ணோசையும், ஆடிப் பாடும் துள்ளலோசையும் கலந்து நமக்குப் பேரானந்தம் தருகிறது என்றால் வியப்பில்லையே.

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாம் ஒலிக்க கொட்டி இசைத்திடும் ஒரு கூட்டப் பாட்டே தெள்ளேணம் கொட்டுதலாகும். நம் நாட்டில் இதனைக் கும்மி என்றால் 'மலையாள மக்கள், கைகொட்டிக்களி என்றே இதனை அழைக்கின்றனர். இந்த தெள்ளேணப் பாடல்கள் சாதாரண மான கொள்கைகளை மட்டும் பிரதிபலிப்பதாக இல்லை, பெரிய உண்மைகளையே, எளிய தமிழில், இனிய சந்தத்தில் இசைத்திடும் பாடல்களாக அமைகின்றன.

**வான் கெட்டு மாருதம் மாய்ந்து**
**அழல் நீர் மண் கெடினும்**
**தான் கெட்டலின்றி**
**சலிப்பறியாத் தன்மையனுக்கு**
**ஊன் கெட்டு உணர்வு கெட்டு**
**என்னுள்ளமும் போய்**
**நான் கெட்டவா பாடித்**
**தெள்ளேணம் கொட்டாமோ**

என்று கேட்கும் போது, ''நான்'' என்னும் அகந்தை நம்மை விட்டு ஓடியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி தோன்றுகிற தல்லவா.

தில்லையில் அடிகளார் பாடிய பாடல்களில் எல்லாம் சிறப்பாக நான் கருதுவது திருச்சாழல் பதிகத்தையே.

இன்றைய உலகம் 'கேள்வி பதில்' உலகமாக இருக்கிறது. பத்திரிகைகளிலே சினிமா, சினிமா நடிகர்களைப் பற்றிய கேள்வியும் பதிலும் நிறைந்திருக்கிறது. சில கேள்வி களுக்குப் பேனா மன்னனும், சில கேள்விகளுக்குப் பைங்கிளியும், இன்னும் சில கேள்விகளுக்குச் சட்டாம் பிள்ளையும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் தெரிந்துதானோ மணிவாசகரும் கேள்விபதில் முறையிலேயே திருச்சாழல் பதிகம் பாடியிருக்கிறார். சாழல் என்ன விளையாட்டு என்று தெரியவில்லை. அம்மானையைப்போல் இருந்திருக்க வேண்டும். இச்சாழல் பாடல்களுக்குப் பகைப் புலனாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. ஈழநாட்டிலிருந்து வந்த புத்தர்கள் சிலர், தில்லை வந்து தில்லைவாழ் அந்தணரை வாதுக் கழைத்திருக்கின்றனர். இறைவன் ஆணைப்படி, மணிவாசகரே அவர்கள் வாதத்திற்குப் பதில் சொல்ல வந்து நின்றிருக்கிறார்.



பௌத்தர்களோ வல் வழக்காட, மணிவாசகர் இறை வனை நினைந்திருக்கிறார், பௌத்தர்கள் எல்லாம் வாய் மூடி ஊமைகளாக நின்றிருக் கின்றனர். தில்லையை ஆண்ட மன்னன் மகள் ஒருத்தி ஊமை யாக இருந்திருக்கிறாள். கடைசி யில் இறை அருளால் அவளே வாய் திறந்து பேசி, பௌத் தர்களை எல்லாம் மடக்கி யிருக்கிறாள். இந்த அற்புத நிகழ்ச்சிக்கு. ஓர் உருவம் கொடுத்தே மணிவாசகர் திருச் சாழலில் கேள்வி பதிலாகவே

பாடியிருக்கிறார் என்பர்.

தென் பாலுகந்தாடும்
தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பாலு கந்தான்
பெரும் பித்தன் காணேடி

என்று சாழல் விளையாட்டில் ஈடுபட்ட பெண் ஒருத்தி கேள்வி போடுகிறாள். இதனைக் கேட்ட மற்றொரு பெண்.

பெண்பால் உகந்திலனேற்
பேதாய்! இருநிலத்தோர்
விண்பாவியோ கெய்தி
வீடுவர்காண் சாழலோ

என்று பதில் கூறி இருக்கிறார்.

அம்பலத்தே கூத்தாடி
அமுது செயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று
நண்ணுவதும் என்னேடி

என்பது ஒரு பெண்ணின் கேள்வி,

நம்பனையும் மாமா கேள்
நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாஎன்று
ஏத்தினகாண் சாழலோ!

என்பது இக்கேள்விக்குப் பதிலாய் அமைகிறது. இக் கேள்வி பதில்தான் எவ்வளவு சுவையாக அமைந் திருக்கிறது.

தில்லையில், பூவல்லி கொய்து, கோத்தும்பி விரட்டி, பொன்னூசல் ஆட்டி, பலபல பாக்களைப் பாடியபின், தன் இதயக் குயிலையும் கூவ விட்டிருக்கிறார்.

**கீதம் இனிய குயிலே!**
**கேட்டியேல் எங்கள் பெருமாள்**
**பாதமிரண்டும் வினவிற்**
**பாதாளம் ஏழினுக் கப்பால்**
**சோதி மணிமுடி சொல்லில்**
**சொல்லிறந்து நின்ற தொன்மை**
**ஆதிகுணம் ஒன்றும் இல்லான்**
**அந்தமிலான் வரக்கூவாய்**

என்று குயிலுக்கு வேண்டுகோள் விடுகிறபோது இறை உணர்ச்சி மணிவாசகரது உள்ளத்தில் நிறைந்திருக்கும் பான்மையை உணர்கிறோம். தில்லையில் மணிவாசகர் பெற்ற அனுபவம் எல்லாம் இப்பாடல்களில் விளங்கக் காண்கின்றோம். மணிவாசகர் கண்ட தில்லை அவருக்கு மாத்திரம் அல்ல, திருவாசகம் படிக்கும் நமக்கெல்லாமே ஓர் அற்புத அனுபவமாகவே அமைகிறது.

தாய் நாடான தமிழ்மக்கள் இந்தத் தில்லையாம் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்தால், சேய் நாடான ஈழத்து மக்களும் காரை நகர் என்னும் ஈழத்துச் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழலாம்தானே. அங்கு நடக்கும் திருவெம்பாவை விழா, மணிவாசகர் விழா எல்லாம் ஈழத்தில் நிலைத்திருக்கும் சைவ உணர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது என்று நான் சொன்னால் அது மிகையாகாதல்லவா.

# பிறவாப் பெருமையும் இறவாப் புகழும்

மதுரையில் ஒரு வைத்தியர். சித்தவைத்திய முறையைக் கையாளுபவர்தாம். பரம்பரையாக வைத்தியம் செய்பவர்கள் அவருடைய குடும்பத்தார். அவர் பெயர் சொக்கலிங்கம். தகப்பனார் பெயர் வீரபத்திரன். இந்த சொக்கலிங்கம், கவிஞர் ஒருவருக்கு வைத்தியம் செய்தார்.

கவிஞர் சிறு வயதுடையவர்தாம் என்றாலும் அவருக்கு வந்திருந்த வியாதி கடுமையானதாக இருந்தது. நாற்பது நாள் படுக்கையிலேயே கிடந்தார். வைத்தியரோ தினமும் யமனுடனேயே போராடிக்கொண்டிருந்தார். பல தடவை சித்திரபுத்திரன் கூடக் கவிஞர் சீட்டைக் கையில் எடுத்து விட்டான். வைத்தியருடைய திறமைக்கு அஞ்சி அஞ்சியே எடுத்த சீட்டைக் கிழிக்க முடியாமல் இருந்து விட்டான்.

யமனுக்கும் வைத்தியருக்கும் நடந்த போட்டியில் கடைசியில் வைத்தியரே வெற்றி பெற்றார். கவிஞர் பிழைத்து எழுந்து விட்டார். வியாதி முற்றும் குணமாகித் தலைக்குத் தண்ணீரும் விட்டாகி விட்டது.

இதன் பின் சில தினங்கள் கழித்து, வைத்தியர் கவிஞரைப் பார்க்க வந்தார். ஒரு பெரிய தட்டில் தாம்பூலம், பழம் எல்லாம் வைத்து வைத்தியரை உபசரித்தனர் கவிஞருடைய வீட்டார். கவிஞருக்கும் நன்றி உணர்ச்சி அதிகம் இருந்தது. உளம் நிறைந்த அன்போடு, கவிஞர் வைத்தியருடைய சேவையைப் பாராட்டினார்.

அவருடைய அன்பு ஒரு பாட்டாகவே வெளிவந்தது. பாட ஆரம்பித்தார் கவிஞர்:

**மிக்க மது ரைச்சிவனும் வீரபத்திரன் சுதனும்**
**சொக்கர் இருவரெனத் தோன்றினார்**

என்று ஆரம்பித்தார். பாட்டைக் கேட்டவர்கள் எல்லாம் ''என்ன! புகழுரைக்கும் ஓர் அளவு உண்டல்லவா! மதுரையில் கோயில் கொண்டிருக்கும். சொக்கலிங்கப் பெருமானையும் இந்த வைத்தியர் சொக்கலிங்கத்தையும் ஒரே தலையில் வைத்து பாடுகிறாரே! என்று அதிசயித் தார்கள்.

கவிஞர் பக்கத்தில் உள்ளவர்கள் முகத்தில் உள்ள குறிப்பை எல்லாம் கவனித்துக் கொண்டார், என்றாலும் உண்மை உண்மைதானே? அதைச் சொல்லித் தானே ஆகவேண்டும்? ஆதலால் மேலும் பாட ஆரம்பித்தார்.

**மிக்கமது ரைச் சிவனும்**
**வீரபத்தி ரன் சுதனும்**
**சொக்கர் இருவரெனத்**
**தோன்றினார் - அக்கோன்**
**பிறவாமல் காப்பான்;**
**பிறந்தாரை மண் மேல்**
**இறவாமல் காப்பான் இவன்''**

என்று பாடி முடித்தார். உண்மைதானே! மதுரைச் சொக்கலிங்கப் பெருமானால் - அவன் விரும்பினால் எவ்வளவோ அல்லல்தரும் பிறவியே இல்லாமல் காப்பற்ற முடியும். இல்லை. அப்படி அவன் முயன்று அந்த முயற்சியில் தோற்று விடுகிறான் என்றே வைத்துக் கொள்வோம். மனிதன் பிறந்தே விடுகிறான். அந்த நிலை யில் அப்படிப் பிறந்தவனை இறவாமல் காப்பது தானே அடுத்தபடியாகச் செய்யவேண்டியது! அந்தக் காரியத்தை

அல்லவா இந்த வைத்தியர் செய்கிறார். அந்த சொக்கருக்கும், இந்தச் சொக்கருக்குமே ஒரு போட்டிதான். அந்த சொக்கர் ஒரு போட்டியில் தோற்று விடுகிறபோது, இந்தச் சொக்கர் இன்னொரு போட்டியில் வெற்றியல்லவா பெற்று விடுகிறார்! யார் எப்படிப் போனால் என்ன? தமிழர்களுக்கு ஒரு நல்ல பாட்டு கிடைத்துவிடுகிறது.

**- அக்கோன்**

**பிறவாமற் காப்பான்**
**பிறந்தவரை மண் மேல்**
**இறவாமற் காப்பான் இவன்**

என்னும் அடிகளை எத்தனை தரம் பாடிப்பாடிப் பார்த்தாலும் கொஞ்சமும் அலுக்கிறதில்லை. அந்தப் பாட்டு அவ்வளவு சுவை யுடையதாக இருக்கிறது.

இந்தப் பாட்டை ஒரு நாள் ஆயிரத்து ஓராம் தடவையாக மனத்துக்குள்ளேயே நான் பாடிக் கொண்டிருந்தேன். சமீபத்தில் நான் கோயம்புத்தூர் தமிழ்விழாவிற்குச் சென்றிருந்த போது. அப்போது ஒரு நண்பர், பக்கத்தில் உள்ள பேரூருக்கு வருகிறீர்களா? என்று கூப்பிட்டார். கூப்பிட்டவர் நல்லதொருகாரும் வைத்திருந்தார். உப்புச் சப்பில்லா திருந்த அந்தத் தமிழ் விழா நிகழ்ச்சிகளைவிடக் கார் சவாரி கொஞ்சம் குஷாலாய் இருக்குமல்லவா! என நினைத்து சரி என்றேன். காரிலும் போய் ஏறிக் கொண்டேன். கோயம்புத்தூருக்கு மேற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள போரூர் என்னும் மேலைச் சிதம்பரம் போய்ச் சேர்ந்தோம். அங்குள்ள பட்டீசர் கோயிலின் கோபுரவாசலுக்குத் தெற்கே கொண்டுபோய்க் காரை நிறுத்தினோம். காரைவிட்டு இறங்கியதும் ஜட்கா வண்டி நிலையத்தையும், அதையொட்டிக் கல்லால் கட்டிய மேடையையும் பார்த்தோம்.



அந்த மேடைமீது ஒரு புளிய மரம் பெரிதாக வளர்ந்திருந்தது. பழமையான மரந்தான் என்றும் தெரிந்தது. ஸார் உங்களுக்குத் தெரியுமா இந்த புளியைப் பற்றி! இதுதான் சார் பிறவாப்புளி என்றார் நண்பர்! 'அதென்ன பிறவாப் புளி'. அது தான் பிறந்து, வளர்ந்து, பூத்துக் காய்த்துக் கொண்டு நிற்கிறதே! இதை ஏன் பிறவாப்புளி என்கிறீர்கள்? என்றேன். நண்பரோ உண்மைதான் சார். இந்த மரம் பூக்கும், காய்க்கும், பழுக்கவும் செய்யும், ஆனால் இந்த மரத்தின் பழத்தினின்றும் எடுத்த விதைகளை முளைக்கப் போட்டால் முளைப்பதே இல்லை. இந்த மரத்துக்குப் பிறவி, இப்பிறவியோடு சரி, இனிப் பிறவியே கிடையாது' என்று விளக்க ஆரம்பித்தார்.

'பிறவாப்புளி இங்கிருக்கிறதே! இறவாப் பொருள் ஏதேனும் உண்டோ? என்று கேள்வியைப் போட்டேன் நான். "உண்டு சார், உண்டு, அதுவும் இந்த தலத்திலேயே இருக்கிறது! வாருங்கள் என்றார் நண்பர். அந்தப் பெரிய கோயிலுக்கு வடக்கே காஞ்சிமா நதியின் தென்கரையிலுள்ள வடகயிலாயம் என்னும் சிறிய கோயிலின் வெளிமுகப்பில் ஒரு பனை நீண்டு வளர்ந்து நின்றுகொண்டிருந்தது. எத்தனை வருஷகாலமாக அது அங்கே இருக்கிறது என்று சொல்லக் கூடியவர்கள் இந்தத் தலைமுறையில் அங்கே இல்லையாம். இதற்கு அழிவே கிடையாதாம்.

இந்தப் பனையின் மேல்பட்டையைக் கஷாயம் வைத்துக் குடித்தால் தசை சம்பந்தமான எல்லா வியாதிகளும் நீங்குமாம். இப்படிப் பிறவாப் புளியும், இறவாப் பனையும் இருந்து கொண்டு பேரூரின் பெருஞ்சிறப்பை வளர்த்துக் கொண்டிருக்கின்றன என்றெல்லாம் நண்பர் கூறியபோது நான் முன்பு பாடிய பாட்டு, திரும்பவும் ஞாபகத்துக்கு வந்தது. வாயும் பாட்டைப் பலதடவை முணுமுணுத்தது.

பிறவாப்புளியையும், இறவாப்பனையையும் பார்த்து விட்டு - ஏன் பார்த்துவிட்டு, தரிசித்து வணங்கிவிட்டு. அந்தப் பட்டிநாதர் கோயிலுக்குள்ளேயே நுழைந்தோம். கோயிலின் மகாமண்டபத்தையும் அர்த்தமண்டபத்தையும் கர்ப்பக் கிருகத்தையும் பார்த்தால், சோழர்கள் கட்டிய கோயிலாகத் தெரிந்தது. விசாரித்ததில் கி.பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலே விஜயாலயச் சோழன் கால் வழியினனான முதலாம் ராஜேந்திரன் கட்டினான் என்று தெரிந்தது.

இந்த ராஜேந்திரன்தான் கி.பி. 1013 முதல் 1045 வரை சோழசாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த கங்கை கொண்ட சோழன். இவன் அரியணை ஏறி 26 ஆண்டுகள் கழிந்தபின்னரே இக்கோயில் திருப்பணியை ஆரம்பித்திருக்கிறான்.

அர்த்தமண்டபத்தையும் மகாமண்டபத்தையும் கட்டி முடிக்க மூன்று ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. மகா மண்டபம் கட்ட, விழுமிய பட்டன் தனபாலன், கன பாட்டி அரசாண்டார், வீரசேகர தேவன், அகமுடையான் தேவி, சோழப் பிச்சன், அதிக மான் முதலியோர் உதவியிருக்கிறார்கள் என்று அங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இந்த மண்டபங்களைக் கடந்து கர்ப்பக்கிருகத்துக்கே சென்றோம். அங்கே கோயில் கொண்டிருக்கும் சுயம்பு லிங்கத்துக்கு பட்டீசர், பட்டிநாதர், கோட்டீசர் என்றெல் லாம் பெயர்கள் வழங்குகின்றன. அன்றொருநாள் காமதேனுவின் கன்று இந்தப் பேரூர்ப் பகுதியான பிப்பிலாரண்யத்தில் துள்ளி விளையாடியபோது, அதன் முன்கால்கள் ஒரு மண் புற்றுக்குள் சிக்கிக் கொள்ள, அந்தக் கன்றின் அலறல் கேட்டு அதனை விடுவிக்க வந்த காமதேனு தன் கொம்பால் அந்த புற்றை முட்ட, அந்தப் புற்றிடத்தே முளைத்திருந்த சிவலிங்கத்தின் தலையில் காமதேனுவின் கொம்புபட்டு ரத்தம் பீறிட்டது என்றும், அதைக் கண்டு காமதேனு வருந்த, அங்கே சிவபெருமான் காமதேனுவுக்கு நேரில் பிரத்தியக்ஷமாகக் காட்சிகொடுத்தார் என்றும் தலபுராணம் கூறுகிறது.

புராணவரலாறு எப்படி இருந்தாலும் இருக்கட்டும். கன்றினது காற்குளம்பின் சுவடுகளும் பசுவின் நுனிக் கொம்பின் சுவடும் இன்னும் சிவலிங்க உருவின் சிரசில் அடையாளமாகக் கொண்டதால் கோட்டீசர் என்றும் பெயர் பெற்றுள்ளார் இறைவன் என்று தெரிகிறது. காஞ்சியில், அம்மையின் முலைத்தழும்பையும் வளைத் தழும்பையும் ஏற்றவனே இங்கு, காமதேனுவின் காற் குளம்பின் தழும்பையும், கொம்பின் நுனித் தழும்பையும் ஏற்று நிற்கிறான். தழும்பேறிய அந்தத் திருவுருவைக் கண்டு தரிசித்து, நாத்தழும்பேற அவன் புகழ்பாடி மகிழ்ந்தால், பிறவா நெறி பெறலாம் என்று கூறுவதில் ஒரு வியப்பும் இல்லை யல்லவா!

பட்டீசரை வணங்கியபின் பச்சை நாயகியையும் வணங்கினோம். இரண்டு கோவிலுக்கும் இடையேயுள்ள கல்யாண மண்டபத்திற்குள்ளும் நுழைந்து அங்கே இரும் புக் இராதிகளுக்குள்ளே சிறை செய்து வைத்திருக்கும்

உற்சவ மூர்த்திகளையும் கண்டு தரிசித்தோம். இதன் பின் கிழக்கே பார்க்கத் திரும்பினோம். ஒரு சிறு வாயில் வழியாக ஒரு பெரிய மண்டபத்துக்குள்ளேயே நுழைந்தோம்.

அதுதான் வெள்ளி மன்றம் என்றார் நண்பர். அங்கேதான் ஆனந்த நடராஜர் கோயில் கொண்டிருக்கிறார், ஆடவல்லான் என்ற பெயரோடு. அப்பெருமானை இன்று அலங்கரித்திருக்கிற முறை, அந்தஅற்புத மூர்த்தியை ஏதோ கேலி செய்வதாகவே இருக்கிறது. இரண்டு காதிலும் சுளகு அகலத்தில் வெள்ளியால் காதணி செய்து வைத்திருக்கிறார்கள். இது அந்த அற்புத மூர்த்தியின் அழகை அடியோடு கெடுக்கிறது. இதோடு விட்டாலுங்கூடப் பரவாயில்லை. ஆடை உடுத்துகிறோம் என்று சொல்லி இரண்டு கால்கள் நான்கு கைகள் எல்லாவற்றிக்கும் ''பாண்டேஜ்'' போட்டது போல் வரிந்து வரிந்து சுற்றியிருக்கிறார்கள். மேலும் என்ன என்ன அலங்காரங்களோ செய்து அந்த மூர்த்தியை அவனிருக்கும் வண்ணத்திலேயே கண்டு வணங்க வகையில்லாது செய்திருக்கிறார்கள். இத்தனை கூத்துக்கும் ஆளாக்கியிருக்கிறார்கள், அந்த ஆனந்தக் கூத்தனை.

இந்த ஆடவல்லானையும் அருட்சக்தியையும் மானசீகமாகவே கண்டு வணங்கி விட்டு வெளியே வந்தால் இத்தனை நேரம் சுற்றியதன் பலனும், இத்தனை சிரமம் எடுத்து இங்கு வந்ததன் பலனும் கைவரப் பெறுகிறோம். ஆடவல்லான் மூலத்தானத்துக்கு முன்னுள்ள சபா மண்டபம் நிரம்பவும் அழகு வாய்ந்தது. அந்த மண்டபம் 94 டி நீளமும் 38 அடி அகலமும் 16 அடி உயரமும் உடையது. 36 தூண்கள் அந்த மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன.

முன் வரிசையில் இருக்கும். எட்டுத் தூண்களிலும் எட்டு அற்புதமான உருவங்கள், சிற்பக்கலையின்

வெற்றிகள். அழகு செய்கின்றன. ஆகுவாகனத்தில் அமர்ந்துள்ள ஐங்கரன் ஒரு தூணில் என்றால் வீறு முகமயில் மீது விளங்கும் ஆறுமுகன் எதிர்த்த தூணில்; கனல் உமிழ் கண்ணோடு காட்சி கொடுக்கும் அக்கினி வீரபத்திரனும் அகோர வீரபத்திரனும் இரண்டு தூணை ஆக்கிரமித்துக் கொண் டிருக்கிறார்கள். யானையை உரித்துத் தமது திருமேனியில் போர்வையாகப் போர்த்திக் கொண்ட கிருத்திவாஸன் ஒரு தூணில் என்றால், தாருகாவனத்து முனிவர் பத்தினிகளின் கற்பு நிலையைச் சோதிக்க, நிர்வாணமாய் மானும் மழுவும் இளமதியும் திருவோடும் சிறந்திலங்க பிட்சாடனக் கோலம் தாங்கிய பிஞ்ஞகன் ஒரு தூணிலே காட்சி கொடுக்கிறான்.

நடனக் கலையில் இந்த அகிலத்திலேயே தனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்னும் அகந்தையுடன் ஆடல் புரிந்த அந்த ஆலங்காட்டுக் காளியின் கோலச்சிலைக்கு எதிரிலேயே, அவள் கர்வம் அடங்க, தாளொன்றால் பாதாளம் ஊடுருவ, மற்றைத் தாளொன்றால் அண்டம் கடந்து நிற்கும் அந்த அற்புத ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும் நிற்கிறான். இந்தச் சிலைகளில் ஒவ்வொன்றும் ஆறடி உயரமும் மூன்றடி அகலமும் உடையதாய் ஒரே கல்லில் சிற்றுளி வேலையின் நயமெல்லாம் தெரியச் செதுக்கப் பட்டிருக்கிறது.

இந்த சிற்பங்களைச் செதுக்கியவன் சிம்மனாச்சாரி என்ற சிற்பி என்றும், இந்த அற்புத மண்டபத்தைக் கட்டி அங்கே இத்தகைய அதி அற்புதமான சிற்ப உருவங் களையும் நிருமாணித்தவர் கி.பி. 1625 முதல் 1659 வரை மதுரையில் அரசாண்டதிருமலை நாயக்கருடைய சகோதர ரான அளகாத்திரி நாயகர் என்றும் வரலாறு கூறுகிறது.

இந்தச் சிற்ப உருவங்கள் எட்டையும் பார்ப்பதற் கென்றே கோயம்புத்தூருக்குப் போகலாம். அங்கிருந்து

காரிலோ வண்டியிலோ ஏறிப் போரூர் செல்லலாம். பட்டீஸ் வரனையும், பச்சை நாயகியையும் எத்தனை முறை வேண்டுமானாலும் வலம் வரலாம். நாம் மாத்திரம் என்ன அன்று அந்த பெர்கடஸன்துரை ஆறாயிரம் மைல் கடல் கடந்தல்லவா இங்க வந்து இந்தச் சிற்ப உருவங்களைப் பார்த்திருக்கிறார்.

பார்த்ததோடு மட்டுமல்லாமல், போரூர் வெள்ளி மன்றத்துச் சிற்ப உருவங்கள், சிற்பக்கலை மலினதசை அடைந்த காலத்தில் உருவனவையல்ல, அக்கலை உச்ச நிலையில் உயர்ந்து விளங்கிய உன்னத காலத்தில் உருவானவையே என்று சர்ட்டிபிகேட் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்.

இந்த எட்டுச்சிலைகளையும் போரூர் சென்று காண முடியாதவர்கள் இரண்டு உருவங்களை மட்டும் பார்த் தாவது மகிழட்டும் என்றுதான் இரண்டு அதி அற்புதமான சிலா உருவங்களின் படங்களை வெளியிட்டிருக்கிறோம். பிறவாயாக்கைப் பெரியோன் என்று சிவனை பாராட்டுகிறோம். அந்தப் பிறவாப் பெருமையுடைய இறைவனது இரண்டு மூர்த்தங்கள் இறவாப்புகழோடு இன்று இங்கே காட்சி கொடுக்கின்றன. போரூர் பிக்ஷாடன மூர்த்தி வெகு அழகான உருவம். தாருகாவனத்து முனிவர்களால் ஏவப்பட்ட மானுக்கும்; இறைவன் புல்லருத்துவது எவ்வளவு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. மானும் எப்படி தலையைத்திருப்பிக் கொண்டு அந்தப் புல்லைக் கடிக்கத் துடிக்கிறது. அந்த ஒரு பகுதியிலேயே மனம் அப்படியே லயித்து விடுகிறது. அந்தச் சிலையைப் பார்க்கும் நமக்கு ஒரு வளைவொடு கூடிய வலதுகால், துவண்டு நிற்கும் அந்த இடை, கருணையோடு சாய்ந்

திருக்கும் தலை எல்லாம் ஏதோ கவிதையில் காணுகின்றோமே, ''லளிதம், அந்த 'லளிதம்' அந்த 'ரிதம்' என்பதை அல்லவா கல்லில் உருவாக்கி விடுகிறது. தலையணி, மார்பணி, இடையணி, காலணி எல்லாம் அழகுக்கு அழகு செய்கின்றன. தாருகாவனத்து ரிஷி பத்தினிகளும் இந்த ஆணழகனைக் கண்டுதானே நிறை யழிந்தார்கள்? அதுதானே அன்றையக் கதை!

இந்த மூர்த்திக்கு எதிர்த்திசையில் இருப்பவர் தாம் கஜசம்ஹாரமூர்த்தி. தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய அந்த யானையைச் சங்கரித்து, அதன் தோலையே போர் வையாகப் போர்த்திக் கொண்டு நிற்கின்ற நிலையில் சிலை அமைந்துள்ளது. சங்கார மூர்த்தியின் காலடியில் உயிரிழந்த யானையின் தலை மிதிபடுகிறது. அந்தத் தும்பிக்கை, அந்த யானையின் அலறலோடு கூடிய வாய், ஒற்றைக் காலில் நின்று மற்றொருகாலைத்தூக்கி மடித் திருக்கும் நிலையிலே ஒரு சுழற்சி; எட்டுக்கைகளாலும் அந்த யானைத் தோலை ஏதோ, ''பாராசூட்'' விரிப்பது போல விரித்துப் போர்த்தியிருக்கும் நேர்த்தியெல்லாம் பார்த்துப் பார்த்து அனுபவிக்கத்தக்கவை. மனிதனைப் பிறவாமல் காக்கும் திறமுடையவன்தான் இறைவன். பிறவாத யாக்கையுடைய பெருமகன்தான் அவன். என்றாலும், அவனுக்கும் அவனுடைய மூர்த்தங்களுக்கும் இறவாப்புகழ் அளிக்க கூடியவன் மனிதனாகத்தான் இருந்திருக்கிறான். அந்த மனிதனையே, கலைஞன், சிற்பி என்கிறோம் நாம்.

# ஒன்றரைக் கண்ணன்

ஒண்ணரைக் கண்ணன் வருகிறான், தூங்கப்பா தூங்கு, இது என் தாயார் நான்சிறு பிள்ளையாகத் தொட்டில் கிழிய உதைத்துத் தூங்காமல் அடம் பண்ணியபோது. என்னைப் பயமுறுத்தித் தூங்க வைப்பதற்காக உப யோகித்த பிரயோகம்.

ஒண்ணரைக்கண் டோரியா, சென்னைப் பட்டணம் வாரியா. இது நான் பள்ளிக் கூடச் சிறுவனாகக் கும்மாளி போட்டு விளையாடும்போது உபயோகித்த அர்த்த மில்லாத வார்த்தைகளைக் கொண்ட பாட்டு.

ஆனால் இப்போதுதான் அறிகிறேன் ஒன்றரைக் கண்ணன் என்ற பெயர் எல்லாம் வல்ல இறைவனாம் சிவபிரானுக்கு உரிய ஒரு பெயரென்று. உண்மையில் இதை நான் கேலியாகச் சொல்லவில்லை. அப்பர் பெருமானே இதை வெகு அழகாகச் சொல்கிறார்.

## ஒரு பாட்டு

**இன்று அரைக்கண் உடையார்**
**எங்கும் இல்லை, இமயம் என்றும்**
**குன்றரைக் கண்ணன் குலமகள்**
**பாவைக்கு கூறுஇட்ட அந்நாள்**
**அன்று அணுக் கரை கொடுத்து**
**உமையானையும் பாகம் வைத்த**
**ஒன்றரைக் கண்ணன் கண்டீர்**
**ஒற்றியூர் உறை உத்தமனே.**

என்று கூறுயிருக்கிறார். உண்மை தான். எல்லோருக்கும் இரண்டு கண் என்றால் இந்தச் சிவபிரானுக்கு மட்டும் மூன்று கண். ஆனால் தன் இடப்பாகம் முழுவதையும் பார்வதிக்குப் பங்கிட்டுக் கொடுத்தபின்னர். மூன்றில் பாதிதானே அவருக்குச் சொந்தம். மூன்றில் பாதிஒன்றரை தானே? ஆதலால் சிவபெருமானை ஒன்றரைக் கண்ணன் என்று கூறுவதில் தவறு என்ன. அது சரியான கணக்காக அல்லவா இருக்கிறது.

பிறப்பு இறப்பு இல்லாத சிவபெருமானை எத்தனை எத்தனையோ பெயர் சொல்லி அழைக்கிறோம். எப்படி எப்படி எல்லாமோ வழிபடுகிறோம். அதிலெல்லாம் மாதிருக்கும் பாதியன். தோடுடைய செவியன், உமை பங்கன் என்று பாராட்டிப் போற்றுவதில் ஓர் உண்மை யல்லவா பொதிந்து கிடக்கிறது. உலகத்திலே மக்களை யும், ஏன், எந்தப் பிராணி வர்க்கத்தையுமே எடுத்துக் கொண்டால் ஆணாகவும், பெண்ணாகவும் பார்க்கிறோமே யன்றி ஒரு பாதி ஆணாகவும், ஒரு பாதி பெண்ணாகவும் காண்கிறதில்லையே என்ற சந்தேகம் தான் இன்றையப் பகுத்தறிவாளர்களின் உள்ளத்தில் எழுகிற கேள்வி.

ஆனால் இவர்கள் மறந்து விடுகிறார்கள் மனித உடம்பின் அமைப்பையும், மற்றும் பௌதிகங்களின் அமைப்பையும் பார்த்தால் அவை இருவேறு ஒட்டுகளாக அமையப் பெற்றிருக்கும்; ஒன்று தாய்த் தன்மை, மற்றொன்று தந்தைத் தன்மை. இரண்டும் ஒன்றித்தான் உலக வளர்ச்சி ஏற்படுகிறது.

மின்சாரம் என்பது ஒரு சக்தி என்று தெரியும். அங்கும் ஆண் பெண் என்றும் இரண்டு சக்திகள் உண்டு - பாஸிடிவ், நெகடிவ் (Positive, Negative) என்று இரண்டும் ஒன்று சேர்ந்தால்தான் மின்சார ஓட்டமே ஏற்படும் மக்கள் உடம்பிலும்.

மக்கள் உடம்பிலும் இந்த மின்சார சக்தி பரவியிருக்கிறது என்பதும். இதுவே உயிர் உடம்போடு ஒட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்றும் இன்றைய உடல் நூலார் கூறுகிறார்கள்.

இவ்வாறு உருவத்தாலும், சக்தியினாலும் இரண்டு தன்மைகள் ஒன்றாய்ச் சேர்ந்து இயங்குவதை எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே கண்டிருக்கிறார்கள் நம் முன்னோர். உலகெல்லாம் இறைவன் திரு உருவம் என்கிறார்கள். பார்க்குமிடங்களில் எல்லாம் அவன் பசிய நிறத்தையும், கேட்கும் ஒலியிலெல்லாம் அவன் கீதத்தையும் கேட்டவர்கள், சராசரங்கள் அத்தனையிலும் இறைவனுடைய திருவுருவத்தையே கண்டார்கள். உலகெல்லாம் அவன் தானும் தன் தையலுமாய் நின்ற தன்மையை விளக்கவே அவனை மாதிருக்கும் பாதியனாக அர்த்தநாரியாகக் கற்பனை பண்ணியிருக்கிறார்கள். கதை இது தான்.

பிருங்கி என்று ஒரு முனிவர், அவர் இறைவனிடத்து இடையறாத அன்பு பூண்டவர். அவர் கயிலாயத்துக்கு வருகிற பொழுதெல்லாம் இறைவனை மட்டுமே வலம் வருவார். பக்கத்தில் இருக்கும் பார்வதி தேவியைப் பார்ப்பதும் இல்லை. அவளையும் சேர்த்து வலம் வருவதும் இல்லை. அவள் தன் கடைக் கண் நோக்குக்குத் தவம் கிடப்பது மில்லை. இது அம்மைக்கு அவமானமாகப்பட்டது. அவள் சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டாள் தனக்கும் அவர் உடலில் ஒரு பாதி கொடுக்க வேண்டும் என்று. உள்ளத்தால் ஒன்றிய இருவரும் அன்று முதல் உருவத்திலும் ஒன்றி நின்று ஒருருவில் காட்சி கொடுக்க ஆரம்பித்தார்கள்.

கதை இத்துடன் முடிந்து விடுகிறதா இல்லை. பிருங்கியின் பிடிவாதம் அப்போதும் தணியவில்லை வண்டு உருவெடுத்து. அந்த அம்மையப்பரது உடலை, அதன் நடுப்பாகத்தில் துளைத்து, அம்மையை, அம்மை அமர்ந்திருக்கும் பாகத்தை, வலம் வராமலேயே வெளிவந்து விட்டார்.

பின்னர் தன் உடலையே உதறிவிட்டு எலும்புருவில் என்றும் இறைவன் திருவடி அகலாது நின்று விட்டார். இந்தக் கதையிலும் ஓர் உண்மை. உலகவாழ்விலே பந்த பாசங்களிலேயே ஈடுபடாது, பற்றற்றான் பற்றினை மட்டும் பற்றி நிற்பவர்கள் அம்மையின் அருளுக்குப் பாத்திரர் ஆக வேண்டும் என்பதில்லை என்பது தெளிவாக விளக்கமுறுகின்றது.

இப்படியெல்லாம் தான் இறைவனுக்குப் பல்வேறு உருவங்களையும் அந்தந்த உருவங்களுக் கேற்ற முறை யில் கதைகளையும் கற்பனைப் பண்ணியிருக்கிறார்கள். அன்றையத் தமிழர்கள். ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லாத இறைவன் இப்படித்தான் ஆயிரம் திரு நாமங்களுடனும், இன்னும் எண்ணற்ற உருவங்களுடனும் உருவாகியிருக்கிறான் மனிதனது கற்பனையிலே.

இப்படிக் கற்பனை செய்ததையெல்லாம் கல்லிலும், செம்பிலும் வடித்தெடுத்திருக்கிறார்கள் நம் நாட்டுச் சிற்பிகள். அப்படி அவர்கள் உருவாக்கிய சிற்ப வடிவங்களே இன்று நமது தமிழ் நாட்டுக் கோயில்களில் எல்லாம் நிறைந்திருக்கின்றன. மனிதன் கற்பனையோடு கலையும் சேர்ந்து வளர்ந்திருக்கிறது. அர்த்த நாரியின் சிலை அநேகமாய் எல்லா சிவன் கோயில்களிலும் இருக் கும். பொன்னியின் செல்வன் ராஜராஜன் காலத்துக்கு முன் எழுந்த கோயில்களில் எல்லாம் கர்ப்பக்கிருஹத்திற்கு

நேரே பின்புறம், மேற்கே பார்த்த திருவுருவமாக அர்த்த நாரி அமைந்திருக்கும். அந்த இடத்திலேதான் பிந்திய சோழர், லிங்கோத்பவரை நிறுத்தியிருக்கிறார்கள். அதை யும் மாற்றி அமைத்திருக்கிறார்கள், நாயக்கர்கள் விஷ்ணு வின் சிலையை வைத்து.

தமிழ்நாட்டில். இந்த அர்த்த நாரியின் சிலா உருவம் படிப்படியாக வளர்ந்திருக்கிறது. பாலாற்றின் மருங்கிலே கலை வளர்த்தவர்கள் பல்லவ அரசர்கள். அவர்களில் முதன்மையானவன் மாமல்லன் என்னும் நரசிம்ம வர்மன்.

அவன் உருவாக்கியதுதான் மாமல்லபுரம். அங்குள்ள பாண்டவர் ரதங்களில் முதலாக நிற்கும் தருமர் ரதத்தின் பின் பாகத்திலே அன்றையச் சிற்பி அர்த்த நாரியை உரு வாக்கியிருக்கிறான். உச்சந்தலையிலிருந்து உள்ளங் கால் வரை ஒரு கோடு இழுத்துக் கொண்டான் சிற்பி. வலப்பக்கம் ஆண் என்று ஒதுக்கிக் கொண் டான். மழுவையும் கையில் கொடுத்தான். குழையைக் காதில் பொருத்தினான். அபயகரத்தைத் தூக்கி நிறுத்தினான். இடப்பாகத்திலே பெண்ணின் தலையை யெல்லாம் ஏற்றினான். குழைக்குப் பதில்தோடு, ஒன்றும் இல்லாத மூக்கிலே ஒரு நத்து, கையிலே ஒரு செண்டு, எல்லாவற்றையும் விட விம்மிப் பெருத்த மார்பகம் என்றெல்லாம் அமைத்து உருவாக்கி விட்டான். இவனுக் கும் தெரிந்திருக்கிறது, பெண்ணின் இடை ஆணின் இடையை விடச் சிறுத்த தென்று. என்றாலும் அதற்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

இதற்கு அழுத்தம் கொடுக்கிறான் காவிரிக் கரையிலே பின்னால் தோன்றிய கலைஞன். சோழ சாம்ராஜ்யம் மகோன்னத நிலையில் இருந்தபோதுதான் சோழ வள நாட்டில் எண்ணிறந்த கோயில்கள் தோன்றியிருக்கின்றன.

எண்தோள் ஈசனுக்கு எழில் மாடம் எழுபதல்லவா கட்டினான், சோழன். அவன் வழிவந்தவர்களும் கொஞ்சமும் சளைக்காமல் கல்லாலே கட்டி முடித்திருக்கிறார்கள் 'எத்தனை எத்தனையோ கோயில்களை. அதில் ஒரு கோயில் கும்பகோணம் நாகேஸ்வர சுவாமி கோயில். அங்கும் கர்ப்பகிருஹத்தில் மேல்சுவரில் ஒரு சிலை; அர்த்தநாரியின் சிலை.



அந்தச் சிலை மிகவும் அற்புதமான சிலை. இடையை சிறிதாக்கி பிட்டியை, ஆம், பத்து மாதம் குழந்தையை ஏந்தி வளர்க்கும் (Pelvie gudle) ஐப் பெரிதாக்கி, நிற்கிற நிலையிலே ஓர் ஒய்யாரத்தையும் கொடுத்து உருவாக்கியிருக்கிறான் சிற்பி. இறைவனை விட்டு அகலாத நந்தியும் இருக்கிறது இங்கே.

வலப்பாகம் முழுவதும் ஆண்மையும், இடப்பாகத்தில் ஒவ்வொரு அங்கத்திலும் பெண்மையின் மென்மையையும் உணரலாம். ஆணும் பெண்ணும் இணைந்த திரு உரு என்பதை இத்தனை அழ கோடு காட்டிய சிற்பி மிகவும் சிறந்த கலைஞனாகத்தான் இருக்க வேண்டும்.

கடல் மல்லையையும், காவிரித்திரு நதியையும் விட்டு கொங்கு நாட்டுக்குள் செல்லலாம். மலை நாட்டின் மலை மேலேயே ஏறலாம். திருச்செங்கோடு மலையைத் தூர இருந்து பார்த்தாலே இரண்டு சிகரங்களும், அவை ஒன்றை ஒன்று நன்கு தழுவி நிற்பதும் தெரியும். மலைமேலேயே மிக்க சிரமத்துடன் தான் ஏற வேண்டும்.

செங்கோட்டு வெற்பன் முருகனையும் தரிசித்து வணங்கி விட்டு கர்ப்ப கிருஹத்துக்குச் சென்றால் அங்கு ஓர் அதிசயம் காத்து நிற்கும். மூலவர் இருக்கின்ற இடத்திலே லிங்கத்திற்கு உரு இராது. பீடம் இராது ஆவுடையாரும் இராது.

அங்கே கம்பீரமாக, வெள்ளைக்கல் உருவிலே காட்சி கொடுப்பவர் அர்த்தநாரிதான். அந்த மூல மூர்த்தியைப் போலவே உற்சவ மூர்த்தியும், எல்லா இடத்தும் வடிவத்தால் பெண்மை மிகுந்திருந்தாலும், தலைமையாய் ஆண்மை மிகுந்திருப்பதைப் பார்க்கிறோம்.

இடப்பாகத்திலே இருக்கும் மிடுக்குக்கு வலப்பாகத்திலே உள்ள காம்பீரியம் குறைந்ததாக இல்லை. தலையை முடித்திருப்பதே தனி அழகு. எங்கெல்லாமோ தேடி அலைந்தும் காணக் கிடக்காத பிருங்கி இங்கே இருக்கிறார், வலப்பக்கத்திலே இறைவன் காலடியிலேதான். இது முந்திய இரண்டு சிலைகளுக்கும் காலத்தால் பிற்பட்ட தாய்த்தான் இருக்க வேண்டும் மக்கள். இனத்திலே ஆண்மை, பெண்மைக்கு அடங்கிய காலத்திலே உருவாகியிருக்க வேண்டும். பெண்மை, ஆண்மையை அடக்கிய நிலை என்றுதான் இல்லை என்று கேட்பதுபோல் இந்த சிலை நின்று கொண்டிருக்கிறது அங்கே.

இப்படித்தான் கலையும் சிலையும் சேர்ந்து வளர்ந்திருக்கிறது, தமிழ் நாட்டிலே. அதை நன்றாக உணர்ந்து கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது நமக்கு இன்று.

# சிரிக்கத் தெரியுமா?

ஹலிபாக்ஸ் பிரபுவின் வாழ்க்கையில் ஒரு ரஸமான சம்பவம். லார்ட் இர்வின் என்ற பெயரோடு சில வருஷங்களுக்கு முன் இந்தியாவின் வைஸ்ராய் பதவியில் அமர்ந்திருந்தவர்தான் - சுமார் இருபது இருபத்தைந்து வயது காளையாயிருந்தபோது ஒரு நாள் பயணம் புறப்பட்டார். அவருடைய சொந்த நாடாகிய ஆங்கில நாட்டிலே செல்லும் ரயிலிலே ஏக நெருக்கடி. வண்டியில் ஏறினார். உட்கார இடம் தேடினார்.

இரண்டு சீமாட்டிகளுக்கு இடையில்தான் கொஞ்சம் இடம் கிடைத்தது. அவர்களுக்கு மத்தியிலே உட்கார்ந்து கொண்டார். அங்கே எல்லா இடத்தும் ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமே. இரண்டு சீமாட்டிகளுக்கும் வயது முப்பது முப்பத்தைந்துக்கு மேல் இருந்தாலும் அவர்கள் மணம் ஆகாதவரே. இதையும் தெரிந்து கொண்டார் ஹலிபாக்ஸ்.

ரயில் சென்றது, பூமியின் அடியில் அமைந்திருக்கும் டன்னல்கள் வழியாக எல்லாம் சென்றது. அப்படிச் செல்லும் போது நீண்ட 'டன்னல் ஒன்று குறுக்கிட்டது. டன்னல் உள்ளே ரயில் போகும் போது எங்கும் ஒரே இருட்டு. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத இருட்டு. இந்தச் சமயத்தில் நமது வாலிப ஹலிபாக்ஸ் சிறுகுறும்பு ஒன்று செய்தார்.

தனது வலதுகையின் புறங்கையை வாயில் வைத்து 'இச்' என்று இரண்டு முத்தமிட்டு விட்டு நேரே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். முத்தமிட்ட சத்தம்தான் இரண்டு சீமாட்டிகளுக்கு கேட்டது. பிரபுவை முத்தமிட்டது

அவளாக இருக்குமா என்று இவளுக்கு சந்தேகம்; இவளாக இருக்குமா என்று அவளுக்குச் சந்தேகம்.

இதற்குள் ரயிலும் டன்னலைக் கடந்து வெளிப் பிரதேசத்திற்கு வந்து விட்டது. சீமாட்டிகள் இருவரும் ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டார்கள்.

ஹலிபாக்ஸோ இருவரையும் அப்படியும் இப்படியும் கடைக் கண்ணால் பார்த்துச் சிரித்துக் கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாகத் தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் எழுந்திருந்து தொப்பியைக் கழற்றி தலையைத் தாழ்த்தி, இரண்டு சீமாட்டிகளையும் பார்த்து, ''உங்களில் என் வந்தனம் யாருக்கு உரியதோ'' என்று குறும்பாக வேறே கேட்டுவிட்டு வண்டியிலிருந்து இறங்கிப் போய்விட்டார்.

ஹலிபாக்ஸுக்கு இது ஒரு வாலிப விளையாட்டு. நமக்கோ, ஆங்கில நாகரீக வாழக்கையின் ஒரு சிறு அம்சத்தை அறிய ஒரு நல்ல சந்தர்ப்பம் இந்தச் சம்பவம். எவ்வளவு தூரம் உண்மையோ அறியோம். இது கொஞ்ச காலத்திற்கு முன் பத்திரிகையில் வந்த செய்தி, சிறந்த ராஜ தந்திரியான ஹலிபாக்ஸ் பிரபு, நல்ல நகைச்சுவையுடையவராயும் இருந்திருக்கிறார்.

அவர் சிரிக்கத் தெரிந்தவர் தான். ஆமாம், இந்தக் கிண்டல் வேலையை எல்லாம் செய்ய இவர் யாரிடம் கற்றுக் கொண்டார்? என்பது கேள்வி. இந்தக் கேள்விக்கு விடைசொல்கிறது ஒரு தமிழ்ப் பாட்டு. நல்ல அந்திமாலை நேரம் கயிலாயத்திலே பரமசிவனும் பார்வதிதேவியும் ஆனந்தமாக அமர்ந்திருக்கிறார்கள். அவர்களின் சீமந்த புத்திரனான பிள்ளையார் இருவருக்கும் இடையே வீற்றிருக்கிறார். தாய்க்கும் தந்தைக்குமே தங்கள் மூத்த

குமாரனிடத்தில் அளவில்லாத பிரேமை. அவன் கன்னத்தில் மாறி மாறி முத்தமிடுகிறார்கள் இருவரும். பார்த்தார் பிள்ளையார். ஒரு வேலை செய்ய நினைத்தார். மாறி மாறி முத்தமிடும் தாயும் தந்தையும் ஒருங்கே முத்தமிட முனைந்த நேரத்திலே சடக்கென்று தன் முகத்தைப் பின்னாலே இழுத்துக் கொள்கிறார்.

அந்த நேரத்திலே பரமசிவனது உதடுகள் பார்வதி தேவியின் அதரங்களிலே பொருந்தின. லோகமாதாவும் தந்தையுமே ஒருவரைஒருவர் முத்தமிட்டுக் கொள் கிறார்கள். பிள்ளையாரோ, "என் வேலை எப்படி! என்று கேட்பவர் போல இருவரையும் பார்த்து ஒரு சிறு நகை செய்கிறார். தாயும் தந்தையும் "பயல் பொல்லாத பயல்" என்று சொல்லி, பிள்ளையை - பிள்ளையாரைத்தான் - கட்டி அணைத்துக் கொஞ்சுகிறார்கள். இதைத்தான் நந்திக்கலம்பக ஆசிரியர்,

**மும்மைப் புவனம் முழுதீன்ற**
**முதல்வியொடும் விடைப் பாகன்**
**அம்மை! தருக முத்தம், என**
**அழைப்ப, ஆங்கே சிறிதகன்று**
**தம்மின் முத்தம் கொள நோக்கிச்**
**சற்றே நகைக்கும் வேழ முகன்**
**செம்மை முளரி மலர்த்தாள் என்**
**சென்னி மிசையிற் புனைவாமே!**

என்ற காப்புச் செய்யுளாகப் பாடி விட்டார். எப்படி இருக்கிறது, எல்லாத் தெய்வங்களுக்கும் முன்னவனாய் முன்னிற்கும் பிள்ளையாரின் சிரிப்பு. இப்போது தெரி கிறது நமது ஹலிபாக்ஸ் பிரபு யாரிடம் 'டியூஷன்' படித் திருக்க வேண்டும் என்று. சரியான இடம் பார்த்துத்தான் அவரும் 'தேங்காய்தட்டி' யிருக்கிறார்.

பிள்ளையார் தானும் சிரித்தார். பெற்றோரையும் சிரிக்க வைத்தார். நம்மையும் சிரிக்கப் பண்ணுகிறார். ஆனால் இவரையே சிரிக்க அடித்தார்களே சில பெண்கள் அது தெரியுமா எப்படி என்று? சின்னஞ்சிறிய பெண்கள் சிலர் கூடி சிற்றில் கட்டி அதில் மண்ணால் சோறு, கறி முதலியன ஆக்கி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திற்கு வந்து சேருகிறார் பிள்ளையார். அவர் தோற்றம், அவர் நடந்து வரும் அழகு எல்லாவற்றையும் கண்டு சிறு பெண்கள் தங்கள் சிரிப்பை அடக்க முடியாது சிரித்து விடுகிறார்கள்.

தன் உருவத்தைக் கண்டுதான் இந்தச் சிறு பெண்கள் சிரிக்கிறார்கள் என்று தெரிந்து விடுகிறது அவருக்கு. உடனே கோபமாகச் சென்று அவர்கள் கட்டியிருந்த சிறு வீட்டை எல்லாம் அழிக்கிறார் இவர். பெண்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அந்தச் சிறு பெண் களிலே ஒருத்தி, கொஞ்சம் துடியானவள், பயபக்தி யுள்ளவள் போல் நடித்துக் கொண்டே பிள்ளையாரை நெருங்குகிறாள்.

'ஸ்வாமி' நாங்கள் சமையல் எல்லாம் செய்து முடித்து விட்டு, உடனிருந்து உண்பதற்கு விருந்தினர் ஒருவரும் இல்லையே என்று ஏங்கியிருந்தபோதுதான் தாங்கள் வந்தீர்கள். தங்களை விடச் சிறந்த அதிதி எங்களுக்குக் கிடைக்கவா போகிறது? தங்கள் வருகையால் ஏற்பட்ட அளவு கடந்த சந்தோஷத்தினால் சிரித்தோமே யல்லாமல், தங்களுடைய யானைத் தலையையாவது, அல்லது குட்டுக்குட்டென்ற கால்களால் "தத்தக்கா புத்தக்கா" என்று தாங்கள் நடந்து வருவதைக் கண்டாவது நாங்கள் சிரிக்கவே இல்லை. அப்படியெல்லாம் சிரிப்போமா

என்ன? விபரீதமாக நினைத்துக் கொள்ளதேயுங்கள். ஸ்வாமி'' என்று வெகு நைஸாகச் சொல்கிறாள்.

தாங்கள் சிரித்ததற்கு ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொள்ளும் போதே உண்மையிலே தாங்கள் எதற்காகச் சிரித்தார்கள் என்பதையும் அல்லவா சொல்லிவிடுகிறாள் அந்தச் சிறு பெண்.

**விருந்து விளிப்போம் எனக் கருதும்வேளை**
**அடிகேள்! இவண் நீயே**
**விரும்பி வந்தாய் என மகிழ்ச்சி**
**மீக் கூர்தலினால் செவ்வாயின்**
**முருந்து தோன்ற முறுவலித்தோம் அல்லால்**
**ஒரு நின் கரிமுகம் போல்**
**முகமும், பூதப் பெருவயிறும் முடங்கும்**
**குறள்தாள் நகு நடையும்,**
**இருந்தவாறு நோக்கி நகைத்திட்டேம்**
**அல்லேம்; இடந்தோறும்**
**இருக்கு முழங்கும் தேவாரத்திசையும்**
**துவன்றி ஓங்கவளம்**
**திருந்தும் கலசைச் செங்கழுநீர்ச்சிறுவா**
**சிற்றில் சிதையேலே!**
**தெள்ளத் தெளிந் தோர்க்கு அள்ளூறும்**
**செல்வா! சிற்றில் சிதையேலே!**

என்று செங்கழுநீர் விநாயகரைப் பார்த்து அந்தச் சிறு பெண் சொல்லித் தாங்கள் கட்டிய சிறு வீட்டைச் சிதைக்காதிருக்க வேண்டிக் கொள்கிறாள். வேண்டிக் கொள்வதாகச் சொல்கிறார், மாதவச் சிவஞான சுவாமிகள்.

பிள்ளையாரும் இந்த சாகசப் பேச்சில் ஏமாந்து சரிதான் என்று தலையை அசைத்து விடுகிறார். பெண்களும்

விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். பிள்ளையாரோ தானும் சிரிக்கிறார். மற்றவர்களையும் சிரிக்கவைக்கிறார். ஆனால் பெண்களோ, தாங்கள் சிரிப்பதுடன் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதுடன் அமையாமல், பிள்ளையாரைப் பார்த்து சிரிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள்.

இந்தப் பெண்களும் சிரிக்கத் தெரிந்தவர்கள்தான். எவ்வளவு அருமையான தத்துவம். அதை விளக்குவதற்கு எவ்வளவு அருமையான பாட்டு. எல்லாம் தமிழில் தான்.

சிரிக்கத் தெரிவது நல்லது. வாழத்தெரிய வேண்டு மானால் சிரிக்கத் தெரிய வேண்டும். சிரித்துச் சிரித்து அதனால் உடல் பருத்துப் பருத்து வாழ் என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. மனிதனுக்கு இன்பம் வரும் போதெல்லாம் தான் சிரிக்கத் தெரியுமே! விலாவெடிக்கச் சிரித்து விடுவான். ஆனால் துன்பம் என்று ஒன்று வந்து விட்டாலோ. மூலையைத் தேடி உட்கார்ந்து, மூக்கைச் சிந்திச் சிந்திப் போட்டு அழுது தீர்த்து விடுவான். இவன் எப்படி வாழ முடியும்? வாழ்க்கையில் இன்பத்தைவிடத் துன்பம் தானே அதிகம். துன்பம் என்று ஒன்று உண்டோ இல்லையோ? தன் மனதிற்கு ஒவ்வாதவைகளையெல் லாம் துன்பம் துன்பம் என்று தானே எண்ணித் துயரடை கிறான் மனிதன். இப்படித் துயருறும் மனிதன் அல்லவா சிரிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். அதைத் தானே நமது திருவள்ளுவர் 'இடுக்கண் வருங்கால் நகுக'' என்று சொல்லுகிறார்.

ஆனால் இந்த உலகத்தில், அழுது தீர்த்தால்தான் மனவேதனை தீரும் என்று எண்ணுகிறவர்கள் பலர். உண்மை என்னவோ அதற்கு மாறானதுதான். ஒருவன் எவ்வளவுதான் அழுதாலும் அது தீரவே தீராது.

துன்பங்களும் துயரங்களும் மனிதன் அழுகையை நிறுத்தி சிரிக்க ஆரம்பித்தால்தான் தீரும். துன்பத்தில் உழலும் போது எப்படி ஐயா சிரிக்கவரும்? என்று கேட்கலாம். இந்த உலகம் போகிற போக்கையும் அதில் வாழும் மக்களின் நிலையற்ற வாழ்க்கையும் நினைத்துப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும்.

நாம் இதைப் பெற வேண்டும், அதை அடைய வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுகிறோமே அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக் கிறோமே. அடடா அப்படி நாம் அந்தப் பொருள் களையோ, பதவிகளையோ அடைந்து பெறும் லாபம் தான் என்ன என்று எண்ணினால் சிரிப்பு வரும்.

நாம் இந்த உலகில் சிலரை உற்ற சிநேகிதர்கள் என்றும் சிலரை ஜன்ம விரோதிகள் என்றும் எண்ணி சிலரோடு அளவளாவியும், இன்னும் சிலரை அண்டவிடாமலும் வாழ்கிறோமே. இந்த நண்பர்களும் சத்துருக்களும் எத்தனை நாளைக்கு நிலைப்பார்கள் என்று நினைத்துப் பார்த்தால் தானாகவே சிரிப்பு வரும்.

மேலும் சிரிப்பதற்குக் காரணங்களா இல்லை. நாம் உலகத்தை நன்றாய் அறியாமல் போனோமே என்று நம்மை நினைத்தே சிரிக்கலாம். உலகத்துக்கு நம்மைத் தெரிந்துகொள்ளும் சக்தி இல்லையே என்று அந்த உலகத்தையே எண்ணிச் சிரிக்கலாம். வாழ்க்கையில் நாம் செய்யும் தவறுதல்கள் திருத்த முடியாதபடி எவ்வளவோ சிக்கலாகி இருக்கின்றனவே என்று எண்ணும்போது தானாகவே சிரிப்பு வரும்.

நம்முடைய ஆசைகள் பூர்த்தியாகமல் போனதற்குக் காரணம் நாம் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதை தானே? நிறைவேறவில்லை என்றெல்லாம் எண்ணி

னால் சிரிப்பு வராதா! சிநேகிதர்கள் என்று சொல்லுகிற வர்களின் நட்பு எவ்வளவு பொய்ம்மை நிரம்பியது. சத்ருக்களின் விரோதத்திலேயும் உண்மையில்லையே என்ற விஷயங்களை எல்லாம் மனத்துள் சிந்தித்துப் பார்த்தோமானால் தானாகவே சிரிப்பு வந்துவிடும்.

சிரிப்பதற்குக் காரணம் என்று ஒன்றைத் தேட வேண்டிய அவசியமே இராது. இந்த அரிய உண்மை களைத்தானே நமது தெய்வங்கள், நமது மூர்த்திகள் நமது முன்னோர்கள் அவரவர்கள் வாழ்க்கையிலே நமக்குக் காட்டிப் போயிருக்கிறார்கள்.

பிள்ளையார், தன் தாய் தந்தையரைப் பார்த்தே சிரித்தார். ஆனால் அவரையே சிரிக்க அடித்துவிட்டார்கள் பெண்கள். தமிழ் இலக்கியங்களில் இந்தத் தெய்வச் சிரிப்பு - விதம் விதமாக எல்லாம் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. உலகம் உய்ய நடம் ஆடிய அந்த நடனராஜனது உதடு களிலே தவழ்வது ஒரு நல்ல குமிண் சிரிப்பு. இந்தச் சிரிப்பிற்கே அடிமையாகி விடுகிறார், அப்பர் பெருமான். அப்படியெல்லாம் பக்தர்கள் உளம் களிக்க மெய் சிலிர்க்கச் சிரித்த சிவபெருமானே, சிரித்தே அழிக்கிறார் திரிபுரத்தை. வாழ்விக்க உதவுவது போலவே அழிக்கவும் உதவுகிறது சிரிப்பு.

இந்த திரிபுரதகனத்தில் சிவபெருமான் சிரித்ததை விட அதிகோரமான சிரிப்பொன்றும், இலக்கியத்தில் இடம் பெற்றுத்தான் இருக்கிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பன் அருளிய ராமாயணத்திலே அந்தச் சிரிப்பு நித்யத்வம் பெற்றிருக்கிறது என்றால் கேட்பானேன்.

ராமகதைக்குள்ளே ஒரு குட்டிக் கதை. இரண்யன் சம்ஹாரக் கதைதான். சீதையை அசோகவனத்தில் சிறை வைத்திருக்கிறான் ராவணன். அவன் செய்தது தவறு.

என்பதை இடித்துக் கூற விரும்புகிறான், அவனுடைய தம்பி விபீஷணன். எல்லாம் வல்ல இறைவனையே 'தூ' என்று தள்ளி தன்னிச்சையோடு உலகாண்டவீரன் இரண்யன் அழிந்த வரலாற்றை சாங்கோபாங்கமாக எடுத்துரைக்கிறான். இரணியன் உலகளந்த உத்தமனாகிய ஸ்ரீமன் நாராயணனை எவ்வளவுக் கெவ்வளவு வெறுத் தானோ, அவ்வளவுக் அவ்வளவு போற்றுகிறான் அவன். மகன் பிரஹலாதன். தந்தைக்கும் மகனுக்கும் வாதம்.

பள்ளிக்கூடம் ஆனாலும் சரி வேறே எங்கேயானா லும் சரி, 'இரண்யாய நம:' என்றே குட்டுப் போட வேண்டுமென்கிறான் இரணியன். இல்லை "ஓம் நமோ நாராயணாய, என்று தான் ஆரம்பிப்பேன் என்கிறான் பிரஹலாதன் தான் கெட்டதும் அல்லாமல் ஊராரையு மல்லவா கெடுக்கிறான் மகன் என்று எண்ணுகிறான் தந்தை.

பெற்ற மகனை ஜன்ம விரோதியாகவே பாவித்து என்ன என்ன வெல்லாமோ செய்து கொல்லப் பார்க்கிறான். அத்தனைக்கும் தப்பித்து விடுகிறான் பிரஹலாதன். அதன் பின்னும் தந்தை முன் கம்பீரமாகத் தன் சித்தாந்தத்தை நிலை நாட்ட வீறுகொண்டெழுகிறான் இருவருக்கும் வாதம் முற்றுகிறது. "நீ போற்றும் ஹரி எங்கிருக்கிறான? இங்கிருப்பானா? அங்கிருப்பானா? என்றெல்லாம் கேட்டு உறுமுகிறான் இரணியன். "அவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் தொட்டஇடமெல்லாம் தோன்றுவான் அவன்" என்றே முறைக்கிறான் மகன்.

**சாணினும் உளன், ஓர்த்தன்மை**
**அணுவினைச் சத கூறிட்ட**
**கோணினும் உளன், மாமேருக்**
**குன்றினும் உளன், இந்நின்ற**

**தூணினும் உளன், நீ சொன்ன**
**சொல்லினும் உளன், இத்தன்மை**
**காணுதி விரைவில் என்றான்**
**நன்றெனக் கனகன் சொன்னான்.**

தூணையே எற்றுகிறான் இரணியன். பிளந்த தூணிலிருந்து புறப்படுகிறான் நரசிம்மன். எப்படிப் புறப்படுகிறான்? அது நம்மால் சொல்லத் தரமன்று. கம்பர் தான் சொல்ல வேண்டும்.

**நசை திறந்து, இலங்கப் பொங்கி**
**நன்று! நன்று! என்ன நக்கு**
**விசை திறந்து உருமிவீர்ந்தது**
**என்னவே தூணில் வென்றி**
**இசைதிறந்து உயர்ந்த கையால்**
**எற்றினன், எற்றலோடும்**
**திசைதிறந்து அண்டம் கீறி**
**சிரித்தது செங்கண் சீயம்**

என்று பாடுகிறார் கம்பர். என்ன பயங்கரமான சிரிப்பு. ஆனால் இந்தச் சிரிப்புக்கு இரணியன் பயந்தானா? ''ஆரடா! சிரித்தாய்! போரடா பொருதியாயின் புறப்படு புறப்படு'' என்று தானே சிரித்துக் கொண்டு ஆரவாரிக்கிறான். இது மட்டுமா? இந்த ஹரியை வணங்கி வாழும் தன் மகன் பிரஹலாதனைப் பார்த்தும்

**கேளிது! நீயும் காண**
**கிளர்ந்த கோளரியின் கேழில்**
**தாளொடு தோளும் நீக்கி**
**உன்னையும் துணித்துப் பின் என்**
**வாளினைத் தொழுவதெல்லால்**
**வணங்குதல் மகளிர் ஊடல்**

**நாளினும் உளதோ! என்றான்**
**அண்டங்கள் நடுக்க நக்கான்**

என்று தானே கோரமாகச் சிரிக்கிறான் - 'ஆ' இந்தச் சிரிப்பு பயங்கரத்தையும் வென்ற பயங்கரச் சிரிப்பாக அல்லவா இருக்கிறது. அடடா! இறைவன்தான் எப்படி எப்படி எல்லாம் சிரிக்கிறான். அவனையே பார்த்து இந்த மனிதனும் எப்படி எல்லாம் சிரிக்கப் படித்துக் கொண்டான்.

# அறியாதார் அறியாதார்

அன்று ஒருநாள் நான் கோயிலுக்குப் போயிருந்தேன். கோயில், கவிச்சக்கரவர்த்தி பிறந்த ஊராகிய தேரழுந்தூரில் உள்ள ஆமருவியப்பன் கோயில்தான். நல்ல மாலை நேரம், உத்சவகாலம் வேறே. ஆதலால் கோயிலுக்கு வருவார் தொகை அதிகமாகவே இருந்தது. ஒவ்வொருவரும் கையில் தேங்காய், பழம், புஷ்பம், கற்பூரம் எல்லாம் நிறைந்த தட்டுகளை ஏந்திச் சென்றனர்.

புஷ்பக் கடையில் நுழைந்து அழகான மாலைகளைக் கட்டி வாங்கிக் கொண்டு போனவர் பலர். அலங்காரப் பிரியர் அல்லவா பெருமாள். நானும் அவர்களுடன் சேர்ந்து தேங்காய், பழம், புஷ்பம் எல்லாம் வாங்கிக் கொண்டுதான் சென்றேன். என்னை அடுத்து ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

அவர் நல்ல பக்தி சிரத்தை உள்ளவராகக் காணப் பட்டார். ஆனால் வீசிய கையும், வெறுங்கையுமாய்த் தான் வந்தார் அவரைப் பார்த்துக் கொண்டேதான் நடந்தேன் கோயிலுக்குள். இருவரும் பெருமாள் சந்நிதிக்கு வந்து சேர்ந்தோம். என் கையிலிருந்த தட்டை அர்ச்சகர் வாங்கிக் கொண்டார். பெருமானின் திவ்ய ரூபத்தைக் கண்டவுடன், அவனது கம்பீரமான தோற்றத்தைப் பார்த்தவுடன் நாராயணா! நாராயணா! என்று கைகூப்பித் தொழுதேன் நான். என்பக்கத்தில் வந்து நின்ற அந்த நண்பரோ கல்லுளி மங்கன் மாதிரி நின்று கொண்டிருந் தார். பெருமானைத் தொழுவதற்குக் கூட அவர் கை எழக் காணோம்.

என்னாலோ இதைத் தாங்க முடியவில்லை. என்ன ஸ்வாமி! நீர் கோயிலை அறிவீர், ஆனால் கும்பிட அறியீரோ! என்றேன். ஆம் ஸ்வாமி! எனக்கு கும்பிடத் தெரியவில்லையே என்றார். என்ன திமிர் இவருக்கு என்று நினைத்து ஆமா நீர் என்ன பெரிய மேதாவி என்ற எண்ணமா? கோயிலுக்கு வந்தால் ஏதாவது ஆராதனைப் பொருள் கொண்டு வரவேண்டும் என்று கூடவா தெரியாது? என்று கேட்டேன் நான் ஆத்திரம் தீர. தெரியும் ஸ்வாமி! தெரியும்,ஆராதனைக்குக் கொண்டு வந்திருக் கிறேன் ஸ்வாமி ஒரு பொருள், ஆம் கொண்டு வந்திருக் கிறேன் என்று சொல்லி கொண்டே பாட ஆரம்பித்து விட்டார்.

**நாராயணாய**
**நம என்னும் நன்னெஞ்சர்**
**பாராளும் பாதம்**
**பணிந் தேத்து மாறு அறியேன்**
**காராளும் மேனிக்**
**கருணாகர மூர்த்திக்கு**
**ஆராதனை என்**
**அறியாமை ஒன்றுமே**

என்று பாடிக் கொண்டே நின்றார். என்ன அற்புதமான காணிக்கை! தன்னுடைய அறியாமையையே ஆராதனைப் பொருளாக அர்ப்பணிப்பது சிறந்ததுதான்?

இப்படித்தான் அறியாமையை அறிவிக்கிறாரே, இவர் தானே அறிவுடையார். நாமெல்லாம் நமது அறியா மையை உணர் கின்றோமில்லையே. எல்லாம் தெரிந்தவர் களாக அல்லவா நினைக்கிறோம், நடிக்கிறோம். இருவருக் கும் எவ்வளவு தூரம் என்று எண்ணிக் கொண்டே திரும்பி னேன் அன்று வீட்டிற்கு.

இப்படிச் சிந்தித்துக் கொண்டே வந்த நான் வீடு சேர்ந்ததும். கம்பனது ராமாயணத்தை எடுத்து ஒரு புரட்டு புரட்டினேன். அங்கு ஒரு பாட்டு என் கண்ணில் பட்டது.

**பணிஅரங்கப் பெரும் பாயல்**
**பரஞ்சுடரை யாம் காண**
**அணி அரங்கம் தந்தானை**
**அறியாதார் அறியாதார்**

ஜனகனிடம் ராமனது குல முறை கிளத்துவதற்கு முன், விஸ்வாமித்திரர் போடும் பீடிகை இது. உண்மைதான், பக்தர்களுடைய அறியாமைதான் எப்படி எப்படி யெல்லாம் வெளிப்படுகிறது. இந்த அறியாமையைத் துடைக்க கம்பன் எப்படி உதவுகிறான்.

அப்படி உதவுகிறபொழுதெல்லாம், தான் எவ்வளவு அறியாமை உடையவன் என்று பணிவாய்த் தெரிவித்துக் கொள்கிறான். அப்படித் தெரிவித்துக் கொள்வதில் தான் எவ்வளவு அழகு. நான் அறியேன், நான் அறியேன் என்று சொல்லும் போது, இறைவனே நேரில் நம் முன் வந்து, இவனை நம்பாதீர்கள் இவன் அறியேன், அறியேன் என்று சொல்லுவதெல்லாம் பொய். இவனே எல்லாம் அறிந்தவன், என்றல்லவா கூறத் துவங்கிவிடு கிறான். இவன், உண்மைத் தத்துவங்களை அறியாதவன் என்று சொல்ல முனைகிறார்களே, அவர்களே அறிவிலிகள்.

எல்லாம் வல்ல இறைவனை விராதன் துதிக்கிறான். விராதன் துதிப்பதாகக் கம்பன் துதிக்கிறான்.

**வேதங்கள் அறை கின்ற**
**உலகெங்கும் விரிந்தன உன்**
**பாதங்கள் இவை என்னில்**
**படிவங்கள் எப்படியோ!**

என்று பாடுகிறான். மேலும்

**'ஓதங்கொள் கடலன்றி**
**ஒன்றினொடு ஒன்றுஒவ்வா**
**பூதங்கள் தொறும் உறைந்தால்**
**அவை உன்னைப் பொறுக்குமோ.'**

என்றும் ஐயுறுகிறான். ஆம் பெரிய கேள்விக் குறி ஒன்றேயே போடுகிறான். இதற்கு விடையே அறியாத வன் போலக் கையையும் விரிக்கிறான். மறுபடியும் ஆரம்பிக்கிறான்.

**தாய் தன்னை அறியாத**
**கன்றில்லை; தன் கன்றை**
**ஆயும் அறியும்;**
**உலகின் தாயாகி ஐய!**
**நீ அறிதி எப்பொருளும்**
**அவை உன்னை நிலை அறியா**
**மாயை இது என் கொல்லோ?**

என்று மீண்டும் தன் அறியாமையை வெளிப்படுத்துவதன் மூலம் அவனுடைய அறிவுடைமையையே அறிவிக் கிறான். இப்படி யெல்லாம் பெரிய பெரிய உண்மைகளை எல்லாம் கேள்விக் குறிபோட்டே விளக்க முயல்வது கம்பனது தனி உரிமை அல்லதான். இறைவனை நினைந்து நினைந்து, உருகி, உருகிப்பாடும் அப்பர் பெருமானும்,

**நின்னாவார் பிறர் இன்றி**
**நீயே ஆனாய்**
**நினைப்பவர்கள் மனத்துக் கோர்**
**வித்தும் ஆனாய்**
**மன்னானாய், மன்னவர்க் கோர்**
**அமுதம் ஆனாய்**

**மறை நான்கும் ஆனாய்**
**ஆறங்கம் ஆனாய்**
**பொன்னானாய் மணியானாய்**
**போகம் ஆனாய்**

என்று எவ்வளவோ திட்ட வட்டமாகத்தான் இறைவனைச் சுட்டிக் காட்ட முற்படுகிறார். என்றாலும் இறைவன் தன்மையை நினைந்த உடனே அது என்ன அவ்வளவு எளிதாகச் சொல்லிவிடக்கூடிய ஒன்றா என்று மயங்குகிறார்.

**பூமிமேல் புகழத்தக்க**
**பொருளே உன்னை**
**என்னானாய் என்னானாய்**
**என்னின் அல்லால்**
**ஏழையேன் என் சொல்லி**
**ஏத்து கேனே -**

என்றுதான் அவரால் முடிக்க முடிகிறது. என்னானாய் என்னானாய் என்று சொல்வதில்தான் எத்தனை அழகு. எவ்வளவு பெரிய உண்மை அடங்கிக்கிடக்கிறது. அறியேன், அறியேன் என்று இவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் அறியாமையையயா வெளிப்படுத்துகிறார்கள்? இல்லை. அந்த அறியாமைக்குள் அல்லவா அடங்கிக் கிடக்கிறது அவர்களது அறிவுடைமை. இதை அறியாதார் எல்லாம் அறியாதாரே!

கம்பன் போன்ற மகாகவி, அப்பர் போன்ற சிறந்த பக்தர்கள் பாடல்களை யெல்லாம் பாடப் பாட நாம் அடைகின்ற இன்பங்கள் எத்தனை எத்தனையோ. கம்பன் கவிதையை அறிதோறும் அறிதோறும் நம் அறியாமையையே அறிகிறோம். அவன் கவி நயமோ அன்று இருந்ததுபோல் இன்று இருப்பதில்லை. இன்னே

இருப்பது போல் பின்னே இருப்பதில்லை. எப்படி எப்படி எல்லாமோ புதிய புதிய சுவையைத் தருகிறான். இதையெல்லாம் அறியாதார் அறியாதார் தானே!

கம்பன் கவிதையில் உள்ளம் பறிகொடுக்க அறியாதார், அறியாதாரே. அவன் சொல்லும் பா நயத்தின் பண்பையெல்லாம் காவியத்தின் கட்டுக் கோப்பையெல்லாம், அவன் சொல்லும் அரிய உண்மைகளை, பெரிய தத்துவங்களை யெல்லாம், அவன் கவிதை தரும் இனிமையை எல்லாம், எளிமையை யெல்லாம் அறியாதார், அறியாதாரே!

# அனுபவம் ஒன்று, பாடல் இரண்டு

கவிஞன் ஒருவன் திருவரங்கத்துக்குச் செல்கிறான். அரங்கத்து அரவணையானைக் கண்டு தொழுகிறான். அங்குள்ள அழகிய மணவாளனின் அழகில் ஈடுபட்டு மெய் மறக்கிறான். தோள் கண்டார் தோளே கண்டார் - என்றபடி. அழகிய மணவாளனின் தோள்கள் விம்மிப் புடைத்து கம்பீரமாக இருக்கும் நிலையைக் காண்கிறான். இந்த அழகனின் தோள்கள் பெருமிதத்தோடு இப்படி உயர்ந்து காணப்படுவானேன்! என்று சிந்திக்கிறான்; காரணம் விளங்குகிறது, அவனுக்கு. அதைச் சொல்கிறான். அவன்

**அருமறை துணிந்த பொருள்முடியை**
**இன்சொல் அமுது ஒழுகுகின்ற தமிழினில் விளம்பி**
**அருளிய சடகோபர் சொல் பெற்று உயர்ந்தன**
**அரவணை விரும்பி அறிதுயில்**
**அமர்ந்த அணிதிரு அரங்கர் மணிதிகழ் முகுந்தர்**
**அழகிய மணவாளன் கொற்றப் புயங்களே!**

உண்மைதான். "சடகோபரது பாடல்களைப் பெற்ற பெருமையில்தான் அவை பூரித்து உயர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இத்தனை பெருமிதம், இத்தனை உயர்வு இந்தத் தோள்களுக்கு எங்கிருந்து வரும்" என்று தனக்குத் தானே விளக்கமும் கூறிக் கொள்கிறான் கவிஞன்.

கவிஞன் வேறு யாருமல்ல! அரங்கத்து அரவணை யானின் அற்புத அழகிலே தோய்ந்த தோய்ந்து, பக்தியால்

பண் பட்டு கனிந்து நின்ற பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தான்! அவரது பாடலிலே அரவணையான் மீது அவருக் குள்ள பக்தியும் ஈடுபாடும் மட்டுமின்றி, சடகோபரது பாசுரங்களிலே அவருக்குள்ள பக்தியும் ஈடுபாடும் கூட விரவி நிற்கின்றன. எப்பேர்ப்பட்ட அனுபூதி நிலை!

இப்படி ஓர் அனுபவம். இந்தக் கவிதை பாடிய பிள்ளைப் பெருமாள் அய்யங்காருக்கு மட்டுமல்ல, இன்னுமொரு கவிஞனும் கிட்டத்தட்ட ஐயங்கார் பெற்ற அனுபவத்தையே பெற்றிருக்கிறான். அவன் நினைக்கிறான், ‘‘இந்தப் பரந்தாமன் எங்கேயோ தொலை தூரத்தில் உள்ள பாற்கடலில் படுத்துக் கிடக்கிறான். ஆனாலும், அந்த அநாமதேயப் பேர்வழிக்கு வந்த யோகத்தைப் பார்த்தீர்களா! சாக்ஷாத் திருமகள் பக்கத்தி லேயே இருந்து பணிவிடை செய்கிறாள். ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லாத இவனுக்கு ஆயிரம் ஆயிரம் பெயர்கள்.

தலையில் அணிவதற்கு கிரீடங்கள்தான் எத்தனை எத்தனை! சூடுவதற்குத் துளவ மாலைகள்தான் எத்தனை, எத்தனை! ஆயிரத்துக்கு மேலேயே இருக்கும் போலிருக் கிறதே! இதெல்லாம்தான் போகட்டும் இந்தக் குருகூர் சடகோபன் வேறே அல்லவா, இருக்கின்ற துளவமாலை கள் போதாதென்று, அமுதம் அமுதமான கவிமாலைகள் காத்தியிருக்கிறான்.

அதுவும் ஒன்றா இரண்டா? ஆயிரம் பாமாலைகளால் அல்லவா அரங்கத்து அழகனை அலங்கரித்திருக்கிறான்! இந்த யோகம் என்ன சாமான்யப்பட்டதா! பெரிய சகடயோகமாக அல்லவா இருக்கும் போலிருக்கிறது!’’ என்றெல்லாம் வியந்து, ஒரேயடியாய் அதிசயப்பட்டுப் போய் நிற்கிறான். ‘‘எப்படி வந்தது இப்படி ஒரு யோகம்

- என்று தனக்குத் தானே ஒரு கேள்வியும் கேட்டு, "இப்படித்தான் இருக்க வேண்டும்"- என்று ஒரு ஊகத்தையும் விடையாகக் கூறுகிறான். எல்லாம் தனக்குத் தானே தான் -

**சேராதன உளவோ**
**திருச் சேர்ந் தார்க்கு**
**வேதம் செப்பும்**
**பேர் ஆயிரம், பொன்**
**பெய் துளைத்**
**தார் ஆயிரம், நம்**
**திருக் குருகூர்**
**சடகோபன் சொன்ன**
**ஆரா அமுதக்**
**கவி ஆயிரம்**
**அவ்வரியினுக்கே!**

என்பதுதான் கவிஞனது கேள்வியும், பதிலுமாக அமைகின்றன.

இப்படி இரண்டு கவிஞர்கள் அரங்கத்து அரவணை யானைக் கண்ட தங்கள் அனுபவத்தைச் சொல்கிறார்கள். அமுதனைக் கண்ட கண்கள் வேறு வேறாக இருந்தாலும் கூட, கவிஞர் இருவரும் அடைந்த அனுபவம் ஒன்றாக அல்லவா இருந்திருக்கிறது! இருவருக்குமே மற்ற விஷயங் களில் சந்தேகம் இருந்தாலும், அழகிய மணவாளன் தோள்கள் பூரித்துப் பெருகுவதற்கும், அவன் யோகக் காரனாக வாழ்வதற்கும் காரணம் அவன் நம்மாழ்வார் என்னும் சடகோபன் பாடல்களைப் பெற்றது தான் - என்பதில் துளியும் சந்தேகம் இருப்பதாகத் தெரிய வில்லையே! அவர்களுக்கே இல்லை என்றால் நமக்கு மட்டும் என்ன சந்தேகம் இருக்கப் போகிறது.

# பிழை எலாம் தவிரப் பணிப்பான்

**பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்**
**போக மும் திருவும் புணர்ப்பானை**
**பின்னை என் பிழையைப் பொறுப்பானை**
**பிழை எலாம் தவிரப் பணிப்பானை**
**இன்ன தன்மையன் என்று அறியொண்ணா**
**எம்மானை எளிவந்த பிரானை**
**அன்னம் வைகும் வயற் பழனத் தனி**
**ஆரூரானை மறக்கலும் ஆமே!**

என்பது சுந்தரர் தேவாரம். சேரநாடு சென்று நண்பர் சேரமான் பெருமாள் நாயனாருடன் சில காலம் தங்கி யிருந்து விட்டு, திருவாரூரை நோக்கிப் புறப்படுமுன் ஆரூர் தியாகரை மறக்க இயலாமையை உணர்ந்து பாடிய பாடல் இது. இந்தப் பாடல் என் நித்யப் பாராயணப் பாடல்களில் ஒன்று. சாதாரணமாகத் தேவாரப் பாடல்கள் எல்லாம் ஏதோ கோயில்களில் ஓதுவார்கள். பாடுதற்கு மட்டும் உரியது என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம் நாம். அவை நம் வாழ்வோடு பிணைந்து நம் வாழ்க்கை யைச் செம்மை செய்யவும் உதவும் என்ற உணர்வு இந்தப் பாடலைப் பாடும் போதெல்லாம் எனக்கு நேர்வதுண்டு. அதைப் பற்றிய ஒரு சிறு சந்தர்ப்பத்தைக் கூறி விளக்கவே இக் கட்டுரை.

*1944*ம் வருஷம், ஆம் கிட்டத் தட்ட இருபது வருஷங்களுக்கு முன், நான் திருநெல்வேலியில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாக வேலை பார்த்தேன். அப்படி வேலை பார்க்கும்போது எத்தனை எத்தனையோ கேஸ்களை விசாரிக்கவும் அவைகளில் தீர்ப்புக் கூறவும் செய்தேன்.

நான் மாஜிஸ்ட்ரேட்டாக வேலை பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஒரே பயம். காரணம் திறமையாகத் தீர்ப்பு எழுதத் தெரியாது என்பதினால் அல்ல. அப்படித் தீர்ப்பு எழுதும்போது குற்றம் செய்த ஒரு சிலர் சாட்சியம் இல்லாததினால் தப்பித்துக் கொண்டு செல்வதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. ஆனால் குற்றம் செய்யாத ஒருவன் என் தீர்ப்பினால் தண்டிக்கப்பட்டு விடக்கூடாதே என்பதுதான் என் பயத்துக்கெல்லாம் காரணம்.

ஆதலால் எல்லாப் பாரத்தையும் இறைவன் பேரிலேயே போட்டு விட்டுத்தான் தீர்ப்பு எழுதுவேன். இருபதுவருஷம் கழிந்த பின்னரும், இன்றும் என் இதயத்தில் கை வைத்துக் கொண்டு சொல்கிறேன், பொன்னுக்கோ பொருளுக்கோ அடிமையாகி, இல்லை அன்பர்களது சிபார்சுகளுக்கோ முக்கியத்துவம் கொடுத்து நான் தீர்ப்பு எழுதியதில்லை. இன்னும் ஒரு நிறைவு என்ன வென்றால், குற்றம் செய்யாதவர்களை, அப்படி அவர்கள் அக்குற்றத்தைச் செய்திருக்க மாட்டார்கள் என்று ஒரு சிறு சந்தேகம் தோன்றி விட்டால் கூட அவர்களைத் தண்டித்ததில்லை.

இப்படி எல்லாம் பயபக்தியோடு வேலை பார்த்த எனக்கு ஒரு வழக்கில் சோதனை ஒன்று வந்தது. திருநெல்வேலி ஜில்லாவில் ஜாதி வெறி அதிகம். திருநெல்வேலி வேளாளர்கள் மற்ற சமூகத்தினரைத் தாழ்வாகவே நடத்துவர். ஓர் ஒதுக்குப் புறமான கிராமத்

தில் வேளாளர் தெருவில் நாடார், தேவர் முதலிய பிற்பட்ட சமூக மக்களின் கல்யாண ஊர்வலம் வருதல் கூடாது என்று எழுத்தில் இல்லாத ஒரு சட்டம். அந்தக் கிராமத்தில் இந்தக் கெடுபிடி இருப்பதைப் பலர் விரும்பவில்லை.

அந்தக் கிராமம் எந்தப் போலீஸ் ஸ்டேஷன் சரகத்தில் இருக்கிறதோ அந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு நாடார் சமூகத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர் சப் - இன்ஸ்பெக்டராக வருகிறார். அவரது ஆட்சிக்காலத்திலே அக்கிராமத்தில் உள்ள கெடுபிடியைத் தகர்த்து எறிந்து விட வேண்டும் என்று எண்ணினர் நாடார் சமூகத்தினர். அவர்களது இனத்தில் ஒரு திருமணம் நடக்கிறது. அத்திருமண விழாவன்று மணமக்களைப் பல்லக்கில் ஏற்றி அந்த வேளாளர் தெரு வழியாக ஊர்வலம் நடத்துவது என்று திட்டமிடுகின்றனர். ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டிருப் பதை வேளாளரும் தெரிந்து கொள்கின்றனர்.

அப்படி வந்தால் நேரில் நின்று தடுக்க முடியா விட்டாலும் மறைமுகமாகவாவது தடுப்பது என்று தீர்மானிக்கின்றனர் அவர்கள். நாடார் சமூகத்தினரும் அப்படித் தடுத்தால் கலகம் செய்வது என்று தீர்மானித்து அதற்குரிய கம்பு அரிவாள்களையும், பல்லக்கிலேயே எடுத்து வைத்துக் கொண்டு ஊர்வலம் புறப்படுகின்றனர். சப்இன்ஸ்பெக்டரும் தன் கீழ் உள்ள ஏட்டு முதலியவர் களுக்கு தக்க உத்தரவுகள் போட்டு விட்டு அவர் மட்டும் லீவ் எடுத்துக் கொண்டு வெளியூர் சென்று விடுகிறார். மணமக்கள் ஊர்வலம் பல்லக்கில் நடக்கிறது.

வேளாளர் எல்லாம் தங்கள் தங்கள் வீடுகளியே பதுங்கிக் கொள்கின்றனர். வேளாளர் தெருவின் நடுப்பகுதியில் ஒரு பந்தல் போட்டிருக்கிறது. அதுவரை வந்து விட்டனர். திருமண ஊர்வலத்தை நடத்திக் கொண்டு

நாடார் சமூகத்தினர். அதுவரை யாதொரு தடையும் காணோமே என்றவுடன் நாடார்களுக்குத் தெம்பு பிறந்தது.

தங்கள் பல்லக்கு செல்ல இடையூறாக இருக்கிறது என்று சொல்லி அத்தெருவின் நடுவில் போட்டிருந்த பந்தலைப் பிரிக்கின்றனர். உடனே கல்லெறி விழுகிறது. சிலர் வெளியே வந்து பந்தலைப் பிரித்தவர்களை மடக்குகின்றனர். நாடார் சமூகத்தினர் கலகத்துக்கு என்று தயார் செய்துகொண்டு வந்தவர்களாயிற்றே! ஆதலால் கலகம் மும்முரமாக நடக்கிறது. உடன் வந்த ஏட்டு செய்வது என்ன என்று அறியாமல் துப்பாக்கிப் பிரயோகம் வேறே செய்து விடுகிறார்.

அதனால் ஒருவரும் காயம் அடையவில்லை என்றாலும் கலகம் நின்று விடுகிறது. பல்லக்கு திரும்பி விடுகிறது. விசாரணைக்குப் போலீஸ் அதிகாரிகள் வந்து விடுகின்றனர்.

போலீஸ் விசாரணையின் பலனாக, நாடார் சமூகத்தில் இருபதுபேர் பேரில் அவர்கள் கலகம் செய்ய முனைந்த தாக ஒரு வழக்கும், அதைப் போலவே வேளாளர் இருபது பேர் பேரில் கலகம் செய்ததாக ஒரு வழக்கும் போடப் படுகிறது.

'கேஸ்' என் கோர்ட்டில் விசாரணைக்கும் வந்து விடுகிறது. ஒவ்வொரு தரப்பிலும் இருபது முப்பது சாட்சிகள். போலீஸ் தரப்பு சாட்சிகள் விசாரணை, குறுக்கு விசாரணை, எதிர்தரப்பு சாட்சிகள் விசாரணை என்று கிட்டத்தட்ட ஒரு வருஷகாலம் நடக்கிறது. வக்கீல்களுக்கு நல்ல வரும்படி. கேஸ் முடிகிற தருணத்தில் இருக்கிறது. அந்த நிலையில் என்னைத் தலைச்சேரிக்கு டிப்டி -

கலெக்டராக மாற்றியிருப்பதாக சர்க்காரிலிருந்து ஒரு தந்தி வருகிறது. தந்தி வெள்ளிக்கிழமை வந்தது. திங்கட் கிழமையன்று சார்ஜ் கொடுத்து விட்டு, புதன் கிழமை யன்று நான் தலைச்சேரி போகவேண்டும்.

இந்த நிலையில் இந்த வழக்குகளை, எனக்குப் பதிலாக வருகிற மாஜிஸ்ட்ரேட் தீர்ப்புச் சொல்லட்டும் என்று விட்டுவிட்டுப் போவதா, இல்லை, தீர்ப்புக் கூறிவிட்டே செல்வதா என்பது பிரச்சனை. வழக்கை நடத்துகிற வக்கீல் களுக்கு என் நல்லெண்ணத்தில் ஒரு நம்பிக்கை. இருதரப்பு வக்கீல்களும் என்னைச் சந்தித்து, ''இந்த வழக்குகளை நீங்கள் ஒரு வருஷகாலமாக விசாரித்திருக்கிறீர்கள். நீங்களே 'பைசல்' செய்து விட்டுப் போனால் நல்லது - என்று தெரிவித்துக் கொண்டார்கள். எனக்கும், 'அது சரி' என்றே பட்டது. உடனே வேலையோடு வேலையாக இரண்டு வழக்குகளிலும் இரவு பகலாக இருந்து தீர்ப்பு எழுதினேன்.

என்னுடைய எண்ணத்தில் இரண்டு கட்சிக்காரர் களுமே கலகத்திற்குக் காரணம் என்றாலும், நாடார் சமூகத் தினர்தான் கலகத்திற்கு வித்திட்டவர்கள். அவர்களில் முதன்மையாக இருந்து கலகத்திதைத் தூண்டி நடத்தியவர் களுக்குக் கொஞ்சம் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன்.

அப்படியே கலகம் நடப்பதற்கு முக்கிய காரணஸ்தராக இருந்த ஒன்பதின்மருக்கு ஆளுக்கு ஒன்பது மாதம் கடுங் காவல் தண்டனை என்றும், மற்றவர்களுக்கு எல்லாம் ஆளுக்கு ரூபாய் நூறு அபராதம் என்றும் தீர்ப்பு எழுதி, தீர்ப்பை எடுத்துக் கொண்டு திங்கட்கிழமை காலை கோர்ட்டிற்கு வந்தேன்.

அன்று பகல் ஒரு மணிக்கு நான் சார்ஜ் கொடுக்க வேண்டும். காலை 10 மணி அளவில் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை கோர்ட்டில் ஆஜராகும்படி கூப்பிட்டேன். அதிசயம் என்ன வென்றால், நான் யார் யாருக்கு 'கடுங்காவல் தண்டனை' - என்று தீர்ப்பு எழுதியிருக்கிறேனோ அவர்களில் பலர் கோர்ட்டிற்கு வரவில்லை. மற்றவர்கள் எல்லாம் வந்து நின்றார்கள்.

'வராதவர்கள் ஏன் வரவில்லை' - என்று காரணம் வினவினால் இரவு பெய்த மழையின் காரணமாக இடையிலே உள்ள காட்டாற்றில் வெள்ளம். அதைக் கடந்து வ்ரமுடியவில்லை. அவர்கள் எல்லாம் மேற்கே பத்து மைல் போய் ரயில் ஏறி பகல் பன்னிரெண்டு மணிக்குள் வந்து விடுவார்கள் என்றனர். "சரி பகல் ஒரு மணிக்குத் தீர்ப்புக் கூறுகிறேன்" - என்று எல்லோரையும் அனுப்பி விட்டு மற்ற வேலைகளைக் கவனித்தேன்.

ஒருவேளை அவர்கள் பன்னிரெண்டு மணிக்கு வராவிட்டால் என்ன செய்வது? எழுதிய தீர்ப்புகளைக் கிழித்துத் தீக்கிரையாக்கி விட்டுக் கிளம்பி விடுவதா என்று எண்ணினேன். எதிரிகள் ஆஜர் இல்லாமல் எந்த எந்தத் தீர்ப்பை எப்போது சொல்லலாம் என்று கிரிமினல் புரொஸீஜர் கோடு என்ற சட்டப்புத்தகம் ஏதாவது சொல்கிறதா என்று பார்க்க அந்தச் சட்டப் புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டினேன்.

அதில் சொல்லியிருந்தது, 'சாதாரணமாக அபராதம் மட்டும் போடுவதானால், எதிரிகள் முன்னால் இல்லாத போதும் தீர்ப்புச் சொல்லலாம். சிறை தண்டனை என்று இருந்தால் எதிரிகளை முன்னால் வைத்துக் கொண்டுதான் தீர்ப்புச் சொல்ல வேண்டும்' - என்று.

இந்த நிலையில் என்ன செய்வது என்று திரும்பவும் சிந்தித்தேன். என் தீர்ப்பின் கடைசிப் பக்கத்தை மட்டும் எடுத்துவிட்டு எல்லோருக்கும் சகட்டு மேனிக்கு, ரூபாய் நூறு நூறு என்று அபராதம் போட்டுத் தீர்ப்பைத் திருத்தி எழுதி அதை இணைத்து வைத்திருந்தேன். பன்னிரெண்டு மணிக்கு எதிரிகள் வராவிட்டாலும் தீர்ப்பைச் சொல்லி விடுவது என்றே தீர்மானித்து விட்டேன். கடைசியில் குறித்த பகல் ஒருமணிக்கு எதிரிகளைக் கூப்பிட்டால், எதிரிகள் எல்லோருமே ஆஜர் ஆகி வந்து நின்றார்கள் கோர்ட்டிலே.

இப்போதும் என் மனதிலே ஒரு போராட்டம். முன்னர் எழுதிய தீர்ப்பைச் சொல்வதா, இல்லை, பின்னர் திருத்தி அமைத்த தீர்ப்பைச் சொல்வதா - என்று. இப்படி நான் குழம்பிக் கொண்டிருந்த போதுதான் சுந்தரர் தேவாரப் பாடல் எனக்கு நினைவு வந்தது.

**பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை**
**போகமும் திருவும் புணர்ப்பானை**
**பின்னை என் பிழையைப் பொறுப்பானை**
**பிழையெலாம் தவிரப் பணிப்பானை**

என்ற அடிகளைப் பாடியவுடன், உள்ளத்தில் ஒரு தெளிவு பிறந்தது. நாம் நினைக்கிறோம் நமது அறிவின் திறத்தால் எதிரிகளை சரியாய் எடை போட்டுத் தீர்ப்பு எழுதி விட்டோமென்று.

ஆனால் இறைவன் நியதியின் படி எதிரிகளில் ஒன்பதுபேர் சிறைதண்டனை பெற வேண்டியவர்கள் அல்ல என்று ஏற்படுகிறது. அதற்கு ஒரு சிறு நாடகம். மனக்கலக்கம், குழப்பம், எல்லாம் ஏற்பட்டாலும், முடிவில் தீர்ப்பை மாற்றி எழுத வல்லவா இறைவன் நம்மைப் பணித்திருக்கிறான்.

நாம் பிழை செய்யாமல் நம்மைத் தவிர்க்க வேண்டியல்லவா இத்தனைக் கூத்தை நடத்தியிருக்கிறான் என்று எண்ணினேன். அந்த இறைவனின் அருளை வியந்து கொண்டே, திருத்திய தீர்ப்பையே படித்து முடித்தேன்.

ஆம். எனது வாழ்விலே மறக்க முடியாதது இது. இறைவன் நியதியிலும், திருமுறைகளிலும் அழுத்தமான நம்பிக்கை ஏற்பட நல்லதொரு வழி வகுத்துக் கொடுத்ததும் இச் சந்தர்ப்பம் தானே!

# அப்பருடன் ஒரு நாள்

அன்றொரு நாள் மாலையிலே ஆற்றங்கரையிலே நடந்த ஒரு கூட்டத்துக்குச் சென்றிருந்தேன் நான். பிரபல பேச்சாளர் பேச்சு ஒன்று நடந்தது அங்கு. பேச்சாளர் அடுக்கு மொழிகளை அள்ளி வீசினார்; இளைஞர் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பினார். பேச்சுக்கு இடை யிடையே கேள்விகள் வேறு போட்டார்.

**ஆலயங்கள் ஏனையா?**
**அபிஷேகங்கள் ஏனையா?**
**கோலங் கொடிகள் ஏனையா?**
**கொட்டு முழக்கம் ஏனையா?**
**பாலும் பழமும் வைத்து நிதம்**
**பணிந்து நிற்பது ஏனையா?**
**சீலம் பேணும் உள்ளத்தைத்**
**தெய்வம் தேடி வாராதோ?**

என்று கேட்டபோது நீண்ட காலமாகவே, கோயில், குளம், சமயம், சாஸ்திரம் என்று பழகியவர்களும் நிலை குலைந்தனர். மேலும் மேலும் கேள்விகள் பிறந்தன.

**தண்ணார் மதியும் புரிசடையும்**
**தாங்கும் தையல் பாகன் என**
**எண்ணாது ஒருவன் சொன்னது கேட்டு**
**எவனோ சொன்னான் அவனைக் கேட்டு**
**அண்ணா சொன்னான் அது போலின்று**
**அடுத்த தம்பி சொல்கின்றான்**
**கண்ணால் ஈசன் திருமேனி**
**கண்டார் எவரும் உண்டோ சொல்!**

என்று பேச்சாளர் கேள்வி கேட்டார். கேட்டவர்கள் அத்தனை பேரும் வாயடைத்துப் போய் உட்கார்ந் திருந்தார்கள். கேள்விக்கு விடை, 'இல்லை, ஐயா, இல்லை' என்று சொல்வதுபோல கூட்டத்தார் கரகோஷம் வேறு செய்தார்கள்.

இத்தனையையும் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டுமிருந்த எனக்கோ வீடு திரும்பும்போது உள்ளம் ஒரு நிலையில் இல்லை.

"என்ன! இந்த நண்பர்கள் பேசுகின்ற பேச்சிலும் கேட்கின்ற கேள்விகளிலும் ஒரு வேகம் இருக்கத்தானே செய்கிறது. கொஞ்சம் உண்மையுங்கூட இருக்கிறதே! இதற்கெல்லாம் தக்க விடை சொல்வார் கிடையாதா" என்று சிந்தித்துக் கொண்டே திரும்பினேன்.

அந்தச் சமயத்தில் ஒருவர் , ஒரு பெரியவர், எனக்கு முன்னமேயே அறிமுகம் ஆனவர்தான் - என்னை அடுத்துவந்தார். "என்ன தம்பி! எப்போதுமே உற்சாகமாக இருக்கும் உமக்கு இன்றைக்கு ஏன் இத்தனை சோர்வு" என்று கேட்டார். நான் என்னுடைய நிலையை விளக்கினேன். கூட்டத்தில் அன்பர் கேட்ட கேள்வி களையும் அடுக்கினேன். "இன்றைய உலகத்தில் எழு கின்ற பிரச்சனைகள் எத்தனை எத்தனையோ உண்டே, அவைகள் எல்லாம் தீராத புதிர்கள் தானா? இல்லை எல்லாவற்றிற்கும் விடை கண்டுவிட முடியுமா? கூறிவிட முடியுமா?" என்று கேட்டேன். "என்ன இதுதானா பிரமாதம்!" என்று பேசத் துவக்கினார் பெரியவர்.

"ஆம்! தம்பி. இந்த கடவுளைக் கண்ணால் காண்ப தற்குத் தான் எத்தனைபேர் எப்படி எப்படி எல்லாம் முயன்றிருக்கிறார்கள். வேதங்களை ஓதியிருக்கிறார்கள். யாகங்களைச் செய்திருக்கிறார்கள். வீட்டைவிட்டு ஓடி

யிருக்கிறார்கள். காவி உடை உடுத்தியிருக்கிறார்கள். மொட்டை அடித்திருக்கிறார்கள். தாடியை வளர்த்திருக் கிறார்கள். தவம் பண்ணியிருக்கிறார்கள். நோன்பு நோற்றிருக்கிறார்கள். இப்படியெல்லாம் இவர்கள் செய்தும், இந்தப் பொல்லாத கடவுள், அவ்வளவு லேசாக காட்சி கொடுக்கிறவனாக இல்லையே.

அப்படி அவன் காட்சி கொடுக்க மறுக்கிறபோது, தயங்குகிறபோது, அப்படி ஒருவன் இருக்கவா போகி றான் என்ற சந்தேகமே எழுவது இயற்கைதானே. இப்படி முதலுக்கே மோசம் என்று வருகிறபோது, அவன் வடிவத்தைப்பற்றி, உருவத்தைப்பற்றி, வண்ணத்தைப் பற்றி என்ன என்று சொல்ல? மைப்படிந்த கண்ணாள் பாகன், கச்சி மயானத்தான் ஊரான், வார்சடையான் என்றெல்லாம் அவனைச் சொன்னால் அவையெல்லாம் உண்மையாகிவிடுமா என்ன? கடவுள் என்றாலே எல்லாம் கடந்து நிற்பவன் அல்லவா? அவன் ஓர் ஒப்புடையவன் அல்லன். ஒருவன் என்றுகூட இல்லை. ஓர் ஊரான் என்றாவது சொல்ல முடியுமா? இல்லை, இப்படி இருப்பான் என்று ஓர் உவமையாவது காட்ட முடியுமா? முடியாதுதானே! இப்படி இருப்பான் அவன், இந்த நிறத்தவன் அவன், இந்த வண்ணத்தவன் அவன் என்றெல்லாம் அவனைச் சொல்லிலோ, கல்லிலோ, சித்திரத்திலோ, சிலையிலோ எழுதிக் காட்டிவிட முடியாது தானே!'' என்றெல்லாம் பேசிக்கொண்டே போனார் பெரியவர்.

எனக்கோ பெரியவர் பேரிலேயே சந்தேகம் தோன்ற ஆரம்பித்தது. இவரும் ஆற்றங்கரை பேச்சாளர் பரம்பரை தானோ? என்று எண்ணினேன். அதற்குள் அவர் கையமர்த்தி, ''தம்பி! இறைவன் அப்படி இருப்பான், அந் நிறமுடையவனாய் இருப்பான், அவ்வண்ணமுடையவ

னாய் இருப்பான், என்றெல்லாம் காண்பதற்கோ, அல்லது பிறருக்குக் காட்டுவதற்கோ அவன் அருள் வேண்டும் தம்பி! அந்த அருளையே கண்ணாகக் கொண்டு கண்டால் அல்லவா காண முடியும். பிறருக்கு காட்டவும் முடியும்.

அந்த அருள் இல்லாமல் அவனைக் காணவும், பிறருக்குக் காட்டவும் முடியாது தம்பி!'' என்று முடித்தார் அவர் பேச்சை. ஏது! பெரியவர் பெரியவர் தான் என்று நினைத்த போது.

**மைப்படிந்த கண்ணாளும் தானும்**
**கச்சி மயானத்தான், வார் சடையான்**
**என்னின் அல்லான்**
**ஒப்புடையன் அல்லன், ஒருவன் அல்லன்**
**ஒரூரன் அல்லன், ஓர் உவமன் இல்லி**
**அப்படியும், அந்நிறமும், அவ்வண்ணமும்**
**அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்**
**இப்படியன், இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்**
**இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே**

என்ற பாட்டு திரும்பவும் திரும்பவும் என் நாவில் தவழ்ந்தது. பாட்டைப் பாடிக்கொண்டே பெரியவருடன் கொஞ்ச தூரம் நடந்து சென்றேன். இருவரும் பக்கத்தில் உள்ள கோயிலுள் புகுந்தோம். புகுவதற்கு முன், கோயிலுக்குள் போக வேண்டுவது அவசியம்தானா என்றேன். இந்நில உலகினில் நிலை பெற்றிருப்பதற்கு, மனதை ஒரு நிலைப்படுத்தி எல்லாம் வல்ல இறைவனை, எங்கும் நிறைந்த இறைவனை வணங்குவதற்கு 'கோயில் குளம், பூசை புனற்காரம் எல்லாம் வேண்டுமா என்றேன். பெரியவரோ பதில் பேசவில்லை. ஆனால் பாட ஆரம்பித்து விட்டார்.

**நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு**
**புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு**
**பூ மாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி**
**தலையாரக் கும்பிட்டு கூத்தும் ஆடி**
**சங்கரா சய போற்றி போற்றி என்றும்**
**அலை புனல் சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே**

என்று அவர் மனம் கசிந்து பாடியபோது, நானும் அவருடன் சேர்ந்து, ஆரூரா! ஆரூரா! என்றே அலற ஆரம்பித்து விட்டேன். கோயில் புகுவது, அங்கு அலகிடுவது, மெழுகுவது, பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடுவது, கும்பிட்டுக் கூத்தாடுவது எல்லாம், மனதை எப்படிப் பக்குவப்படுத்தும், எப்படி ஓரிடத்தில் நிலை நிறுத்தும் என்று கண்டேன்.

கோயிலை வலம் வந்தோம் இருவரும். மேலப் பிரா காரத்தில் ஒரு மாடக் குழியில் ஒரு சிலையைக் கண்டேன். பெரியவர் அதைக் கையெடுத்துக் கும்பிட்டார். நான் அதைக் கண்டு சிரித்தேன். ''என்ன தம்பீ!'' என்றார். ''என்ன தாத்தா! இறைவனைக் காண அவன் அருளே கண்ணாகக் காண வேண்டும். என்றீர்கள். ஏதோ இயற்கையோடு ஒட்டியிருந்தால், அவன் அருளைக் கண்ணாகக் கொண்டு காணா விட்டாலும், கலை யென்றாவது கண்டு களிக்கலாம். இப்படி இயற்க்கக்கே விரோதமாக ஆணும் பெண்ணும் ஓர் உருவில் காட்சி கொடுக்கிறார்களே - கொஞ்சமும் இயற்கைக்குப் பொருத்தமாக இல்லையே. இது இறையுமில்லை, கலையுமில்லையே'' என்றேன். அர்த்த நாரியின் சிலா விக்கிரகத்தின் முன்பு நின்று கொண்டு தான் இப்படிக்

கூறினேன் நான். இதற்கெல்லாம் சளைத்தவராக இல்லை பெரியவர். அங்குமே அவர்,

**மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளோடும் பாடி**
**போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்**
**யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்ற போது**
**காதல் மடப் பிடியோடும் களிறு வருவன கண்டேன்.**
**கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்.**
**வரிக்குயில் பேடையோடாடி வைகி வருவன கண்டேன்.**
**பேடை மயிலொடும் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்.**
**கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்.**

என்றெல்லாம் பாடினார். அவர் பாடப்பாட என் முன் தவழும் இயற்கை, உலக நியதி எல்லாம் ஆண் பெண் என்ற இரண்டு தத்துவத்துக்குள்ளே அடங்குவதாகக் கண்டேன். இந்த இரண்டு தத்துவங்களும் தனித்தனி இயங்காமல் இணைந்து இணைந்து செல்வதால் தான் உலகமே உய்கிறது என்றும் கண்டேன்.

Nothing in this world is single
All things by a law Divine in one another mingle

என்றெல்லாம் ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி பாடியதின் உண்மையும் அப்போது விளங்கிற்று. அர்த்தநாரி தத்துவத்தின் அருமையையும் அறிந்தேன். அது இயற்கை நியதியை எவ்வளவு அழகாகக் காட்டுகிறது என்பதையும் தெரிந்தேன். இந்த உண்மைகளை யெல்லாம் தெரிவதற்கு அவன் அருளைக் கண்ணாக மட்டுமல்ல, காதாகவும், ஏன் அறிவாகவுமே கொண்டிருக்க வேண்டும் என்றும் கண்டு கொண்டேன்.

கோயிலின் வெளிப் பிராகாரத்தைச் சுற்றிய நாங்கள் அதன் பின் உட்பிராகாரத்துக்குள்ளேயே நுழைந்தோம்.

அங்கு ஒரு குறட்டில் ஒன்பது சிலா உருவங்கள் இருந்தன. அவற்றிற்கு மேலே, 'நவதாண்டவம்' என்றும் குறித்திருந்தார்கள் வர்ண மையினாலே.

எல்லாம் தாண்டவ உருவங்கள் அல்ல தான் என்றாலும் அவை சிவபிரானுடைய ஒன்பது மூர்த்தங்கள் என்று தெரிந்து கொண்டேன். அங்கே ஆனந்தத் தாண்டவர் இருந்தார்; ஊர்த்துவ நடனர் இருந்தார்; பிக்ஷாடனர் இருந்தார்; கங்காளர் இருந்தார்; நீலகண்டர் இருந்தார்; கங்காதரர் இருந்தார்; கஜ சம்ஹார மூர்த்தி இருந்தார்; திரிபுர தகனர் இருந்தார்; சந்திர சேகரர் இருந்தார்; இவையெல்லாவற்றையும் காட்டி, "என்ன ஸ்வாமீ! ஒரு ஆளே இப்படி ஒன்பது வேஷம் போடுறாரே, யாரை ஏமாற்ற இப்படிப் பகல்வேஷம் போடுகிறார் இவர்?" என்று கொஞ்சம் நையாண்டித்தனமாகவே கேட்டேன் பெரியவரை. அவருக்குத்தான் பேச்செல்லாம் பாட்டா யிற்றே. உடனே பாட ஆரம்பித்து விட்டார்.

**மயலாரும் தன்னடியார்க்கு அருளும் தோன்றும்**
**மாசில் புன் சடை மேல் மதியம் தோன்றும்**
**இயல்பாக இரு பிச்சை ஏற்றல் தோன்றும்**
**இருங்கடல் நஞ்சுண்டு இருண்ட கண்டம் தோன்றும்**
**கயல்பாய கருங்கல் உழி கங்கை நங்கை**
**ஆயிரமாம் முகத்தினொடு வானில் தோன்றும்**
**புயல்பாய சடைவிரித்த பொற்புத் தோன்றும்**
**பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே!**

என்று அவர் பாடப்பாட, ஒருவரே இப்படிப் பல பல மூர்த்தங்களாக, நோக்குவார் நோக்குகின்ற படி யெல்லாம் தோன்றுவார் என்று தோன்றிற்று எனக்கு. எல்லாம் காண்பவர், நோக்குபவர், அறிபவர், அறிவாற்ற லுக்கு, அருள் நிலைக்குத் தக்கவாறு தான் தோன்றும் என்றும் உணர்ந்து கொண்டேன்.

இத்தகைய அறிவு, உணர்வு, அனுபவம் எல்லாம் பெற்ற பின் பெரியவரைத் தொடர்ந்தே கோயிலின் உட்பிராகாரத்தின் வடக்குப் பிராகாரத்திற்கு வந்தேன். அங்கே ஒரு சந்நிதி. நடராஜர் சந்நிதிதான். ரொம்பவும் அருமையாக அமைக்கப்பட்டிருந்தது. அங்கே ஆட வல்லான், அம்பிகை சிவகாமியுடனும், பக்தன் மணி வாசகனுடனும் கோயில் கொண்டிருந்தான்.

எனக்கு எப்போதுமே நடராஜர் என்றால் அலாதி பக்தி. கலை உலகின் அற்புதம் அந்த வடிவம். உருவமில்லாத கடவுளுக்கு, சிந்தனை செய்யும் கலைஞன் கற்பித்துக் கொடுத்த முதல் உருவமல்லவா அது! அணுவுக்குள் அணுவாய், ஊனாயும், உயிராயும், உணர்வாயும் உள்ளும் புறமும் இருந்து இயங்குகிறான் இறைவன், அவன் ஆட்டுகின்றபடியே அண்டங்கள் எல்லாம் ஆடுகின்றன. அப்படி அண்டங்களையெல்லாம் ஆட்டுகின்றவன், தானும் ஆடிக்கொண்டேதான் ஆட்டு கின்றான் என்ற உண்மைகளை யெல்லாம் உள்ளடக்கிய அற்புத தத்துவ தரிசனத்தை அல்லவா அந்தச் சிலை உருவிலே காண்கிறோம் நாம். ஆதலால் நடராஜர் சந்நிதி முன்பு, பெரியவர் தூண்டுதல் இல்லாமலேயே என் கை குவிந்தது, தலை தாழ்ந்தது. இதை பெரியவர் பார்த்தார். 'பையன் பரவாயில்லை' என்று நினைத்துக் கொண்டார். பாடினார்.

**குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும், பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே**

அவர் பாடிய பாட்டை மெய்மறந்து நின்று கேட்டேன். அதன் பின் உண்மை விளங்கிற்று. மனிதப் பிறவி எடுத்த ஞானிகள் பக்தர்கள் எல்லாம் பிறவிப்

பெருங்கடல் நீந்தும் மார்க்கத்தைத்தானே தேடி அலைகிறார்கள். தாய் கருவில் வாழ் குழவி தாமெல்லாம் வேண்டுவது தூய பிறவாமையே என்றிருக்கும்போது இவர்மட்டும் 'மனித்தப் பிறவி வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று பெரும்போடு போடுகிறாரே என்று எண்ணினேன்.

ஆம். அந்த மனித்தப் பிறவிக்கும்தான் ஒரு நிபந்தனை போட்டு விடுகிறாரே. நடனராஜனைக் காணும் பேறு பெறுவோம் என்ற உறுதிமட்டும் இருந்தால், எத்தனை தரம் வேண்டுமானாலும் இந்த மனிதப் பிறவி எடுக்கலாம்தானே! மனிதப் பிறவியிலும் அது தமிழ் மனிதப் பிறவியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நடராஜனைக் காண்பதேது. அவன் அருளே கண்ணாகக் காணப் பெறுவதேது?

இப்படியெல்லாம் பெரியவருடன் கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்துவிட்டு இறைவனையும் கண்டு தரிசித்து வணங்கிவிட்டு வெளியில் வந்தபோது உள்ளத்திலே ஒரு உறுதி, உடலிலே ஒரு தெம்பு கண்டது. கோயில் வாசலிலேயே அவரை முந்திக்கொண்டு,

**நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்**
**ஏமாப்போம், பிணியறியோம், பணிவோமல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பமில்லை**

என்று நானே பாட ஆரம்பித்து விட்டேன். இன்பமே எந்நாளும், துன்பம் இல்லை என்றே எல்லா இடமும் எதிரொலி செய்ய ஆரம்பித்தன. நான் பாடுவதைக் கேட்ட பெரியவரும், "ஆம் தம்பி! அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை," என்று எனக்கு உற்சாகமூட்டினார், ஒரு தைரியத்தைக் கொடுத்தார். சரி, ஆசாமியை விட்டுவிடக் கூடாது, என்று அவர் காலைப்

பற்றிக் கொள்ள விரைந்தபோது ஆசாமி அந்தர்த்தியான மாகி விட்டார்.

இவையெல்லாம் சென்ற சப்தஸ்தான விழாவன்று திருவையாற்றை அடுத்த திருப்பூந்துருத்தியில், இன்று இடிந்து கிடக்கும், அப்பர் மடத்தில் அரைமணி நேரம் இருந்ததின் பலன். மாலைப் பொழுதில், மணற்பரப்பில் மல்லாந்து கிடந்தபோது சிறிது நேரம் கண்மூடியிருக்கிறது. கருத்து ஓடியிருக்கிறது எங்கெல்லாமோ - இப்படி அனுபவம் ஒரு நாள். ஒரு நாள் என்ன பல நாள் - வாழ்நாள் முழுவதும் பெறலாமே இப்படிப்பட்ட அனுபவத்தை.





அமரர். கலைமணி. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் தமிழ் கூறும் நல்லுலகுக்கு நன்கு அறிமுகமானவர். அவரது தமிழ்ப்பணியும் கலைப்பணியும் தமிழக வரலாற்றில் புகழ் அத்தியாயங்கள் என்று ஓர் அன்பர் சொன்னார். முற்றிலும் உண்மை. தஞ்சாவூரில் அவர் உருவாக்கிய கலைக்கூடமும், தமிழ்மக்களுக்கு அவர் விட்டுச் சென்றிருக்கும் நூல்களுமே அதற்குச் சான்றுகளாகும். குற்றால முனிவர். ரசிகமணி டி.கே.சி.யின் பிரதம சீடரான அவர் ஆக்கித் தந்துள்ள இலக்கியப் படைப்புகளும், கலைப் படைப்புகளும் தமிழுக்கும், கலையுலகுக்கும் கிடைத்த அரிய பொக்கிஷங்கள்.

## தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ஐ.ஏ.எஸ்.

ஆசிரியரது பிற நூல்கள்

1. வேங்கடம் முதல் குமரி வரை (ஐந்து பாகங்கள்)
2. வேங்கடத்துக்கு அப்பால்
3. இந்தியக் கலைச் செல்வம் (வானொலிக் கட்டுரைகள்)
4. கலைஞன் கண்ட கடவுள்
5. கல்லும் சொல்லாதோ கவி
6. அமர காதலர்
7. தென்றல் தந்த கவிதை
8. தென்னாட்டுக் கோயில்களும், தமிழர் பண்பாடும்
9. பிள்ளையார்பட்டிப் பிள்ளையார்
10. தமிழறிஞர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார்
11. ரசிகமணி டி.கே.சி.
12. மதுரை மீனாட்சி
13. இந்திய கலைச் செல்வம்